விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION MONEY TRANSFER உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 08 வெள்ளிக்கிழமை (23.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 004

## அரசியலமைப்பு போர்வையில் அரசின் பல தவறுகள் மறைப்பு

### ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற போர்வையில் நல்லாட்சி அரசாங்கம் தாம் செய்கின்ற பல தவறான விடங்களை மூடி முறைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக முன்னாள் அமைச்சரும் பேராசிரியருமான ஜீ.எல்.

23ஆம் பக்கம் பார்க்க....

## தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்!

### சவால்களை முடியடிப்போம் என்கிறது மக்கள் சக்தி



(கொழும்பு)

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் புதிய அரசியலமைப்பில் முழுமையான அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என நல்லாட்சி அரசாங்கம் ஆட்சி பீடம் ஏற்றுவதற்கு முழுமையான ஆதரவை வழங்கியிருந்த புரவெசி பலய எனப்படும் மக்கள் சக்தி அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் ஒருங்கிணை

23ஆம் பக்கம் பார்க்க....

# நல்லிணக்கத்திற்காக அதிகம் பாடுபடுங்கள்

## பதவிக்காலம் நிறைவடையும் தருணத்தில் பான் கீ மூன் - மைத்திரியிடம் தெரிவிப்பு!



(ஜெனிவா)

இலங்கை அடைந்துள்ள அரசியல் சமூக முன்னேற்றங்களை பாராட்டிய ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன், நாட்டில் இன நல்லிணக்கம் நீடித்து நிலைப்பதற்கான நல்லிணக்க முயற்சிகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் அர்ப்பணிப்புடன் அதிகமாக பாடுபட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

(23-ம் பக்.)

## மணல் கட்டணம் 100 வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

மணலுக்காக அறவிடப்படும் அரச ஆதாய உரிமைக் கட்டணத்தை 100 சதவீதம் அதிகரிப்பதற்கு புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்தக் கட்டண உயர்வு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுல் படுத்தப்படும் என்றும் அப்ப

23ஆம் பக்கம் பார்க்க....

## பங்கம் ஏற்படின் எதிர்ப்போம்!

(கொழும்பு)

நாட்டின் ஒற்றையாட்சிக்கு ஆபத்து ஏற்படும் விதத்திலோ, பௌத்த மதத்துக்கு அரசியலமைப்பில் வழங்கப்பட்டிருக்கும் அந்தஸ்தை குறைக்கும் வகையிலோ அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் ஜாதிக ஹெல உறுமய அதற்கு எதிராக வாக்களிக்கும் என ஜாதிக ஹெல உறுமய

23ஆம் பக்கம் பார்க்க....

## மனித பேரவலம்: சபையில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மத்திய கிழக்கு நாடான சிரியாவின் அலெப்போவில் இடம்பெற்று வரும் மனித பேரழிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் கொல்லப்பட்ட இலட்சக்கணக்கான மக்களுக்கு வடக்கு மாகாண சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வின் போது உறுப்பினர் சிவாஜிலிங்கத்

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு விவசாய அமைச்சில் 203 பதவி வெற்றிடங்கள்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய அமைச்சில் 203 பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாக தெரிவித்துள்ள வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், திணைக்களங்களினால் மேற்கொள்ளப்படும் வேலைகளை வினைத்திறனுடன் முன்னெடுத்து உரிய காலத்தில் விளைபயன் மிக்கதாக நிறைவுறச் செய்வதில் நிர்வாக ரீதியாக நாங்கள பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி அமைச்சின் 2017 ஆண்டுக்கான ஒதுக்கீட்டை வடக்கு மாகாண சபையில் நேற்று சமர்ப்பித்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரி

24ஆம் பக்கம் பார்க்க....

## சுகாதார, விவசாய அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீட்டிற்கு சபை அங்கீகாரம்

### கல்வி, மீன்பிடி அமைச்சு ஒதுக்கீடு இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாண சுகாதார அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு ஆகியவற்றின் 2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கு வடக்கு மாகாண சபை அங்கீகாரம் அளித்து நிறைவேற்றியுள்ளது. மாகாண விவசாய அமைச்சுக்கான மீண்டுவரும் செலவீனமாக ரூபாய 983.784 மில்லியனும், மூலதன செலவீனமாக ரூபாய் 289.5 மில்லியனும், சுகாதார சுதேச மருத்துவ அமைச்சிற்கு மீண்டுவரும் செலவீனமாக ரூபாய் 5267.45 மில்லியனும், மூலதன செலவீனமாக ரூபாய்786.5மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## மாவீரர் தினத்தை நினைவு கூர முடியும்

### ✷ அமைச்சர் வஜிர பூநகரியில் கருத்து



(பரந்தன்)

மாவீரர் தினத்தை நாட்டில் நினைவுகூர முடியும் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேயவர்த்தன தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச நீரியல் மாநாடு யாழில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் நீர்வளம் குறித்து ஆராய்வதற்கான சர்வதேச நீரியல் மாநாடு எதிர்வரும் தைமாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

நேற்று நடைபெற்ற வடக்கு விவசாய அமைச்சின் பாதீடு மீதான விவாதத்தின் போதே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## சமாதானம், மகிழ்ச்சி நிறைந்த சிறப்பான நத்தார் மலரட்டும்

### வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)



மானிட பரிணாம வளர்ச்சியில் மனிதன் பெற்ற சிறப்பு மிக்க வெற்றிகளில் மதம் சார்ந்த விடயம் முன்னிலையில் உள்ளது. மனிதர்களின மதம் சார்ந்த நம்பிக்கைகளே அவர்கள் பிறரிடத்தில் தயவு காட்டுவதற்கும் அவர்களது உரிமைகள் தொட

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஒருங்கிணைப்பு கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சரின் கோரிக்கைக்கு இணங்க இன்றைய தினம் நடைபெறவிருந்த யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மறு அறிவித்தல் வரும் வரை பிற்போடப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் பட்ஜெட் மீதான விவாதம் கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்று வருகின்றது. இந்த விவாதம் இன்றும் தொடரவுள்ள நிலையிலேயே கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் இணைத் தலைவர்களில் ஒருவராக உள்ளார். இந்நிலையில் இன்று நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபையின் பட்ஜெட் மீதான விவாதத்தில் முதலமைச்சர் கலந்து கொள்ள வேண்டியுள்ளது. இதனால் இன்றைய ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தான் கலந்து கொள்ள முடியாதுள்ளதால் வேறொரு தினத்திற்கு கூட்டத்தினை ஒத்தி வைக்குமாறு யாழ்.மாவட்ட அரச அதிபரை எழுத்துமூலம் முதலமைச்சர் பணித்திருந்தார். இந்நிலையில் மறு அறிவித்தல்வரை கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. (செ-4)

# வடக்கு மாகாண சபைக்கு முன்னால் க.நி. அதிபர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி வடக்கு மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் வடக்கு மாகாண சபையின் முன்னால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நேற்றைய தினம் முன்னெடுத்திருந்தனர். வடக்கின் பாதீடு மீதான விவாதம் நடைபெற்று வரும் நிலையிலேயே இந்த போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்திருந்தனர்.




நேற்றுக் காலை 9 மணியளவில் மாகாண சபையின் முன்பாக ஒன்று கூடிய அதிபர்கள் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். நாங்கள் வயதிலும் கூடியவர்களாக இருக்கின்றோம். தற்பொழுது அதிபர் தர பரீட்சையில் மிகவும் இளமையானவர்கள் சித்தியடைந்துள்ளனர். நாங்கள் பல வருடமாக அதிபர் சேவையை ஆற்றியிருக்கின்றோம். அத்துடன் நாங்கள் இன்று வரை பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாக கடமையாற்றி வருகின்றோம்.

இந்நிலையில் எங்களை அந்தப் பதவியிலிருந்து விலத்துவதை நாம் ஏற்க மாட்டோம் எனத் தெரிவித்தனர்.

குறித்த போராட்ட இடத்துக்கு காலையில் சென்ற வட மாகாண கல்வி அமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் அவர்களுடன் கலந்துரையாடினர்கள். இதன்போது உறுப்பினர் அனந்தி சசிதரன் தேநீர் இடைவேளையில் முதலமைச்சரினை சந்திப்பதற்கான ஏற்பாட்டினை செய்து தருவதாக கூறியதற்கமைய தேநீர் இடைவேளையின் போது முதலமைச்சரை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட கடமை நிறைவேற்று அதிபர்களின் பிரதிநிதிகளுக்கும் வட மாகாண முதலமைச்சருக்கும் சந்திப்பு ஒன்று பேரவை கட்டடத்தில் இடம்பெற்றது. இதில் கடமை நிறைவேற்று அதிபராக கடமையாற்றியோரின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்படும் என முதலமைச்சரினால் உறுதியளிக்கப்பட்டது. இந்த சந்திப்பில் முதலமைச்சர், கல்வி அமைச்சர் குருகுலராஜா, உறுப்பினர்களான அனந்தி, சிவாஜிலிங்கம், கஜதீபன் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

## அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலய அதிபர்களுக்கான செயலமா்வு எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இச் செயலமர்வில் 2017ஆம் ஆண்டிற்கான கருத்துரைகள், முன்வைப்புக்கள் வழங்கப்படவுள்ளதால் அதிபர்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(செ)

# வடக்கிலுள்ள 26 வைத்தியசாலைகளுக்கு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படவில்லை!

## வடக்கு சுகாதார அமைச்சர் சபையில் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் உள்ள 110 வைத்தியசாலைகளில் 26 வைத்தியசாலைகள் இன்னமும் ஒரு நிரந்தர வைத்தியர் ஒருவர் கூட இல்லாமல் இயங்கி கொண்டுள்ளன என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தகவல் தெரிவித்துள்ளார். மேலும் வடமாகாண சுகாதார திணைக்களத்தின் கீழ் 7 ஆயிரத்து 212 அனுமதிக்கப்பட்ட ஆளணிகள் காணப்படுகின்ற போதிலும் 5 ஆயிரத்து 814 உத்தியோகத்தர்களே கடமையாற்றி வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் வரவு செலவு திட்டத்தை நேற்றைய தினம் சபையில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் கீழ் மத்திய அரசுக்கு உட்பட்ட ஆயிரத்து 398 ஆளணிக்குரிய வெற்றிடங்கள் இன்னமும் நிரப்பப்படாமல் உள்ளன.

வடக்கில் உள்ள 26 வைத்தியசாலைகளில் இன்னமும் ஒரு நிரந்தர வைத்தியர் ஒருவர் கூட இல்லாத நிலையில்தான் இயங்கி வருகின்றன. இவற்றில் அநேகமான இடங்களில் மீள்குடியேற்றம் வேகமாக நடைபெற்று கொண்டுள்ளன. இவ் இடங்களில மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் , வைத்திய அதிகாரிகள் நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கும் மத்திய அரசினால் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

இலங்கை நிர்வாக சேவை தரத்தில் உள்ளோர்க்கும் பாரிய வெற்றிடம் காணப்படுகின்றது. அந்த வகையில் 23 அனுமதிக்கப்பட்ட ஆளணியில் 6 அதிகாரிகளே நிரந்தரமாக சேவையாற்றுகின்றனர். எனவே சுகாதார துறையின் வினைத்திறனான பங்களிப்புக்கு உடனடியாக இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு மத்திய அரசாங்கம் மூலம் ஆவன செய்யப்படும். வடக்கு மாகாணத்தில் உள்ள பெரிய வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணர்கள் மத்திய சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களின் வினைத்திறனான விசேட வைத்திய சேவைகளை பெற்றுக்கொள்வதற்கும் தாதிய உத்தியோகஸ்தர்கள், நிறைவுகாண் மருத்துவ சேவை உத்தியோகஸ்தர்கள் மற்றும் துணை மருத்துவ சேவை உத்தியோகஸ்தர்கள் ஆகியோரை நியமிப்பதற்கும் பொருத்தமான வைத்திய உபகரண வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் தெரிவித்தார். (செ-4)


கண்ணீர் அஞ்சலி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரியின் மூத்த பழைய மாணவனான **சச்சிதானந்தர் சிவானந்தன்**
**(ஓய்வுநிலை நில அளவையாளர்)**
நோர்வே நாட்டில் இறைபதம் எய்திய செய்தி கல்லூரிச் சமூகத்துக்கு எட்டியது. இவரது இழப்பு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு பேரிழப்பாக அமைந்துள்ளதுடன், எமது கல்லூரியின் பழைய மாணவர்களான சிவானந்தன் அவர்களும், அவரது மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர் அனைவரும் கல்லூரியின் வளர்ச்சிக்கும் பெரும் பங்கு ஆற்றியவர்கள் என்பதை நினைவு கொள்கிறோம்.
மேலும் அன்னாரின் பிரிவால் துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய் கல்லூரி குலத்தெய்வமான கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியை இறைஞ்சி நிற்கின்றோம்.



கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர்களும், கல்லூரிச் சமூகமும்
(சி-6831)





## பிரதமர் நேற்றும் திருப்பதியில் வழிபாடு

(சென்னை)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது பாரியாரும் திருப்பதி வெங்கடேஸ்வர ஆலயத்தில் நேற்றுமுன்தினமிரவும் நேற்றும் இரு முறை வழிபாட்டில் ஈடுபட்டனர்.

பிரதமருடன் அமைச்சர்களான டி.எம்.சுவாமிநாதன், பழனி திகாம்பரம் ஆகியோரும் ஆலய தரிசனத்தில் கலந்துகொண்டனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் சென்னை விமான நிலையத்தை வந்தடைந்ததும் அங்கிருந்து விசேட ஹெலிகப்டர் மூலம் ரேணிகுண்டா விமானநிலையத்தை சென்றடைந்து கார் மூலம் திருமலைக்கு சென்றனர்.

ஆலயத்திற்கு வருகைதந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் அவரது பாரியாரையும் தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் சதலவாடா கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார்.

ஏழுமலையானை தரிசனம் செய்தபோது இவர்களுக்கு கோவில் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் ஏழுமலையானை தரிசனம் செய்த பின்னர் திருமலையில் தங்கியிருந்த பிரதமர் மீண்டும் நேற்று காலை 5 மணியளவில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.(செ-11)

# புதிய அரசியல் யாப்பினால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லை

## ஜனாதிபதி மைத்திரி உறுதியளிப்பு

**புதிய அரசியல் யாப்பினால் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு எந்தவொரு அச்சுறுத்தலும் ஏற்படாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னாள் இராணுவத்தினரிடம் உறுதியளித்துள்ளார்.**



ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான தேசிய படைவீரர் கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடத்திய கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது படைவீரர்களுக்கான உரிமைகள் மற்றும் அவர்களின குறை நிறைகள் தொடர்பில் ஆராயப்பட்டன. இதன் போதுபடையினருக்குத்தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் புதிதாக தயாரிக்கப்பட்டுவரும் அரசியல் யாப்பின் ஊடாக நாட்டை பிளவுபடுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தரப்பு தெரிவித்துவரும் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. இதற்கு பதிலளித்த ஜனாதிபதி நாட்டை பிளவுபடுத்தவோ, நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்படுத்தும் வகையிலோ எந்த வித சரத்துக்களும் புதிய யாப்பில் உள்ளடக்கப்பட மாட்டாது என்று உறுதியளித்தார்.

அத்துடன் குழப்பும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பொய்ப்பிரசாரங்களுக்கு துணைபோகக் கூடாது என்றும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார். (இ-3)

## புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் தேசிய அரசாங்கத்துக்குள் பிளவு



புதிய அரசியலமைப்பு தொடர்பில் அரசாங்கத்துக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியல் அமைப்பு குறித்து ஐக்கிய தேசிய கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு நிலைப்பாட்டை முன்வைப்பதுடன், ஸ்ரீலங்கா சுந்திரக் கட்சி வேறு நிலைப்பாட்டைத் தெரிவிக்கின்றது.

ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுந்திரக் கட்சி ஆகியன இணைந்து தேசிய அரசாங்கத்தை நிறுவியிருக்கும் போது இரண்டு கட்சிகளுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமல்ல. இது ஜனநாயக செயற்பாடும் அல்லவென தெரிவித்தார். (இ-3)

## அசிங்கம்



தபால் பெட்டிக்குள் வெற்றிலையைத்துப்பி தபால்களை சேதமாக்கிய விசமத்தனமான செயல் நெல்லியடியில் இடம்பெற்றுள்ளது.

நெல்லியடி பேருந்து தரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் உள்ள தபால் பெட்டியில் உள்ள தபால்கள் இரண்டு நாட்களாக ஊழியர்கள் மேற்கொண்ட பகிஸ்கரிப் பால் எடுக்கப்படவில்லை. நேற்றுக் காலையில் ஊழியர்கள் தபால் எடுக்க வந்த போதே இச்சம்பவம் தெரிய வந்தது இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது (இ-6)

## பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை

அரை சொகுசு பேருந்துகளுக்கு சமமான வசதிகளை கொண்ட குறுகிய சேவை பேருந்துகளிலும் அரைசொகுசு பயணங்களுக்கான கட்டணத்தை அறவிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை தனியார் போக்குவரத்து பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த யோசனையை நேற்று முன்தினம் போக்குவரத்து அமைச்சில் ஒப்படைத்ததாகவும், அதற்கான அனுமதி கிடைத்தாலும், கிடைக்கவில்லை என்றாலும், கட்டணம் அறவிடப்படும் என அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையினுள் அரை சொகுசு பேருந்து சேவை என்ற பெயரில் 500 பேருந்துகள் பயணிப்பதாகவும், அந்த பேருந்துகள் பயண கட்டணங்களுக்காக அதிகளவில் பணம் அறவிடுவதாக அவர தெரிவித்தார்.

எனினும் அரை சொகுசு என கூறப்படும் பேருந்துகளில் காணப்படும் வசதிகள் குறுகிய பயண சேவைகளிலும் 75 வீதம் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

## யாழ். ஒருங்கிணைப்புக்கூட்டம் இரத்து

(யாழ்ப்பாணம்)

இன்று (23.12.2016) காலை 9 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவிருந்த யாழ். மாவட்டத்திற்கான 4ஆவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது தவிர்க்கமுடியாத காரணத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார் (இ)

## இலங்கையை வறுமையிலிருந்து விடுவிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதி தலைமையில்

இலங்கையை வறுமையிலிருந்து விடுவிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலோபாய அணுகுமுறைகள்தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

2030ஆம் ஆண்டளவில் வறுமை நிலையற்ற இலங்கையை கட்டியெழுப்பும் நோக்குடன் உலகளாவிய பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு 2017ஆம் ஆண்டிலிருந்து பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இச் செயற்றிட்டங்கள் குறித்த நீண்ட கலந்துரையாடலும் இதன்போது இடம்பெற்றது.

இது தொடர்பாக குறுகிய கால செயற்றிட்டங்களை அமுல்படுத்துதல் மிகவும் உசிதமானது எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நிறுவன மட்டத்தில் ஜனவரி முதல் வாரத்திலிருந்து சகல நிறுவனங்களும் தமது பொறுப்புக்களை வினைத்திறனான முறையில் நிறைவேற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வறுமை காரணமாக ஏற்பட்டுள்ள சிக்கல்கள், அவற்றை தீர்ப்பதற்கான வழிவகைகள் மற்றும் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர்களான சரத் அமுனுகம, சஜித் பிரேமதாஸ ஆகியோரும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன் உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். (இ-3)

## நளினி தொடர்ந்த வழக்கு ஜனவரி 9-ற்கு ஒத்திவைப்பு



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து விடுதலை செய்யக்கோரி நளினி தொடர்ந்த வழக்கு விசாரணை ஜனவரி 9ஆம் திகதிக்கு சென்னை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் நளினி அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், 25 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருக்கும் தன்னை விடுதலை செய்யக்கோரி நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார். அதில், அரசியலமைப்பு சட்டம் 101ஐ பயன்படுத்தி தன்னை விடுதலை செய்ய வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, நளினி மனு தொடர்பாக தமிழக அரசு பதிலளிக்க அவகாசம் அளித்ததையடுத்து, வழக்கின் விசாரணையை ஜனவரி 9ஆம் திகதிக்கு உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது. (இ-3)


கடமை நிறைவேற்று அதிபர்களை

# வேறு எந்த மாகாணமும் நீக்காத போது வட மாகாணம் நீக்க நினைப்பது எதற்காக?

## முதலமைச்சருக்கு கடமை நிறைவேற்று அதிபர் சங்கம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

அதிபர் சேவை பிரமாண குறிப்பு வெளிவந்த திகதி அல்லது நடைபெற்று முடிந்த போட்டி பரீட்சை நடந்த திகதி அல்லது அதிபர் சேவை பரீட்சைக்கு விண்ணப்பம் கோரிய திகதி ஆகிய இவற்றில் ஏதாவது ஒன்றுக்கு முன்னர் கடமையேற்ற அனைத்து கடமை நிறைவேற்று அதிபர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண கடமை நிறைவேற்று அதிபர் சங்கத்தினர் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர் நியமனம் தொடர்பான தமது பிரச்சினைகளை முன் வைத்து நேற்றைய தினம் வடக்கு மாகாண சபை முன்பு கவனயீர்ப்பு போராட்டமொன்றை நடத்தியிருந்தனர். இதன்போது தமது பிரச்சினைகள் தொடர்பாகவும் அதற்கான தீர்வு கோரியும் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு வழங்கப்பட்ட மகஜரிலேயே மேற் கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது. அம் மகஜரில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

எமது வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் ஏற்பட்ட போது அவ் வெற்றிடங்களை நிறைவேற்றுவதற்காக கடமை நிறைவேற்று அதிபர்கள் நியமிக்கப்பட்டு பாடசாலை செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. வழமையில் கடமை நிறைவேற்று அதிபர்கள் சேவை மூப்பின் அடிப்படையில் காலங் காலமாக நிரந்தர சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டு பதவி உயர்வு வழங்கப்படுவது இதுவரை கால மும் வழமையாக இடம்பெற்று வருகின்றது.



ஆனால் தற்போது நடைமுறைப படுத்தப்பட்டுள்ள அதிபர் சேவை பிரமாண குறிப்புக்கு அமைய போட்டி பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு புதிய அதிபர் சேவை நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் இதுவரை காலமும் கடமை நிறைவேற்று அதிபர்களாக கடமையாற்றிய அதிபர்கள் வெளியேற்றப்படும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களில் ஏழு மாகாணங்களில் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் புதிய அதிபர்களுக்கு வெற்றிடமாகவுள்ள பாடசாலைகளில் பிரதி அதிபர் உதவி அதிபர் பதவிகள் வழங்கப்பட்டு அப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

எனினும் வடக்கு மாகாணத்தில் மட்டும் கடமை நிறைவேற்று அதிபர்களை நீக்க எடுக்கும் முயற்சி மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். இதுவரை காலமும் அதிபராக கடமையாற்றுபவர்கள் மீண்டும் ஆசிரியராக செல்ல முடியாது என்பதையும் புதிய அதிபர்களுக்கு வெற்றிடமாகவுள்ள பாடசாலைகளில் அதிபராகவும் ஏனையோரை பிரதி அதிபராகவும் உப அதிபராகவும் நியமித்து இரு சாராருக்கும் பாதிப்பில்லாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் எதிர்காலத்தில் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு மத்திய அரசினூடாக நிரந்தர அதிபர் சேவைக்குள் உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் வட மாகாணம் மட்டும் பிழையான முடிவை எடுத்திருப்பதை மாற்றி கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் புதிய நியமனங்களை வழங்குமாறு தங்களையும் தங்கள் சபை சார்பானவர்களையும் கேட்டுக் கொள்கின்றோம். இதே வேளை சில மாதங்களுக்கு முன்பு மாகாண சபையில் கடமை நிறைவேற்றும் அதிபர்களுக்கு பாதிப்பில்லாமல் புதிய அதிபர் நியமனம் செய்வது என தீர்மானிக்கப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தது.

அத்துடன் எமது கடமை நிறைவேற்று அதிபர்கள் நியமனம் யாவும் முறையாக விண்ணப்பம் கோரி வழங்கப்பட்டிருந்தது.

எனவே எம்மை ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள், பரீட்சை எழுதாமல் விட்டவர்கள் என்ற நிபந்தனையை மாற்றி அனைத்து கடமை நிறைவேற்று அதிபர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் இதில் ஏதாவது நிபந்தனைகளை விதிப்பதாயின் அதிபர் சேவை பிரமாண குறிப்பு வெளிவந்த திகதி அல்லது போட்டி பரீட்சை நடந்த திகதி அல்லது அதிபர் சேவை பரீட்சைக்கு விண்ணப்பம் கோரிய திகதி ஆகிய இவற்றில் ஏதாவது ஒன்றுக்கு முன்னர் கடமையேற்ற அனைத்து கடமை நிறைவேற்று அதிபர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம். இவ் வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் மகஜரானது வட மாகாண கல்வியமைச்சர் ஏனைய அமைச்சர்கள், வடமாகாண எதிர்க்கட்சி தலைவர், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர், வட மாகாண கல்வி பணிப்பாளர் மற்றும் தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் ஆகியோருக்கும் பிரதியிடப்பட்டுள்ளது. (செ-4)

## வயதானாலும் சிங்கம் சிங்கம்தான்



நியூசிலாந்தில் நடக்கும் சுப்பர் ஸ்மாஷ் ரி20 போட்டியில் ஜெயவர்த்தனவின் அதிரடி சதம் உலக ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான ஜெயவர்த்தன சுப்பர் ஸ்மாஷ் ரி20 போட்டியில் சென்ரல் டிஸ்ரிக்ஸ் அணிக்காக ஆடி வருகிறார்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற போட்டியில் சென்ரல் டிஸ்ரிக்ஸ் அணி, ஒடாகோ அணியை எதிர்கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஒடாகோ அணி அதிரடியாக விளையாடி 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 249 ஓட்டங்கள் சேர்த்தது.

அந்த அணியின் தலைவர் ருதர்போர்ட் 50 பந்துகளில் 9 பவுண்டரிகள் 8 சிக்ஸர்கள் என 106 ஓட்டங்கள் சேர்த்தார். நெய்ல் பிறோம் (42), அன்ரூ கிட்சன் (54) ஆகியோரும் ஓட்டங்கள் குவித்தனர்.

இந்நிலையில் 250 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என களமிறங்கிய சென்ரல் டிஸ்ரிக்ஸ் அதிரடி ஆட்டத்தை தொடர்ந்தது.

தொடக்க வீரர் ஜோர்ஜ் வொர்கர் (35) விரைவில் ஆட்டமிழந்தாலும் அடுத்து வந்த ஜெயவர்த்தன ருத்ரதாண்டவம் ஆடினார். அவர் 56 பந்துகளில் 12 பவுண்டரி, 7 சிக்ஸர்கள் என 116 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ரொம் பூஷரூசும் அதிரடி காட்டினார். இருப்பினும் கடைசி நேர வீரர்கள் சரியாக ஆடாததால் சென்ரல் டிஸ்ரிக்ஸ் அணியால 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 248 ஓட்டங்களே சேர்க்க முடிந்தது.

இதனால் அந்த அணி ஒரு ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. ரொம் புரூஸ் 3 பவுண்டரி, 6 சிக்சர்களுடன் 61 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பரபரப்பான இந்த ஆட்டம் கிரிக்கெட் ரசிகர்களுக்கு நல்லவொரு விருந்தாக அமைந்தது. (க)

பிக் பாஷ் லீக் ரி20

## சிட்னி தண்டரை வீழ்த்தியது மெல்போர்ன் ரெனேகட்ஸ்



அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் பிக் பாஷ் லீக் தொடரில் சிட்னி தண்டர் அணியை 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது மெல்போர்ன் ரெனேகட்ஸ்.

இந்தியாவில் ஐ.பி.எல் தொடர்போல அவுஸ்திரேலியாவில் பிக் பாஷ் லீக் தொடர் பிரபலம் வாய்ந்தது.

2016-17க்கான தொடர் கடந்த 20ஆம் திகதி தொடங்கியது. இத்தொடரின் நேற்றைய 3ஆவது லீக் போட்டியில் மெல்போர்ன் ரெனேகட்ஸ் - சிட்னி தண்டர் அணிகள் மெல்போர்ன் மைதானத்தில் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வென்ற சிட்னி தண்டர் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்கள் குவித்தது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணியின் ரி20 வீரரான ஆரோன் பின்ஞ் 37 பந்துகளில் 3 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 63 ஓட்டங்கள் குவித்தார். பெர்குசன் 38 ஓட்டங்கள் சேர்த்தார்.

180 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சிட்னி தண்டர் களம் இறங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர் கிப்சன் (39), அணித் தலைவர் ரோஹர் (30) மற்றும் கம்மின்ஸ் (37) ஆகியோரைத் தவிர மற்றைய வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டங்களில் ஆட்டமிழக்க 19.1 ஓவர்களில் 131 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனால் மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக மெல்போர்ன் ரெனேகேட்ஸ் அணியின் ஆரோன் பின்ஞ் தெரிவானார். (க)

## சிறந்த வீரர் அஸ்வின்: ஐ.சி.சி கௌரவம்

ஐ.சி.சி.,யின் இந்த ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட் மற்றும் கிரிக்கெட் வீரருக்கான விருதுக்கு இந்திய சுழற்பந்துவீச்சாளர் அஷ்வின் தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) சார்பில், போட்டிகளில் சிறந்து விளங்கும் நட்சத்திரங்களுக்கு ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். இதன்படி, கடந்த 2015 செப்ரெம்பர் முதல் இந்த ஆண்டு செப்ரெம்பர் வரை வீரர்களின் செயற்பாடுகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த காலகட்டத்தில் மொத்தம் 8 டெஸ்டில் விளையாடியுள்ள இந்திய 'சுழல்' வீரர் அஷ்வின் 48 விக்கெட்டுக்களுடன் 336 ஓட்டங்கள் குவித்துள்ளார். தவிர, 19 ரி20 போட்டியில் விளையாடி 27 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார். இதன் மூலம், இந்த ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் விருதை அஷ்வின் வென்றார். இந்த விருதை சச்சின், டிராவிடடுக்குப் பின் பெறும் 3ஆவது இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார்.

அதிவேக '200'

இதைப்போல டெஸ்ட் அரங்கில் அஷ்வின் அசத்தினார். கடந்த 2016ல் மட்டும் 12 டெஸ்டில் விளையாடி 72 விக்கெட் கைப்பற்றினார். தவிர, அதிவேகமாக 200 டெஸ்ட் விக்கெட்டுக்கள் வீழ்த்திய 2ஆவது பந்துவீச்சாளர் என்ற சாதனையை படைத்தார். இதை கௌரவிக்கும் விதமாக, டெஸ்ட் போட்டியில் சிறந்த வீரர் விருதையும் அஷ்வின் கைப்பற்றினார்.

அணித் தலைவராக ஹோலி

தென்னாபிரிக்காவின் குயின்ரன் டி ஹொக் சிறந்த ஒரு நாள் வீரர் விருதை வென்றார். 'ரி20' வீரர் விருது மே.தீவுகளின் காரலோஸ் பிராத்வைட்டுக்கு வழங்கப்பட உள்ளது. சிறந்த ஒரு நாள் மற்றும் ரி20 வீராங்கனைக்கான விருதை நியூசிலாந்தின் சுஜி பேட்ஸ் வென்றார். சிறந்த ஒரு நாள் அணிக்கான கப்டனாக இந்தியாவின் விராட் ஹோலி அறிவிக்கப்பட்டு உள்ளார். ஆனால், சிறந்த டெஸ்ட் அணியில் இவருக்கு இடம் தராதது வியப்பாக உள்ளது. (க)

# இந்திய மீனவர்கள் 17பேர் நேற்று அதிகாலை கைது!



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறிய வகையில் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 17 பேரை இலங்கை கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர். குறித்த 17 மீனவர்களும் யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்புக்கு அண்மித்த கடல் பகுதியில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட போதே கைது செய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் இந்தியாவின் தமிழ்நாடு இராமநாதபுரம்(12பேர்) மற்றும் ஜகதாபட்டிணத்தை (5பேர்) சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தொடர்பான பதிவுகளை கடற்படையினர் மேற்கொண்டதையடுத்து அவர்களை யாழ். கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்க ப்பட்டிருந்தனர்.

அதனை தொடர்ந்து அவர்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினர் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# நாவலர் விழா நாளை

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கமும் கரிக ணன் நிறுவனமும் இணைந்து நடத்தும் நாவலர் விழா நாளை 24ஆம் திகதி சனிக் கிழமை காலை 9மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர் க்கா தேவி மணிமண்டபத்தில் இடம்பெறும். யாழ்ப்பாண தமிழ்ச் சங்க பொதுச் செயலா ளரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபருமான ச.லலீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் தொடக்கவுரையினை யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், "நாவலரின் தொலைநோக்கு" எனும் பொருளில் ஆய்வரங்கத் தலைவர் உரையினை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை ஓய்வு நிலைப் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் ஆகியோரும் வழங்கவுள்ளனர். தொடர்ந்து இந்நிகழ்வில் ஆய்வுரைகள் இடம் பெறும்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முது நிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தொகுப்புரையினை நிகழ்த் துவார். தொடர்ந்து "நாவலரின் தொலை நோக்கு" எனும் ஆய்வுரைத் தொகுப்பு நூல் வெளியீடு இடம்பெறும். வெளியீட்டுரையினை இந்துசமயப் பேரவைத்தலைவரும் யாழ். பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியருமான சி.க.சிற்றம்பலம் வழங்குவார்.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டின் முதற்பிர தியை சைவ மகாசபை பொதுச் செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் பெற்றுக் கொள்வதுடன் இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் பாடசாலைகளுக்கு நாவலர் திருவுருவச் சிலைகளை அன்பளிப்புச் செய்வார். தொடர்ந்து ஸ்ரீமதி ஷாலினி வாகீஸ்வர சர்மாவின் (கொழும்பு) நாட்டிய அளிக்கை, பரத நாட்டிய நிகழ்ச்சி என்பன இடம்பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-3)

# துவிச்சக்கரவண்டிகளை ஆதாரம் காட்டிப்பெறவும்



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ள துவிச்சக்கரவண்டிகளின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ. பிரியந்த அறிவித்துள்ளார்.

பல்வேறு சம்பவங்களில் கைப்பற்றப்பட்ட 150 இற்கு மேற்பட்ட துவிச்சக்கரவண்டிகள் நெல்லியடிப் பொலிஸில் உள்ளன.

அவற்றின் உரிமையாளர்கள் யாராவது இருந்தால் அவற்றை பார்வையிட்டு தகுந்த ஆதாரத்தைக் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் நிற்குமானால் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் எனப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.(இ-60)

ENGLISH HALL
(பெருமாள் கோவிலடி)
G.C.E O/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான
Basic English with Grammer
புதிய பிரிவு:- ஆரம்பம் :-24.12.2016 சனிக்கிழமை 4 pm
Tutar :-பி.என்.சுதர்ஷன்
பதிவுகளுக்கு :-0773144527

## அறிவித்தல்

பூநகரி பிரதேச சபையின் 2017 ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட வரைவு அறிக்கை 16.12.2016 தொடக்கம் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையை பிரதேச சபையின் சக அலுவலகங்களிலும் பார்வையிடலாம்.

செயலாளர்,
பிரதேச சபை, பூநகரி

## நினைவுகளைக் கையளித்தல்





முதறிஞர், அமரர்,
'சிற்பி' சிவசரவணபவன்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுப்பகிர்வும் நூல் வெளியீடும்

காலம் : சனிக்கிழமை, பி.ப 3.00 மணி

இடம் : இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி, நீராவியடி





தலைமை

செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(7124)

## கண்ணீர் அஞ்சலி



செல்வி. வர்ணிஜா கிருஸ்ணகுமார்

எமது கல்லூரியின் வர்த்தகப்பிரிவு (2018-12K) வில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவி -வர்ணியா கிருஸ்ணகுமார் அவர்கள் 2016.12.21 அன்று அகாலமரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## இராசி பலன்

23.12.2016
(மார்கழி 08, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
தசமி பின்னிரவு 3.25 மணிவரை
சித்திரை பின்னிரவு 12.21 மணிவரை
சுபநேரம் 6.25-7.55 மணிவரை
இராகுகாலம் 10.55-12.25 மணிவரை

வாசவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது செவ் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்திரட்டாதி, ரேவதி<br>பகல் 11 மணிக்கு<br>துலா-சந் | | |
| சுக் | | | ராகு |
| சூரி | சனி புத | சந் | குரு |

**மீனம்:** வரவும், செலவும் சமமாகும் நாள், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மேடம்:** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்:** தொழில், வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் சந்தோசங்களும் சுகங்களும் ஏற்படலாம், கௌரவமான நாள்.

**மிதுனம்:** நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், மாமன், மைத்துனர் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** முன்னேற்றம் பெற முயற்சி எடுப்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, நண்பர்களால் நன்மைகள் இடம்பெறலாம்.

**மகரம்:** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும், ஆடம்பரப் பொருட்கள் மீது அதிக ஆர்வம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**சிம்மம்:** கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆரோக்கியமான நாள்.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:** பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்:** திட்டமிடப்படாத காரியமொன்று நிறைவேறலாம், உறவினர்கள் தொடர்பான சில காரியங்களுக்காக சற்று அலைய நேரிடலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு.

# போதைப்பொருள் கடத்தல்,வர்த்தகம் இலங்கைக்கு புதிய அச்சுறுத்தல்

## யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தல் வர்த்தகம் தொடர்பில் தற்போதும் புதியதொரு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அத்தகைய அச்சுறுத்தலை அனைவரும் ஒன்றிணைந்தே இல்லாமல் செய்ய வேண்டும் எனவும் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் காலை காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களில் அதிகமான போதைப் பொருள் கடத்தல் முறியடிப்புக்களை மேற்கொண்ட பொலிஸாருக்கும் அதிகளவான குற்றங்களை கட்டுப்படுத்த உதவிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் பரிசளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதி பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்நிலையில் அவர் மேலும் தெரிவிக்கையில், வட மாகாணத்தில் கேரள கஞ்சா கடத்தல் நடவடிக்கையானது அதிகளவாக இடம்பெறுகின்ற பகுதியாக காங்கேசன்துறை பகுதியே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இப் பகுதியில் திறமையாக கடமையாற்றுகின்ற பொலிஸார் இக் கடத்தல் முயற்சிகளை பெரும்பாலும் முறியடித்து விடுகின்றார்கள்.

இது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இத்தகைய கஞ்சா பாவனையானது இந்தியாவில் இருந்து கடல்மார்க்கமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு இங்கே விற்கப்படுகின்றது. இவற்றினூடாக அதிகளவான இளைஞர்கள் அடிமையாகியுள்ளார்கள். இவற்றைவிட தற்போது இலங்கை மேலும் பாரிய போதைப் பொருள் கடத்தலுக்குள் சிக்கியுள்ள அபாயத்தை அடைந்துள்ளது. அதாவது கொக்கேய்ன் போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கையானது இலங்கைக்கு ஊடாக அதிகரித்துள்ளது.

இருந்த போதிலும் அக் கடத்தல் முயற்சிகளும் முறியடிக்கப்பட்டுள்ளன. இக் கொக்கேய்னானது கேரள கஞ்சாவினை விடவும் அதிக மடங்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாகும்.

அத்துடன் இக் கொக்கேய்னானது வடக்கு மாகாணத்திற்கும் பரவிடக்கூடிய சாதகமான நிலைமையை நாம் ஏற்படுத்தாத வகையில் செயற்பட வேண்டும்.

அவ்வாறு செயற்படுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

மேலும் தற்போது அதிகளவான போதைப்பொருள் கடத்தல்களை முறியடித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற சன்மானமும் கௌரவமும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களையும் இவர்கள் போன்று செயற்பட வேண்டும் என்ற எண்ணப்பாட்டை தூண்டுவதற்காகவே எனவும் அவர் தெரிவித்தார். (இ-4)







படங்கள்: உ.சாளின்

## திருவாசக முற்றோதல்


(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு பெரிய புலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் (முடிப் பிள்ளையார்) பரிபாலன சபை ஆதரவுடனும் அறநெறிப் பாடசாலை பங்கு பற்றலுடனும் இன்று காலை 7 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் இடம்பெறும். பிள்ளையார் கதை படிப்புடன் இடம் பெறும் இந் நிகழ்வில் க. குணசிங்கம், ப.பாலசுப்பிரமணியம், கலாபூஷணம் தெய்வத்தமிழ்சுடர் கே. இராசையா ஸ்ரீதரன் ஆகியோர் பங்கு கொள்கின்றனர். (இ

## கரவெட்டியில் கலாசார விழா

கரவெட்டிப் பிரதேச செயலக கலாசார விழா மற்றும் திருவுடையாள்-06 வெளியீடு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு மூத்த விநாயகர் ஆலயத் திருமண மண்டபத்தில் இடம் பெறும். கரவெட்டிப் பிரதேச செயலர் ச. சிவஸ்ரீ தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர். எம்.ஏ.சுமந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், கரவெட்டிகோட்டக் கல்வி அதிகாரி க. யோகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-60)

## டெங்கு ஒழிப்பு தீவிரம்



டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எல்லைக் குட்பட்ட பகுதிகளில் தீவிரமாக நடைபெற்று வருகிறது. சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் இணைந்து இவ் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் அண்மையில் ஈடுபட்டனர். (இ-60)

## வடமராட்சிக் கிழக்கில் பல இடங்களில் சுனாமியால் பலியானோருக்கு அஞ்சலி

சுனாமி ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்ட உறவுகளின் பன்னிரண்டாம் ஆண்டு நினைவுதினம் வடமராட்சிக் கிழக்கில் நடைபெறவுள்ளது.

2014 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26 ஆம் திகதி ஆசிய நாடுகளை உலுக்கிய சுனாமி ஆழிப்பேரலையினால் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. சுனாமி பேரழிவு ஏற்பட்டு பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதனை ஒட்டி மணற் காடு தேவாலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் அங்குள்ள பொது நினைவாலயத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டதன் பின்னர் 72 பேரின் உடல்களை புதைத்த சுவக்காலப்பிட்டியில் உறவுகள் அஞ்சலி செலுத்துவர். புலோலி சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலிவழிபாடுகள் நடைபெறும். பின்னர் அங்குள்ள சேமக் காலையில் உடல்கள் புதைக்கப்பட்ட இடத்தில் உறவுகள் அஞ்சலி செய்வர். இதேபோன்று உடுத்துறை யில் இருநூறுக்கு மேற்பட்டோரை ஒன்றாக புதைத்த இடத்தில் உறவுகள் அஞ்சலி செலுத்துவர். மேலும் கட்டைக்காடு தாழை யடி செம்பியன்பற்று போன்ற இடங்களில் உறவுகளை புதைத்த இடத்தில் அவர்களின் உறவினர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்துவர். (இ-60)



## சுனாமி நினைவாலய வளைவு திறப்பு




யாழ். வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் அமைந்துள்ள சுனாமி நினைவாலயத்துக்கான முன் வளைவு அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இவ் வளைவுக்கான நிதியினை 2016 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டின் மூலம் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஒதுக்கீடு செய்து இவ் வளைவு அமைக்கப்பட்டுள்ளது.

வளைவு திறப்பு காலை 7.30 மணியளவில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், ஜே/431 கிராம அலுவலர் தவராசா, பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (இ-60-64)

# மைத்திரி–ரணில் திடீர் முடிவு! கலக்கத்தில் அமைச்சர்கள்

எதிர்வரும் மாத ஆரம்பத்தில் அமைச்சரவையில் திருத்தம் மேற்கொள்வதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் அண்மையில் கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளதாக அரசாங்க தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சுக்கள் பலவற்றின் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு இடையில் காணப்படுகின்ற அதிகார போராட்டத்தை நிறைவு செய்யும் வகையில் இந்த அமைச்சரவை திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பொது மக்களிடம் இருந்து அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் சிலருக்கு எதிராக கிடைத்துள்ள முறைப்பாடு தொடர்பில் அரச தலைவர்கள் இருவரும் கடுமையான அவதானத்தை செலுத்தியுள்ளனர்.

அது அமைச்சரவை உட்பட அரசாங்கத்தை நடத்தி செல்வதற்கு பாரிய தடையாக உள்ளதென்பது ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கருத்தாகும்.

புதிய அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை சமர்ப்பித்துக் கொள்ளுதல் போன்ற முக்கிய நடவடிக்கைகள் அடுத்த வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. அதற்கு வலுவாக முகம் கொடுக்கக் கூடிய வகையில் செயற்பட வேண்டிய முறை தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதி அமைச்சர்கள் இருவரும் இராஜாங்க அமைச்சர்கள் இருவரும் அமைச்சரவை அமைச்சர்கள் 4 பேரின் பதவிகளில் மாற்றம் செய்தல் மற்றும், இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு அமைச்சரவை அமைச்சர் பதவி வழங்குவது தொடர்பிலும் இரண்டு தலைவர்களும் அவதானம் செலுத்தியுள்ளனர். (இ-3)


## யாழ்ப்பாணப் பெட்டகம் நிழலுருக்கலைக்கூடம்

## இரு நூல்களின் வெளியீடு

யாழ்ப்பாணப் பெட்டகம்
"தொகுதி-1- ஆளுமைகள்"

யாழ்ப்பாணப் பெட்டகம்
"தொகுதி-2- வணக்கஸ்தலங்கள்"

2016.12.24
காலை 09.00 மணி

சரஸ்வதி மண்டபம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
சேர் பொன். இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவில் முன்பாக,
யாழ்ப்பாணம்.

தலைமை:
திருவாட்டி ஸ்ரீகாந்தலக்சுமி அருளானந்தம் அவர்கள்
(பிரதம நூலகர், யாழ். பல்கலைக்கழகம், ஆலோசகர், யாழ்ப்பாணப் பெட்டகம்)

பிரதம விருந்தினர்
திருவாளர் நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள்
அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.

கௌரவ விருந்தினர்
திருவாளர் ஆர்.என்.வசந்த் அவர்கள்
திரைப்பட இசையமைப்பாளர், தமிழ்நாடு , இந்தியா.

சிறப்பு விருந்தினர்கள்

திருவாட்டி வனஜா செல்வரட்ணம் அவர்கள்
பணிப்பாளர் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்.

திருவாளர் றஞ்சன் சிவஞானசுந்தரம் அவர்கள்
இயக்குநர் சபை உறுப்பினர், காவேரிக் கலாமன்றம்.

திருவாளர் தளையசிங்கம் ஜெயறஜீபன் அவர்கள்
நிறைவேற்றுப்பணிப்பாளர், அன்றா பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.

நூலின் சிறப்புப் பிரதிக்காக வழங்கும் நிதி இத் துறையில் மேலும் பல அறுவடைகளை வெளிக் கொணர்வதற்கு அடித்தளமாக அமையும்.

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

நூலின் விலை- 3500/- (இரு தொகுதிகளும்)



வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்



பாடசாலை விடுமுறை காலத்தை பயனுள்ளதாக்க
சமுதாய சீரமைப்பில் புதியதோர் களப்பணி
மனவளக்கலை யோக விசேட பயிற்சிகள்

'கற்பிதமும் நிதர்சனமும்'

மாணவர்கள் ஆத்மாக்குள் இருந்து ஆசிரியர்கள் வழிநடத்துகிறார்கள். வருபொருளாகக் கொண்டு வாழ்கிற கொடைத்தொழில் ஆசிரியர்பணி முதல் முன்மாதிரிகளாக இருக்கக்கூடிய ஆசிரியர்களின் உடல்நலம், உளநலம், வளமான வாழ்வு சிறப்பான நிலையில் இருக்கும் போது தான் கல்வியினூடான புதியதோர் சமூகமாற்றம் உருப்பெறும். புதிய சமூக உருமாற்றத்திற்காக...

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குமான விசேட பயிற்சிகள்

இடம்:- யாழ்.அறிவுத்திருக்கோவில்
காலம்:- 24.12.2016 தொடக்கம் 29.12.2016
நேரம்:- பி.ப 05.00மணி

வழங்கப்படும் பயிற்சிகள்

1.காயகல்ப பயிற்சிகள் 2.எளியமுறை உடற்பயிற்சிகள்
3.எளியமுறை தியானங்கள் 4.அகத்தாய்வு பயிற்சிகள்

தலைமை
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் (தலைவர், யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

பயிற்சி வழங்குபவர்
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி க.இந்திரா அவர்கள் (தமிழ்நாடு, இந்தியா)

அகத்தாய்வு-I
24.12.2016, 25.12.2016 சனி, ஞாயிறு தினங்களில் காலை 9மணி தொடக்கம் 01 மணிவரை நடைபெறும் இதில் P.D.C முடித்தவர்கள் பங்குபற்றலாம்.

அகத்தாய்வு-III
27.12.2016, 28.12.2016 செவ்வாய், புதன் தினங்களில் காலை 9மணி தொடக்கம் 01மணி வரை நடைபெறும். இதில் II ம் நிலை அகத்தாய்வு முடித்தவர்கள் பங்குபற்றலாம்.

குறிப்பு:-கடந்தவாரம் புங்குடுதீவு பாடசாலை மாணவர்கள் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். அதேவே நீங்களும் மனவளக்கலை யோகப் பயிற்சிகளைப் பயின்று பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். அறிவுத் திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்
T.P:- 021 222 2772

யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளை



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

| |
|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 43செவ் 1 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6652 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: B/6653 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 16 செவ் 7 இல்<br>உயரம்: 172cm<br>தகைமை/தொழில்:BSc, MSc, Mphil/ ஆசிரியர்<br>தொ.இ: B/6654 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர் லண்டன்<br>தொ.இ: B/6655 |

இவர்களுக்கு மணமகன் தேவை

| |
|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 30<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Diploma/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/2983 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 29 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: G/3009 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 57<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/3020 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 18<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/3027 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.



We Serve

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1
க.பொ.த (சா.த)-2016 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு

அண்மைக்காலமாக தமிழ்மொழி பேசும் மாணவர்கள் குறிப்பாக யாழ்ப்பாண மாணவர்கள் உயர்தரத்தில் விஞ்ஞான துறைக்கு செல்வது குறைந்து கொண்டே வருவது யாவரும் அறிந்ததே. இக்குறையைப் போக்கி விஞ்ஞான துறையை உயர் கல்வியில் தெரிவு செய்வதை ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாவட்டத்தில் முதல் கட்டமாக வடமராட்சி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கொன்றினை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் கருத்தாலோசனைகளுடன் சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1 நடாத்தவுள்ளது. இத்தகவல் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரூடாக பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பங்குபற்றி பயனடைய க.பொ.த (சா/த)-2016 மாணவர்களை அழைக்கின்றோம்.

இடம் :- நெல்லியடி மத்திய கல்லூரி பிரதான மண்டபம்
காலம் :- 24.12.2016 காலை 9.00 தொடக்கம் 12.30 வரை

WHERE THERE'S A NEED THERE'S A LION

தொடர்புகளுக்கு:-
லயன் க.கமலேஸ்வரன்
மாவட்ட இணைப்பாளர் (தொழில் வழிகாட்டலும் தொழில் வங்கியும்)
சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1
தொலைபேசி:-077 6047195
lionkamales@gmail.com

# சூடான தேநீர் வழங்கப்படவில்லையென இளைஞன் மீது சரமாரியாகத் தாக்குதல்

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியாவில்தமிழ்இளைஞனொருவரை தாக்கி தனியார் பேருந்தின் சாரதியும் நடத்துநரும் கடத்திச் சென்றதாக படுகாயமடைந்த இளைஞனின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக உறவினர்கள் மூலம் தெரிய வருவதாவது,

வவுனியா நகர பேருந்து நிலையத்தில் த.சுபராஜ் என்ற 26 வயது இளைஞன் ஒருவன் நடத்தி வரும் உணவகத்திற்கு கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சென்ற வவுனியா - கொழும்பு வழித்தடத்தில் பயணிக்கும் தனியார் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் உட்பட்ட பெரும்பான்மை இனத்தை சேர்ந்த சிலர் பிளேன் டீ கேட்டுள்ளனர்.

அங்கு வழங்கப்பட்ட பிளேன் டீ சூடாக இல்லை என இவ் இளைஞனுடன் வாய்த்தர்க்கப்பட்டு சென்ற அவர்கள் மறுநாள் புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் குறித்த இளைஞன் உணவகத்தில் தனியாக நிற்பதை அவதானித்து பேச வருமாறு குறித்த தனியார் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் அழைத்துள்ளனர்.

இந் நிலையில் சமரசம் செய்வதற்காக அழைப்பதாக நினைத்து சென்ற இளைஞன் மீது இரும்புக்கம்பியால் அங்கிருந்த சிலர் தாக்கி மயக்கமடையச்செய்துள்ளதுடன் இளைஞனை தமது பேருந்தில் தூக்கிப் போட்டு மதவாச்சி நோக்கி சென்றுள்ளனர்.

இந் நிலையில் குறித்த பகுதியில் பல பெரும்பான்மை இனத்தவர்கள் நின்ற போதிலும் கச்சான் விற்பனையில் ஈடுபடும் ஒருவர் குறித்த உணவகத்திற்கு வந்து நடந்த சம்பவத்தை கூறியுள்ளார். இதனையடுத்து கடையில் இருந்தவர்கள் குறித்த பகுதிக்கு சென்ற சமயம் தனியார் பேருந்து மதவாச்சி நோக்கி உள் மின் விளக்கை அணைத்து விட்டு செல்வதை அவதானித்து மோட்டார் சைக்கிளில் பின் சென்றுள்ளனர்.

இதனால் பின்தொடர்வதை அறிந்து உசாரடைந்த தனியார் பேருந்து சாரதியும் நடத்துநரும் குறித்த இளைஞனை ஈரப்பெரியகுளம் பகுதியில் போட்டுவிட்டு சென்றுள்ளனர்.

இதனையடுத்து இளைஞனை உறவினர்கள் வவுனியா அழைத்து வந்து வைத்தியசாலையில் சேர்ப்பித்த நிலையில் தற்போது அவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பில் உறவினர்கள், பெற்றோர் ஆகியோரினால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. (2-250)

# 31 கடமை நிறைவேற்று அதிபர்கள் பதவி முடிவுறுத்தப்பட்டு ஆசிரியர்களாக நியமனம்

கிளிநொச்சி கல்வி வலயத்தில்உள்ள104பாடசாலைகளில் 40 பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றுபவர்களில் 31 பேர் உடனடியாக பதவி முடிவுறுத்தப்பட்டு வேறு பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்படும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்டவர்கள்கவலைதெரிவித்துள்ளனர்.

இவர்கள் அதிபராகக் கடமையாற்றிய பாடசாலைகளுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து பாடசாலைகளின் தரத் திற்கேற்ப அதிபர் தரம் பெற்றவர்கள் கல்வி அமைச்சால்நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்நடவடிக்கையால் பல ஆண்டுகளாக கடமை நிறைவேற்று அதிபர்களாக பாடசாலைகளில் கடமையாற்றியவர்கள் மீண்டும் ஆசிரியர்களாக கடமையாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில்கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் அந்தந்தப் பாடசாலைகளின் தரத் திற்கேற்ப அதிபர் தரம் வழங்கப்பட்டு வந்து அதிபர் சேவைக்கு உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-84)

# தேவைகள் முன்வைக்கப்பட்டால் அடுத்தாண்டு நிறைவேற்றப்படும்

## உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பூநகரியில் தெரிவிப்பு

2012 ஆம் ஆண்டில் 120 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு நிதி போதாமையால் கட்டட வேலைகள் இடைநிறுத்தப்பட்டு 2015ஆம் ஆண்டு




மீண்டும் தற்போதைய அரசினால் மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் அமைக்கப்பட்டு இன்று (நேற்று) திறந்து வைக்கப்படுகின்றது என உள்நாட்டுஅலுவல்கள்அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

பூநகரி வாடியடி நகர்ப் பகுதியில் 750 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட பூநகரி பிரதேச செயலகத்திற்கான இருமாடிகளைக் கொண்ட கட்டடத்தொகுதி நேற்று காலை 9 மணியளவில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவினால் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அருமைநாயகம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

முன்னதாக அமைச்சர், அமைச்சின் அதிகாரிகள், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உட்பட கிளிநொச்சி மாவட்ட அதிகாரிகள் பலரும் அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து சகல மதங்களைச் சேர்ந்த குருமார்களினால் ஆசி வழங்கப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன் திறப்புவிழா இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அமைச்சர் உரையாற்றுகையில், 1948 இல் ஆரம்பிக்கப்பட்ட இச்செயலகம் இன்று வரை திருப்திகரமாக இயங்கவில்லை. பல காலம் தற்காலிக கொட்டில்களில் இயங்கிய போது இப் பகுதி மக்களும் அலுவலர்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

அதன்படி 2012 ஆம் ஆண்டில் 120 மில்லியன் ஒதுக்கப்பட்டு நிதி போதாமையினால் கட்டட வேலை இடைநிறுத்தப்பட்டு 2015இல் மீண்டும் எமது அரசால் நிதி ஒதுக்கப்பட்டு ஒரு பூரணமான கட்டடம் உங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காக திறந்து வைக்கப்படுகிறது.

இதன்மூலம் பூநகரி மக்களின் நீண்டகால விருப்பம் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. மேலும் என்னென்ன தேவைகள் காணப்படுகின்றதோ அவற்றை அரச அதிபர் ஊடாக எமக்கு முன்வைக்கப்பட்டால் அவையனைத்தையும் 2011இல் நிறைவேற்றுவோம் என்றார்.

அத்தோடு பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கு நியமனம் வழங்க முற்பட்ட போது பல தடைகள் ஏற்படுத்தப்பட்டன. நான் பரீட்சையில் சித்திஅடைந்தவர்களைஅழைத்து எனக்கெதிராக வழக்குத் தொடருமாறு கூறியதோடு அதற்குரிய பணத்தை நானே தருவேன் என குறிப்பிட்டேன்.

அவர்கள் வழக்குப் பதிவும் செய்து வெற்றியும் கண்டார்கள். இதுவே ஜனநாயகம் என்றார். சுதந்திர விழாவில் தமிழில் கீதம் பாடப்படுவதற்கு நான் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இணைந்தே முடிவு எடுத்தோம். அதற்கும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

ஆனால் சுதந்திர விழாவில் தமிழிலும் கீதம் பாடப்பட்டு ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டது. இதுவே இன ஒற்றுமை எனவும் குறிப்பிட்டார்.

நிகழ்வின் இறுதியில் சகல கிராம சேவை அலுவலர்களுக்கும் அலுவலகப் பைகளும் உத்தியோகச் சின்னங்களும் வழங்கப்பட்டன. (2-84)

# சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் நோக்கோடு பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது





(மல்லாவி)

ஒட்டுசுட்டானிலுள்ள 64 ஆவது இராணுவப்படைப் பிரிவின் ஏற்பாட்டில் பொது மக்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகள் நேற்று முற்பகல் 10 மணிக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி படைப்பிரிவின் ஏற்பாட்டில் சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் நோக்கோடு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் வளாகத்தில் வைத்து பயன்தரும் மரக்கன்றுகளான பலா, தென்னை போன்ற கன்றுகள் 64 ஆவது படைப் பிரிவின் இராணுவத் தளபதி பிரிகேடியர் பி.ஐ.பத்திரரத்தினாவினால் வழங்கி வைக்கப்பட்டு ஆலய வளாக சுற்றுச் சூழலிலும் மரக்கன்றுகள் வைபவரீதியாக நடப்பட்டுள்ளது.

இதற்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அனுருத்தனன் ஆலய பிரதம குருக்கள் கீர்த்திஸ்ரீவாசன், ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# உருத்திரபுரம் மேற்கு மக்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கல்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரம் மேற்கு, கிழக்கு, வடக்கு, சிவநகர் ஆகிய நான்கு கிராமங்களை உள்ளடக்கி இக்கிராம மக்களின் நலன்பேணும் வகையில் சமுதாய முன்னேற்ற நிறுவனம் என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் வீட்டுத்தோட்டமானியத் திட்டத்தின் கீழ் உருத்திரபுரம் மேற்கு, கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு ஒருவருக்கு தலா இரண்டு தென்னங் கன்றுகள் ஜெ.சத்தியேந்திரன் ஒத்துழைப்புடன் ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர் க.கணேசலிங்கத்தினால்அன்மையில் வழங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து இக்கிராமங்களிலுள்ள மக்களின் தேவைகள் இனங் காணப்பட்டு மேற்படி அமைப்பின்மூலம்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளமைகுறிப்பிடத்தக்கது (2-254)

# வரைவு அறிக்கை பார்வைக்கு...

பூநகரி பிரதேச சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட வரைவு அறிக்கை 16.12.2016 தொடக்கம் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையை பிரதேச சபையின் சகல அலுவலகங்களிலும் பார் வையிடலாம் என பூநகரி பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (2)

# ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட வீடொன்றில் பணம், நகை திருட்டு

வவுனியா - ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டம் அமையப்பெற்ற வீடொன்றில் பணம், நகை என்பன திருடப்பட்டுள்ளன. இச் சம்பவம் நேற்று அதிகாலை நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த வீடு சம்பவதினம் பூட்டியிருந்ததாகவும் வீட்டின் பின்பக்க கதவினை உடைத்து திருடர்கள் உள்நுழைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் வீட்டின் உரிமையாளர்கள் உறக்கத்திலிருந்த போது உரிமையாளரின் பணப்பையை எடுத்து அதிலிருந்த பணம் மற்றும் சாமி அறையிலுள்ள அலுமாரி திறப்பை எடுத்து திறந்து பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த நகை, 40 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இதேவேளை, நேற்று அதிகாலை 2.30 மணியளவில் வீட்டின் உரிமையாளரின் மனைவி தண்ணீர் குடிப்பதற்கு எழுந்து சென்ற போது வீட்டில் திருடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதையடுத்து ஓமந்தைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள பாரதி பெண்கள் சிறுவர் இல்லத்திற்கு சமையல் பாத்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம். (படம்: மல்லாவி செய்தியாளர்)

### 19 கோடியே 48 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் நிதி

# உரமானியக் கொடுப்பனவாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பு



## முல்லை.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள் உதவி ஆணையாளர் பிரிவுக்குட்பட்ட பத்து கமநல சேவை நிலையங்களின் கீழ் 2016-2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கையின் போது 12853 விவசாயிகள் 15589.7 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ளதாகவும் இவர்களுக்கு 19 கோடியே 48 இலட்சத்து 71 ஆயிரத்து 250 ரூபா நிதி உரமானியக் கொடுப்பனவாக விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வரவிடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொக்குத் தொடுவாய் கமநல சேவை நிலையத்தின் கீழ் 340 விவசாயிகளின் 1167.75 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் 58 இலட்சத்து 38 ஆயிரத்து 750 ரூபா உரமானியமாகவும் பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 1694 விவசாயிகள் 5457.25 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 2 கோடியே 72 இலட்சத்து 86 ஆயிரத்து 250 ரூபாவும்.

குமுழமுனை கமநல சேவை நிலையத்தின் கீழ் 1063 விவசாயிகள் 3148 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 57 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவும்.

உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 1427 விவசாயிகள் 3362.5 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 68 இலட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபாவும்.

புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 1200 விவசாயிகள் 3476.5 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 73 இலட்சத்து 82 ஆயிரத்து 500 ரூபாவும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 1086 விவசாயிகளின் 3783.5 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 89 இலட்சத்து 16 ஆயிரத்து 250 ரூபாவும்.


ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 3144 விவசாயிகளின் 3583 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுககான உரமானியக் கொடுப்பனவாக 4 கோடியே 79 இலட்சத்து 15ஆயிரம் ரூபாவும்.

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 2164 விவசாயிகளின் 6674.25 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 3 கோடியே 33 இலட்சத்து 71 ஆயிரத்து 250 ரூபாவும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 584 விவசாயிகளின் 2016.75 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 83 ஆயிரத்து 750 ரூபாவும்.

அளம்பில் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 150 விவசாயிகளின் 305 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 15 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் மொத்தம் 12853 விவசாயிகளின் 15589.7 ஏக்கர் நெல் பயிர் செய்கைக்கு 19 கோடியே 48 இலட்சத்து 71 ஆயிரத்து 250 ரூபா நிதி உரமானியக் கொடுப்பனவாக விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வரவிடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார். (2-15)

## அரச சுற்றுலா விடுதி மன்னாரில் திறந்து வைப்பு





மத்திய அரசின் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி மூலம் மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்ட அரச சுற்றுலா விடுதியை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன வைபவ ரீதியாகத் திறந்து வைத்துள்ளார்.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன கலந்து கொண்டு சுற்றுலா விடுதியை திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வின் போது வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசப்பந்து தென்னக்கோன், பாராளுமன்ற உறுப்பினர்கள், சர்வமதத் தலைவர்கள், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மேல் உட்பட திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-15)

## பூநகரி பிரதேச செயலக புதிய கட்டடம் திறந்து வைப்பு



கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10 மணிக்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா ஆகியோர் இணைந்து புதிய பிரதேச செயலக கட்டடத்தை நாடாவை வெட்டி திறந்து வைத்துள்ளனர்.

பூநகரி வாடியடிச் சந்தியில் அமைந்துள்ள புதிய பிரதேச செயலக கட்டடம் என்ரிப் திட்டத்தின் 14 மில்லியன் ரூபாய்களும் பொது நிர்வாக உள்நாட்டலுவலகள் அமைச்சின் 60 மில்லியன் ரூபாவிலும் அமைக்கப்பட்டது.

முன்னதாக சர்வமத பிரார்த்தனையை தொடர்ந்து புதிய அலுவலக கட்டடம் நாடாவெட்டி திறந்து வைக்கப்பட்டதோடு நினைவுப் பொகல்வெட்டை மாவை சேனாதிராசா திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், பூநகர், கரைச்சி, கண்டாவளை, பளை பிரதேச செயலாளர்கள், சர்வமத குருமார்கள், அரச உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்டத்தின் முப்படைகளின் தளபதிகள்,



பொலிஸ் அதிகாரிகள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-312-15)

## கசிப்புடன் கைதான நபருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டப்பணம்

கிளிநொச்சி பெரியபரந்தன் பகுதியில் 26 போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு 45 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பெரிய பரந்தன் பகுதியில் கடந்த 19ஆம் திகதி 26 போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவரைக் கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 20 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 45 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (2-15)




## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(மல்லாவி)

மு/மாங்குளம் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளதாக பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் செல்லையா -பிறேம்காந் அறிவித்துள்ளார் .


இதற்கமைய, வித்தியாலயத்தின் அதிபர் தம்பிப்பிள்ளை -யோகானந்தராஜா தலைமையில் பாடசாலையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வித்தியாலயத்தின் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (2-5)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# திண்மக் கழிவு முகாமைத்துவம்






வீடுகள், கைத்தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் நடைபெறும் பல்வேறு வகையான செயற்பாடுகளினால் உருவாகின்ற தேவையற்ற, பாவனைக்குதவாத திண்மப் பொருட்கள் 'திண்மக் கழிவுகள்' என அழைக்கப்படும் சேதனப் பொருட்கள், கண்ணாடிகள், உலோகங்கள், பிளாஸ்டிக், கடதாசி போன்றன திண்மக் கழிவில் உள்ளடங்குகின்றன. இக்கழிவில் நச்சுத் தன்மையான கழிவுகளும் நச்சுத்தன்மையற்ற கழிவுகளும் அடங்கும். சில கழிவுகள் தீப்பற்றக்கூடியவை. சில கதிரியக்கமுடையவை. மற்றும் சில நோய் ஏற்படுத்தக் கூடியவை.

இன்றைய 21ஆம் நூற்றாண்டில் இத்திண்ம கழிவு வெளியேற்றமானது ஒரு பாரிய பிரச்சினையாகக் கருதப்படுகின்றது. இக் கழிவுகள் சூழலில் தேக்கமடைவதால் நுளம்புகள் எளிதில் உற்பத்தியாகி டெங்குக் காய்ச்சல், மலேரியா, யானைக்கால் போன்ற நோய்களைப் பரப்புகின்றன. அத்துடன் சுவாசத் தொகுதி சம்பந்தமான நோய்கள் ஏற்படவும் இக் கழிவுகள் வழிகோலுகின்றன. இத்திண்மக் கழிவுகள் இறுதியில் வடிகால்கள், நீரோடைகள், ஆறுகள், கடலேரிகள், நீர்த்தேக்கங்கள் போன்றவற்றையடைவதால் நீரை மாசுபடுத்துகின்றன. இதனால் நீர் வாழ் உயிரினங்கள் மட்டுமல்லாது தாவரங்கள், ஏனைய விலங்குகள் கூட பாதிக்கப்படுகின்றன. கைத்தொழிற்சாலைகளிலிருந்து விடுவிக்கப்படும் நச்சுத் தன்மையான பதார்த்தங்கள் சூழலில் கலந்து மனிதனுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் ஆபத்தை விளைவிக்கின்றன. இதனால இயற்கை சமநிலை பாதிப்படைகின்றது.

இலங்கையிலும் இத்திண்மக் கழிவு வெளியேற்றமானது ஒரு பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இதனால் நகர்ப்புறப் பகுதிகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன. கொழும்பில் அண்ணளவாக ஒரு நாளைக்கு 1500 தொன் (Ton) திண்ம கழிவு உருவாகின்றது. நகர்ப்புற வீடுகளில் உருவாகும் கழிவில் 80 - 85% மானவை எஞ்சிய உணவுப் பொருட்கள், தோட்டக்கழிவுகள் போன்றவற்றின் மூலம் வெளியேறும் சேதனப்பொருட்களாக அமைகின்றன. மிகுதி 15 - 20% கடதாசி, பிளாஸ்டிக், கண்ணாடி, உலோகங்கள் மற்றும் ஏனைய அசேதனப் பொருட்களாகும். இவை சூழலைப் பாதிக்க பெருமளவில் வழிகோலுகின்றன.




இத்திண்மக் கழிவுகளை சரியான முறையில் முகாமைத்துவம் செய்வதனால் மனித ஆரோக்கியக்கியத்திற்கும் சூழலிற்கும் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ள முடிவதுடன் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த முடியும். கண்காணித்தல், சேகரித்தல், போக்குவரத்து, செயலாக்குதல், மீள்சுழற்சி, மீள்பாவனை போன்ற பல செயற்பாடுகள் கழிவு முகாமைத்துவத்தில் உள்ளடங்குகின்றன. உருவாகும் கழிவுகளைக் குறைத்தல், மீள்பாவனை, மீள்சுழற்சி ஆகிய முறைகள் கழிவு முகாமைத்துவத்தில் பெரிதும் விரும்பப்படுகின்றன. இம்முறைகளை மேற்கொள்வதன் மூலம் பச்சைவீட்டு வாயுக்கள், மாசுக்கள் போன்றவற்றின் வெளியேற்றம் குறைக்கப்படுதல், இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுதல், சக்தி சேமிக்கப்படுதல், சக்திச் சுத்திகரிப்புத் தொழில்நுட்பத்திற்கான தேவை குறைக்கப்படுதல் போன்ற பல நன்மைகள் கிடைக்கின்றன. எனவே கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் ஒரு பகுதியாக இம்முறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

### கழிவு உற்பத்திக் குறைப்பும் மீள்பாவனையும்

உற்பத்தியாகும் கழிவுகளைக் குறைப்பதும், பொருட்களின் மீள்பாவனையும் கழிவு முகாமைத்துவத்தின் இரு பிரதான செயற்பாடுகளாகும். உற்பத்தி செய்யப்படும் பொருட்களைப் பொதியிடப் பயன்படுத்தும் பைகளின் அளவைக் குறைத்தல், வாங்கிய பொருட்களை வைப்பதற்கு தங்களுடைய சொந்தப் பைகளை வீட்டிலிருந்து எடுத்து வருமாறு வாடிக்கையாளர்களை ஊக்குவித்தல், துணியினாலான கைக்குட்டைகள், மீண்டும் பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக், கண்ணாடி கொள்கலன்கள் போன்றவற்றை உபயோகிக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தல் போன்ற பல நடவடிக்கைகள் இதில் அடங்குகின்றன. மேற்கூறிய நடவடிக்கைகளிற்கு மக்களனைவரினதும் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது. இதில் தங்கள் பங்களிப்பின் முக்கியத்துவத்தினை அவர்கள் விளங்கிக் கொள்வதற்காக இது சார்ந்த கருத்தரங்குகளும், பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அத்துடன் உற்பத்தியாளர்களால் பொதியிடப் பயன்படுத்தப்படும் பைகளின் வகையையும், அளவையும் ஒழுங்குபடுத்தவும், உபயோகிக்கும் பொலித்தீன் பைகளை மீள்பாவனைக்கு உட்படுத்தவும் அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



### மீள்சுழற்சி

பொருட்களின் உற்பத்தியின் போதும், பாவனையின் பின்னரும் கழிவாக வெளியேற்றப்படும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பொருட்களை கழிவிலிருந்து பிரித்தெடுத்துப் புதிய பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருளாக மாற்றுதல் 'மீள்சுழற்சி' என அழைக்கப்படும். முதலில் கழிவானது வகைப்படுத்தப்பட்டு மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுகள் சேகரிக்கப்படும். பின்னர் அக்கழிவுகள் மூலப்பொருட்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும். இம்முறையின் போது புதிய மூலப்பொருட்களின் தேவை குறைக்கப்படுவதுடன், குறைந்தளவு சக்தியே பயன்படுத்தப்படுகின்றது. மேலும் நிலம், நீர், வளி மாசடைலும் குறைவடைய வழி வகுக்கப்படுகின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் மீள் சுழற்சி செய்யக் கூடிய கழிவுகளைத் தனித்தனியாக இடுவதற்கான பெட்டிகளை வைத்து அதனுள் அவற்றை இடுவதற்கு மக்களை வழிப்படுத்துவதன் மூலம் மீள்சுழற்சி முறையினை இலகுவாக்க முடியும். உதாரணமாக புத்தகங்கள், செய்தித்தாள்கள், கடதாசிப் பெட்டிகள், கடித உறைகள் போன்றவற்றை கடதாசி என்ற வகையினுள்ளும் பிளாஸ்டிக் பைகள், தண்ணீர்ப் போத்தல்கள், பிளாஸ்டிக் மூடிகள் போன்றவற்றை பிளாஸ்டிக் வகை யினுள்ளும் உடைந்த கண்ணாடிப் போத்தல்கள் மற்றும் ஏனைய கண்ணாடி உபகரணங்களை கண்ணாடி வகையினுள்ளும் இடுமாறு அறிவுறுத்தல் வேண்டும். இவ்வாறாக இடப்படும் கழிவுகள் சேகரிக்கப்பட்டு மீள்சுழற்சி நடைபெறும் இடங்களுக்கு அனுப்பப்படும். அங்கு ஒரே வகையான கழிவுகள் அனைத்தும் ஒன்றாக சேர்க்கப்பட்டு, சிறு சிறு துண்டுகளாக்கப்பட்டு, உருக்கப்பட்டு புதிய பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.





### கழிவுச் சுத்திகரிப்பு

பொதுவாக வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் மாநகரசபை ஊழியர்களினால் சேகரிக்கப்படும். வெப்பமான காலநிலைகளின் போது குறைந்தது வாரத்தில் இருதடவையாவது கழிவுகளைச் சேகரிப்பதன் மூலம் சூழலில் இலையான்களின் இனப்பெருக்கத்தையும் ஏனைய பூச்சிகளின் வளர்ச்சியையும் குறைத்துக் கொள்ள முடியும். கழிவுச் சுத்திகரிப்பு நுட்பங்கள கழிவினது கனவளவையும் நச்சுத்தன்மையையும் குறைத்து இலகுவாக அகற்ற உதவுகின்றன. கழிவினுள் உள்ளடங்கும் பொருட்கள், அவற்றின் அளவு, கழிவுப் பொருட்களின் வடிவம் போன்றவற்றின் அடிப்படையில் கழிவுச் சுத்திகரிப்பு முறைகள் தெரிவு செய்யப்படும். தற்காலத்தில் கழிவுகளை உயர் வெப்பநிலையில் எரித்தல், நிலத்தில் குழியினை வெட்டிக் குவித்தல், மற்றும் உயிரியல் செயற்பாடுகள் என்பவற்றின் மூலம் கழிவுச் சுத்திகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் கழிவுகளைக் குறைத்தல், மீள்பாவனை, மீள்சுழற்சி ஆகிய முறைகள பெரிதும் விரும்பப்படுகின்றன.



### வெப்பச் சுத்திகரிப்பு

இச் சுத்திகரிப்பு முறையில் வெப்பம் பயன்படுத்தப்பட்டு கழிவுகள் சுத்திகரிக்கப்படுகின்றன. எரித்து சாம்பலாக்குதல், வெப்பச் சிதைவும் வளிமயமாக்கலும், திறந்த வெளியில் எரித்தல் ஆகியன இம்முறையில் உள்ளடங்குகின்றன. பொதுவான வெப்பச் சுத்திகரிப்பு முறையாக எரித்து சாம்பலாக்கும் முறை அமைகின்றது. இதன்போது கழிவானது ஒட்சிசன் உள்ள நிலையில் எரிக்கப்படும். விளைவுகளாக காபனீரொட்சைட்டு, நீராவி, சாம்பல் ஆகியன பெறப்படும். இம்முறையினால் கழிவினது கனவளவு குறைக்கப்படுதல், பாதிப்பற்ற ஒழுங்கமைவு, போக்குவரத்துச் செலவு குறைக்கப்படுதல், பச்சை வீட்டு வாயுவான மெதேனின் உற்பத்தி குறைக்கப்படுதல் போன்ற நன்மைகள் கிடைக்கின்றன.

(தொடரும்...)

தர்ஷிகா செல்வராஜா
Demonstrator
இரசாயனவியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்

## வாரத்திற்கு ஒரு புதிர்! 176

கொடிய விசமாகக் கருதப்படும் புரூசிக் அமிலத்தின் (Prussic acid) விஞ்ஞானப் பெயர் என்ன?

புதிர் 175 இற்கான விடைகளை 03.01.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி. (செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 175 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

நல்லைநாதன் விதுஷன்
45/7G, ஞானசாரியார் வீதி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

**புதிர் 175க்கான கேள்வியும் விடையும்:**

ராஜாவின் தற்போதைய வயது 27, ரமாவின் தற்போதைய வயது 21. சில காலத்திற்குமுன் ராஜாவின் வயது ரமாவின் வயதின் 3 மடங்காக இருந்தது. அது எவ்வளவு காலத்தின் முன்? 18 வருடங்களின் முன்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 176

சரியான விடை:-..........
முழுப்பெயர்:-..........
முகவரி:-..........
தொ.பே. இல:..........
கையொப்பம்:..........





புத்தாக்க அரங்க இயக்கத்தின் தயாரிப்பாக எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரின் நெறியாள்கையில் போதை எமக்கு பகை போதைப்பொருள் விழிப்புணர்வு தெரு வெளி ஆற்றுகை வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையில் வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசார பிரிவின் ஒழுங்குபடுத்தலில் பாடசாலைகள் மற்றும் கிராமங்களில் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது. இவ் ஆற்றுகை நிகழ்வினையும் ஆற்றுகைக் குழுவினரையும் படங்களில் காணலாம்.

# காசோலை வழங்கல்




வடமாகாண சபை எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசாவின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து கரவெட்டி பகுதியில் உள்ள ஒன்பது பயனாளிகளுக்கு மலசலகூடம் அமைப்பதற்காக தலா 50, 000 ரூபா வீதம் காசோலை வழங்கப்பட்டது. கரவெட்டி பிரதேச சபையில் பதில் சபை செயலாளர் அ.வினோராஜ் தலைமையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்விலேயே இக் காசோலைகள் வழங்கப்பட்டன. கரவெட்டிப் பகுதியில் வசிக்கும் எட்டு பொதுமக்களுக்கும் ஒரு முன்பள்ளிக்குமாக தலா 50, 000 ரூபா வீதம் மலசலகூடம் அமைப்பதற்காக இக் காசோலைகள் வழங்கப்பட்டன. (இ-60)

# கணனிகள் கையளிப்பு



யாழ்.ஊர்காவற்றுறை, தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையத்தில் கணனி வகுப்புக்களை ஆரம்பிக்கும் முகமாக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனின் முயற்சியில் 8 கணனிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனின் வேண்டுகோளின் பிரகாரம், செரெண்டிப் சிறுவர் இல்லத்தின் அனுசரணையில் வழங்கப்பட்ட இக்கணனிகளை, சனசமூக நிலையத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில், தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினருடன், தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்தலைவர் அன்னராசா, பொது முகாமையாளர் ஜெயக்குமார், சனசமூக நிலைய அங்கத்தவர்கள் மற்றும் நல்லூர் கிராம அலுவலர் ப. தர்சானந் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-89)

# தளபாடங்கள் வழங்கல்




வடமாகாண சபை உறுப்பினர் பரம்சோதியினால் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து கரவெட்டி கிழவித்தோட்டம் சனசமூக நிலையத்திற்கு ஒரு தொகுதி தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து இத்தள பாடங்கள் வழங்கப்பட்டன. மேலும் அன்றையதினம் அவரின் ஒதுக்கீட்டில் இருந்து கரவெட்டி பிரதேச சபை உறுப்பினராக இருந்து மரணமடைந்த மதியரிசனின் குடும்பத்தினருக்கு வீடு திருத்தியமைப்பதற்கான காசோலையும் இமையாணன் கண்ணகி சனசமூக நிலைய கட்டடம் திருத்தி அமைப்பதற்கான காசோலையும் வழங்கப்பட்டது. (இ-60)





வாழ்நாள் சாதனையாளர் விருதுபெற்ற தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கத்தின் கௌரவிப்பு விழா கரவெட்டி தஞ்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றபோது... (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)







வடமராட்சி கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் அதிபர் கேடாஸ்கரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது





வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி மன்றத்தின் சிசுதிரிய புலமைப்பரிசில் வழங்கலும் உத்தியோகத்தர் கௌரவிப்பும் அண்மையில் இடம்பெற்றது. கரவெட்டி பிரதேச செயலர் சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் அப்பகுதி மக்களுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டன. (படங்கள்:- மகாலிங்கம்)

# 'நிர்பய்' ஏவுகணை சோதனை தோல்வி




ஒடிசாவின் பாலாசோரில் இருந்து நேற்று முன்தினம் நடத்தப்பட்ட 'நிர்பய்' ஏவுகணை சோதனை தோல்வியில் முடிந்தது.

பாலாசோரில் உள்ள ஐடிஆர் ஏவுதளத்தில் இருந்து நேற்று முன்தினம் புதன் கிழமை மதியம் இந்தச் சோதனை நடத்தப்பட்டது. இது குறித்து இராணுவ அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி கழக அதிகாரிகள் கூறும்போது, "ஏவுகணை புறப்படும் நிலையில் இருந்தபோது அதன் ஆரம்பகட்ட இயந்திரம் சரியாக வேலை செய்தது. ஆனால் ஏவுதளத்தில் இருந்து அது விலகியபோது திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு அடுத்த இரண்டு நிமிடங்களில் இலக்கை எட்டாமல் கீழே விழுந்துவிட்டது" என்றார்.

இதுவரை நான்கு முறை நிர்பய் ஏவுகணை சோதிக்கப்பட்டது. அதில் மூன்று முறை தோல்வியே ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# தென்னாபிரிக்காவில் குழந்தையை உயிரோடு தின்ற இராட்சத எலிகள்

## மனதை உலுக்கும் சம்பவம்



தென்னாபிரிக்காவில் இராட்சத எலிகள் மூன்று மாத பெண் குழந்தையை உயிரோடு தின்றுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. Johannesburg, Katlehong நகரத்திலே இக்கொடூர சம்பவம் அரங்கேறியுள்ளது. உயிரிழுந்த குழந்தையின் 26 வயதான தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர். கணவனைப் பிரிந்து வாழ்ந்து வரும் 26 வயதான பெண், தினமும் குழந்தையை வீட்டில் தனியாக விட்டு விட்டு மது விடுதிக்கு சென்று வந்துள்ளார்.இந்நிலையில், சம்பவத்தன்று பெண் மது விடுதிக்கு சென்று அதிகாலை வீடு திரும்பிய போது, குழந்தை உடல் பாகங்களின்றி இரத்த வெள்ளத்தில் உயிரிழந்து கிடந்துள்ளது.

விசாரணையில் இராட்சத எலிகள் குழந்தையை கொடூரமாகக் கடித்து தின்றுள்ளது தெரியவந்துள்ளது. இதில், அந்த குழந்தை வலியால் துடி துடித்து உயிரிழந்துள்ளது. இந்தப் பெண்ணின் மற்றொரு குழந்தை அவரைப் பிரிந்து வாழ்ந்து வரும் கணவரிடம் இருப்பதால் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளது.

தென்னாபிரிக்காவில் சுமார் 3 அடி உள்ள இராட்சத எலிகள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. குழந்தை கவனிப்பாரற்று விட்ட தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ-3)

# போராட்டத்தில் குதித்த வங்கி அதிகாரிகள்



(டில்லி)

அகில இந்திய வங்கி அதிகாரிகள் கூட்டமைப்பின் (AIBOC) உறுப்பினர்கள், இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு ரிசர்வ் வங்கிக் கிளைகள் முன்பு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

வங்கிகளுக்கு போதிய அளவு பணம் ஒதுக்கக்கோரியும், வைப்பு உச்ச வரம்பு விதிகளை முழுமையாக திரும்பப் பெற வலியுறுத்தியும் வங்கி அதிகாரிகள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

மும்பை ரிசர்வ் வங்கி தலைமையகம் மற்றும் டில்லி, சென்னை, கொல்கத்தா உள்ளிட்ட இடங்களில் உள்ள ரிசர்வ் வங்கி கிளை முன்பு போராட்டங்கள் நடத்தப்பட்டன. (இ-3)

# சிரியாவுக்கான மொஸ்கோ பிரகடனத்தில் சவுதியும் இணைவது அவசியம் - ரஷ்யா

கடந்த ஐந்து ஆண்டு காலமாக சிரியா எதிர்நோக்கி வரும் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக ரஷ்யா, துருக்கி, ஈரான் ஆகிய மூன்று நாடுகளால் நிறைவேற்றப்பட்டுள்ள "மொஸ்கோ பிரகடனத்தில்" சவுதி அரேபியாவும் பங்கு கொள்ள வேண்டும் என ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச பாதுகாப்புச் சபையில் ரஷ்யா பிரதிநிதி விடாலி சுர்க்கின், இதுபற்றி கருத்து தெரிவிக்கையில்,

சிரியா நெருக்கடிக்கான மொஸ்கோ பிரகடனம் சிரியா நெருக்கடியில் உண்மையாகத் தாக்கம் செலுத்தும் அனைத்து நாடுகளுக்கும் திறந்து விடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

"மொஸ்கோ பிரகடனத்தில்" சிரியாவில் இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண முடியாது, அரசியல் ரீதியிலேயே தீர்வு காண முடியும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை, சிரியா நிலப்பரப்பை ஐக்கியப்படுத்தி, அதன் இறையாண்மை, சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாப்பதோடு, பல்லின மற்றும் மதங்கள் கொண்ட மதச்சார்பற்ற ஜனநாயக நாடாக சிரியாவை பிரகடனப்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# கருணாநிதியின் படம் வெளியீடு



கடந்த முதலாம் திகதி உடல்நலக் குறைவு காரணமாக தி.மு.க. தலைவர் கருணாநிதி சென்னை காவேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் 7ஆம் திகதி வீடு திரும்பினார். இந்நிலையில், டிசெம்பர் 15ஆம் திகதி மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கருணாநிதிக்கு ட்ரக்கியோஸ்டமி சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

தற்போது வைத்தியசாலையின் உள்ளே கருணாநிதி கதிரையில் உட்கார்ந்து தொலைக்காட்சி பார்ப்பது போன்ற புகைப்படம் வெளியாகியுள்ளது. மேலும் அவருக்கு, லம் பார் பஞ்சர் எனப்படும் முதுகு தண்டுவடத்தில் திரவத்தை எடுத்து பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளார்களாம்.

அதன் ரிசல்ட் வந்தவுடன் இரு தினங்களுக்குப் பின்பு கருணாநிதி டிஸ்சார்ஜ் ஆகி வீடு திரும்புவார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

# அ.தி.மு.க. பொதுச் செயலாளராக 29ஆம் திகதி சசிகலா பதவியேற்பு!

## முதலமைச்சராவது எப்போது?



அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக சசிகலா எதிர்வரும 29ஆம் திகதி பதவி ஏற்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இறந்த சில மணி நேரங்களிலே, ஓ.பன்னீர்செல்வம் தமிழக முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்னர் அ.தி.மு.கவின் முக்கிய பொறுப்பான பொதுச்செயலாளர் பதவி யாருக்கு என்பதில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்தன.

அதன் பின்னர் ஒரு வழியாக ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியும் அவருடன் கடைசி வரை வைத்தியசாலையில் இருந்தவருமான சசிகலா தான் அடுத்த பொதுச் செயலாளர் என்பது உறுதியாகியுள்ளது.

ஆனால் அதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதாகவும் விதிமுறைகள் நிறைய உள்ளதாகவும் கூறப்பட்டது.

ஆனால் அதன்பின்னர் அந்த விதிமுறைகள் எல்லாம் தளர்க்கப்படும் என்று தகவல்கள் வெளியாகின. அது மட்டுமன்றி முதல்வராக வேண்டும் என்றும் பல்வேறு அமைச்சர்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சசிகலா பொங்கலுக்குப் பிறகு ஒரு நல்ல நாளில் முதல்வராக பதவியேற்கலாம் என ஜோதிடர்களிடம் ஆலோசித்து வருவதாக கூறப்பட்டது.

ஆனால் கட்சியில் பெரும்பான்மை ஆதரவு இருந்தாலும் யார் எப்படி மாறுவார்கள் என்பது தெரியாது.

கட்சிக்குள்ளும் சிலர் வெவ்வேறு விதமாக பேசுகிறார்களாம். அதனால் சசிகலாவின் கணவர் நடராஜன் சசிகலாவை உடனடியாக முதல்வராக வேண்டும் என்று கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதாவது எதிர்வரும் 29ஆம் திகதி பொதுக்குழு முடிந்தவுடனே சசிகலா கட்சியின் பொதுச் செயலாளராகவும் முதல்வராகவும் பதவியேற்றுக் கொள்வார் என்று கூறப்படுகிறது.

அதற்கான வேலைகளிலும் நடராஜன் இறங்கி விட்டதாக கூறப்படுகிறது.

பின்னர் ஆறு மாதத்திற்குள் ஏதாவது ஒரு தொகுதியில் நின்று வென்று விடலாம் என திட்டமிட்டுள்ளனர். அதற்கான தொகுதிகள் கூட முடிவாகிவிட்டதாக கூறப்படுகிறது. (இ-3)

# புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்க வேண்டும்



## ஜனாதிபதியிடம் தமிழ் அமைப்பு கோரிக்கை

(வோஷிங்டன்)

**தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இருந்து நீக்குவதுடன், அந்த அமைப்பு மீதான தடையையும் நீக்க வேண்டும் என ஒபாமாவுக்கு தமிழ் அமைப்பு ஒன்று கோரிக்கை விடுத்துள்ளது.**

இலங்கையில் தமிழீழம் கேட்டு போராடி வந்த விடுதலைப்புலிகள் அமைப்பை அமெரிக்கா கடந்த 1997 ஆம் ஆண்டு தடை செய்தது.

அந்த அமைப்பை பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் சேர்த்துள்ள அமெரிக்கா, விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையால் அங்கு வாழும் தமிழர்களுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு வரு கின்றன. எனவே இந்த தடையை நீக்க வேண்டும் என 'ஒபாமாவுக்கான தமிழர்கள்' என்ற தமிழ் அமைப்பு ஜனாதிபதி ஒபாமாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்துள்ளதால் அமெரிக்காவில் வாழும் தமிழர்களுக்கு பல்வேறு துன்பங்கள் ஏற்படுகின்றன. இங்குள்ள தமிழர்கள் வெளிநாடு செல்லும் போதும், அங்கிருந்து அமெரிக்காவுக்கு திரும்பும்போதும் விசாரணை என்ற பெயரில் பலமணி நேரம் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் இறுதிக் கட்ட போர் நடந்த 2009ஆம் ஆண்டுக்கு பிறகு விடுதலைப்புலிகள் அமைப்பு எந்த வித நடவடிக்கைகளி லும் ஈடுபடாமல் செயலிழந்து உள்ளது.

எனவே இந்த அமைப்பை தொடர்ந்து பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் வைப்பதற்கு எந்த காரணமும் இல்லை. இது (விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்தது) இலங்கையில் அப்பாவி தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு போருக்கு உதவுவதற்காக முன்னாள் ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் நிர்வாகம் எடுத்த தவறான நடவடிக்கை ஆகும்.

இந்த பட்டியலில் இருந்து விடுதலைப்புலிகள் அமைப்பை நீக்குவதன் மூலம் இந்த கிறிஸ்மஸ் மற்றும் பண்டிகை காலத்தில் சிறிய நிவாரணத்தை இங்குள்ள தமிழர்களுக்கு ஒபாமாவால் வழங்க முடியும்.

எனவே விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் இருந்து நீக்கி, அதன் மீதான தடையை விலக்கிக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (இ-3)

## இந்தோனேஷியாவில் நிலநடுக்கம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் நேற்று முன்தினம் காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அலகில் 6.7 ஆகப் பதிவானது.

பண்டா கடல் பகுதியில் நேரிட்ட இந்த நிலநடுக்கம் கடலுக்கு அடியில் 180 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. எனினும் சுனாமி அலைகள் உருவாக வில்லை.

அவுஸ்திரேலியாவின் வடக்குப் பகுதியிலும் நிலநடுக்கம் உணரப் பட்டது. எனினும் இந்தோனேஷியா, அவுஸ்திரேலியாவில் உயிரிழப்போ, சேதமோ ஏற்பட்டதாக தகவல் இல்லை.

பண்டா பகுதியில் உள்ள கட்டடங்கள், வீதிகளில் விரிசல்கள் ஏற்பட்டன. வீடுகள், அலுவலகங்களில் இருந்த பொதுமக்கள் வீதி, தெருககளில் குவிந்தனர.

கடந்த 2004 டிசெம்பரில் இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி அலைகள் உருவாகி இந்தியா, இலங்கை, தாய்லாந்து, மாலைதீவு உள்ளிட்ட நாடுகளில் சுமார் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## இந்தோனேசியாவில் தீவிரவாத தாக்குதலுக்கு சதி செய்த 3 பேர் சுட்டுக்கொலை- ஒருவர் கைது



இந்தோனேசியாவில் இரு தரப்புக்கு இடையே நடந்த கடுமையான துப்பாக்கிச் சண்டையில் 3 தீவிரவாதிகள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தோனேசியாவை சேர்ந்த தீவிரவாதி பஹ்ருன் நயிம் சிரியாவில் ஐ.எஸ். இயக்கத்தினருடன் இணைந்து சண்டையிட்டு வருகிறான். இந்நிலையில் இந்தோனேசியாவில் இருக்கக் கூடிய இவனது ஆதரவாளர்கள் தலைநகர் ஜகார்த்தா மற்றும் பிரசித்திபெற்ற ஜாவா தீவு ஆகிய இடங்களில் தற்கொலைப்படை தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

அதன்பேரில் ஜகார்த்தாவில் அதிரடி சோதனை நடத்திய பொலிஸார் சந்தேகத்தின் பேரில் 14 பேரை பிடித்து விசாரித்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் ஜகார்த்தா நகரின் தென்பகுதியில் உள்ள தாங்கெராங் என்ற இடத்தில் ஒரு வீட்டில் பயங்கரவாதிகள் சிலர் பதுங்கியிருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, நேற்று முன்தினம் தீவிரவாத தடுப்பு பொலிஸார் அங்கு விரைந்துசென்று அந்த வீட்டை சுற்றி வளைத்தனர். அப்போது அங்கு பதுங்கியிருந்த தீவிரவாதிகள் பொலிஸாரை பார்த்ததும் அவர்களை நோக்கி கையெறி குண்டை வீசினர். ஆனால் அதிர்ஷ்டவசமாக அந்த குண்டு வெடிக்காமல் போனது.

இதையடுத்து தீவிரவாதிகள் பொலிஸாரை குறிவைத்து துப்பாக்கியால் சுட்டனர். உடனடியாக பொலிஸாரும் தங்களது துப்பாக்கிகளால் அவர்களுக்கு தக்க பதிலடி கொடுத்தனர். இரு தரப்புக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது. இறுதியில் 3 தீவிரவாதிகள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஒருவர் உயிருடன் பிடிபட்டார். பொலிஸார் அவரை கைது செய்து தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த தீவிரவாதிகள் ஆண்டு இறுதியில் மிகப்பெரிய பயங்கரவாத தாக்குதலுக்கு சதி திட்டம் தீட்டியிருந்ததாகவும், அதற்கு பயன்படுத்துவதற்காக வைத்திருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்று அவர்கள் பதுங்கியிருந்த வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

## ஈராக்கில் குண்டுவெடிப்பு

### 7 பேர் உயிரிழப்பு



ஈராக்கில் 'குர்திஷ்தான் ஜனநாயக கட்சி-ஈரான்' அலுவலகம் அருகே நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 7 பேர் உயிரிழந்தனர்.

ஈராக்கில் தன்னாட்சி பெற்றுள்ள குர்திஸ்தான் பகுதியில் கோய்சின் ஜாக் நகரில் ஈரான் நாட்டின் எதிர்க்கட்சியான 'குர்திஸ்தான் ஜனநாயக கட்சி-ஈரான்' அலுவலகம் உள்ளது. அந்த அலுவலகத்தின் அருகே நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி இரவு 10 மணிக்கு இரட்டை குண்டுவெடிப்பு நடந்தது.

இந்த குண்டுவெடிப்புகளால் அந்தப் பகுதியே அதிர்ந்தது. இந்த குண்டுவெடிப்புகளில் 'குர்திஸ்தான் ஜனநாயக கட்சி-ஈரான்' தொண்டர்கள் 5 பேர், பாதுகாப்பு படை வீரர் ஒருவர், ஒரு குழந்தை என 7 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். இந்த குண்டு வெடிப்புகளில் பலர் படுகாயம் அடைந்தனர்.

இது குறித்த தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் விரைந்து வந்து மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

ஈராக்கில் பாதுகாப்பு நிறைந்த தன்னாட்சி பிரதேச பகுதியில் அமைந்துள்ள நகரில் இப்படி இரட்டை குண்டுவெடிப்புகள் நடந்திருப்பது ஒரு அபூர்வமான நிகழ்வாக பார்க்கப்படுகிறது.

இந்த குண்டுவெடிப்புகளுக்கு உடனடியாக எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (இ-3)

## மோடி பெரும் குழப்பத்தில் ராகுல் காந்தி குற்றச்சாட்டு

(டில்லி)

நாணயத்தாள் ஒழிப்பு நடவடிக்கையில் மோடி அரசு பெரும் குழப்பத்தில் உள்ளது என்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.





பிரதமர் நரேந்திரமோடி கறுப்பு பணத்தை ஒழிக்கும் நடவடிக்கையாக பழைய 500 மற்றும் 1,000 ரூபாய் நாணயத்தாள்களை செல்லாது என்று அறிவித்தார்.

இதனால் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. பழைய ரூபாய் நாணயத்தாள்களை டிசம்பர் மாதம் இறுதி வரை வங்கிகளில் வைப்புச் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் வங்கிகளில் பழைய ரூபாய் நாணயத்தாள்களை வைப்புச் செய்வதில் சில கட்டுப்பாடுகளை விதித்து ரிசர்வ் வங்கி உத்தரவிட்டது. ஒருவர் தனது கணக்கில் டிசம்பர் 30ஆம் திகதிக்குள் ஒரு முறை மட்டுமே ரூ.5 ஆயிரத்துக்கு மேல் வைப்புச் செய்யலாம். அப்போது வங்கி அதிகாரிகள் அவர்களிடம் கேள்வி எழுப்புவார்கள் என்று ரிசர்வ் வங்கி நிபந்தனை விதித்தது.

'இதற்கு கடும் விமர்சனங்கள் வந்ததையடுத்து நேற்று முன்தினம் இந்த நிபந்தனையை ரிசர்வ் வங்கி இரத்து செய்துள்ளது.

ரிசர்வ் வங்கியின் இந்த அறிவிப்பை ராகுல் காந்தி தனது டுவிட்டர் சமூக வலைத்தளத்தில் விமர்சித்துள்ளார்.

'குளறுபடியுடன் இருக்கும் டிராபிக் சிக்னல் ஒரே நேரத்தில் பல நிறங்களை காட்டுவதை போல மோடி அரசு ரூபாய் நாணயத்தாள் ஒழிப்பு விவகாரத்தில் பெரும் குழப்பத்தில் உள்ளது' என்று கூறியுள்ளார்.

இதேவேளை போக்குவரத்து சிக்னல் ஒன்று ஒரே நேரத்தில் அனைத்து நிறங்களையும் ஒளிரச்செய்யும் படம் ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.


அந்த படத்தின் கீழே, 'ரூபாய் நாணயத்தாள் ஒழிப்பு நடவடிக்கை பற்றி பிரதமர் அரசின் உத்தரவுகள்' என்ற குறிப்பையும் வெளியிட்டு உள்ளார்.

இதேபோல் காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ரன்தீப் சுர்ஜ்வாலா தனது டுவிட்டர் பக்கத்தில், 'எதிர்பாராதவிதமாக ரிசர்வ் வங்கி தற்போது ரிவர்ஸ் வங்கியாக மாறி விட்டது' என்று குறிப்பிட்டு உள்ளார். (இ-3)

# இலங்கை தொடர்பான அறிக்கையை வெளியிட ஐ.நா.ஆணையாளர் தயார்

(கொழும்பு)

**ஜெனிவா மனித உரிமை பேரவையில் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை இலங்கை எவ்வாறு அமுல்படுத்தியது என்பது தொடர்பான எழுத்து மூலமான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் பேரவையில் வெளியிடவுள்ளார்.**



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 24ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இதன்போது இலங்கை குறித்த அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், மார்ச் மாதம் 22ஆம் திகதி சமர்ப்பிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிடும் அறிக்கைக்கு அரசாங்கம் பதிலளிக்க உள்ளதுடன், அரசாங்கத்தின் தரப்பிலும் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் கடந்த ஆண்டு நடைபெற்ற 30ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டு இருந்ததுடன், அதற்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(இ-3)

## சஷி வெல்கமவின் விளக்கமறியல் நீடிப்பு

இலங்கை போக்குவரத்து சபையின் முன்னாள் தலைவர் சஷி வெல்கமவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சஷி வெல்கமவின் விளக்கமறியலை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை நீடிக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 135 மில்லியன் ரூபாவினை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் சஷி வெல்கமவை இம்மாதம் 20 ஆம் திகதி கைதுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பில் உளவுத்துறை பணிப்பாளர் சிறப்புச்சாட்சியம்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பிலான வழக்கில் சிறப்பு சாட்சியம் அளிக்கும் வகையில் தேசிய உளவுத் துறையின் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிலந்த ஜயவர்தனவை மன்றில் ஆஜராகுமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை பிறப்பித்த மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக, குற்றப் புலனாய்வுப் பிரிவு ஊடாக அவருக்கான அழைப்பை விடுக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

ரவிராஜ் படுகொலை வழக்கில் முறைப்பாட்டாளர் தரப்பில் மன்றுக்கு பட்டியலிடப்பட்ட 68 சாட்சிகளில் 25 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, முறைப்பாட்டாளர் தரப்பு விசாரணைகள் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தன.

இந்நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கும் வகையிலேயே சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிலந்த ஜயவர்தனவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## பெற்ற தாயை பராமரிக்க முடியாது கைவிட்டுச் சென்ற ஏழு பிள்ளைகள்



பண்டாரகம - கிடல்பிட்டிய பகுதியில் ஏழு பிள்ளைகளை பெற்ற 91 வயதான தாய் தனது பிள்ளைகளால் கைவிடப்பட்டுள்ளார்.

குறித்த தாய் அனைத்து சொத்துக்களையும் தனது மூத்த மகளுக்கு வழங்கிய பின்னர் அவர் தனது மூத்த மகள் வீட்டிலேயே தங்கி வந்துள்ளார்.

அண்மையில் குறித்த மகள் தனது தாயை இளைய சகோதரி வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஆனால் குறித்த இளைய சகோதரியோ தனது தாயை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, தனது தாயை பராமரிப்பதால் எந்த வருமானமும் இல்லை என பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து குறித்த தாய்,பொலிஸ் அதிகாரிகளினால் முதியோர் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (இ-3)

# தெற்கில் எழுந்தால் வடக்கிலும் எழும் இதுதான் இலங்கை-அமைச்சர் மனோ

இருபது இனங்களையும், நான்கு மதங்களையும் மூன்று மொழிகளையும் கொண்டது தான் இலங்கை. இதை நாம் மனதில் கொள்ள வேண்டும். இதை மறந்தால் ஒரே இலங்கை என்பதை மறந்துவிட வேண்டி வரும் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிங்கள அரச ஊழியர்களுக்கான தமிழ் பேச்சு மொழி பயிற்சி வகுப்பு நிறைவு சான்றிதல் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துக்கொண்ட போதே இதைத் தெரிவித்தார்.

தெற்கிலே ஒரே மொழி, ஒரே மதம், ஒரே இனம் என்று சொன்னால், அதற்கு பதிலடியாக வடக்கிலும் ஒரே மொழி, ஒரே மதம், ஒரே இனம் என்ற கோஷம் எழும். அதேபோல் வடக்கில் இந்த கோஷம் எழுந்தால், தெற்கிலும் இந்த கோஷம் எழும்.

எனவே இந்த நாட்டில் நிலவுகின்ற பன்மைத் தன்மையை புரிந்து ஏற்றுக்கொள்வதுதான், நாம் ஒரே நாட்டவராக வாழ எஞ்சியிருக்கும் ஒரேயொரு வழி எனவும் தெரிவித்தார்.

சிங்களவர், ஈழத்தமிழர், முஸ்லிம்கள், மலையக தமிழர், மலாய், ஒல்லாந்து பறங்கியர், போர்த்துக்கல் பறங்கி, வேடர், பரதர், மலையாளிகள், கடல் வேடர், தெலுங்கர், இலங்கை சீனர், தாவூத் போரா, மேமன், கொழும்பு செட்டி, பார்சி, சிந்தி, ஆபிரிக்க வம்சாவளி கப்ரிஞா, கோஜா ஆகிய இருபது இனத்தவர்கள் இலங்கையில் வாழ்வதாக எனது அமைச்சில் பதிவாகியுள்ளது.

சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் ஆட்சி மொழிகளாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் ஆகிய நான்கு மதங்களும் இலங்கையில் நிலவுகின்றன.

இதுதான் இலங்கையின் யதார்த்தம். இதை மாற்ற முடியாது. உண்மையில் இந்த அடிப்படை உண்மைகள் இந்த நாட்டில் வாழும் நம்மில் பலருக்கே தெரியாது. அப்படியாயின் வெளிநாட்டவருக்கு இவை தெரியாமல் போனதில் ஆச்சரியம் இலலை.

அடுத்த வருடம், ஒவ்வொரு இனத்தின் கலாசார வரலாற்று அடையாளங்களும் காட்சிப்படுத்தப்படுமுகமாக, எனது அமைச்சு நாடு முழுக்க நடத்த உள்ள இலங்கை பன்மைதன்மை ஊர்வல நிகழ்வில் இந்த உண்மைகளை நாம் வெளிப்படுத்துவோம்.

அதன்மூலம் இலங்கை என்றால் என்ன என்பதை முதலில் நம் நாட்டவரே தெரிந்து கொள்ள முடியும். பிறகு வெளிநாட்டவரும் அறிய முடியும்.

உலகத்துக்கு இலங்கையில்வாழும்தமிழர்கள் அனைவரும் இலங்கை தமிழரகள். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், உள்ளக ரீதியாக, ஈழத்தமிழர், மலையக தமிழர் என்ற அடையாளங்கள் இருக்கின்றன.

உலகத்துக்கு தமிழ் பேசும் மக்கள் என்ற அடையாளம் இருக்கின்றது. ஆனால், உள்ளக ரீதியாக தமிழர், முஸ்லிம் என்ற அடையாளங்கள் இருக்கின்றன. இந்த பரஸ்பர அடையாளங்களை அங்கீகரித்து அறிவுபூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அதேவேளை ஒட்டுமொத்தமாக நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்துக்குள் வருகிறோம் என்பதை மனதில் நிறுத்த வேண்டும். இலங்கையர் எம் அடையாளம், பல இனங்கள் எம் சக்தி என்பது எம் பார்வையாக இருக்க வேண்டும்.

தமிழ் மொழி மட்டும் தெரிந்த ஒருவர் இலங்கையில் எந்த ஒரு பாகத்திலும் சென்று தனது தாய்மொழியில் கருமமாற்றிகொள்ளும் நிலைமை ஏற்பட வேண்டும். அதேபோல்சிங்கள மொழி மட்டும் தெரிந்த ஒருவர் தனது தாய்மொழியில் வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் எந்த ஒரு பாகத்துக்கும் சென்று தனது தாய் மொழியில் கருமமாற்றிக்கொள்ளும் நிலைமை ஏற்பட வேண்டும்.

இதைப்பற்றி எழுதுவது, பேசுவதை போன்று செய்து காட்டுவது இலேசான காரியமல்ல என்பது எனக்கு தெரியும். ஆனால், கஷ்டமான காரியங்களை செய்து பழக்கப்பட்ட எனக்கு இதை செயது காட்ட முடியும் என நம்புவதாக அறிவித்துள்ளார்.

அடுத்த வருடம் எனது இந்த நோக்கத்துக்கு முக்கியமான வருடம். முதன்முதலாக இந்த மொழியுரிமையை உறுதிப்படுத்தும் பொறுப்பை, மூன்று மொழிகளையும் எழுத, படிக்க, வாசிக்க, புரிந்துகொள்ளக் கூடிய ஒரு அமைச்சர் பொறுப்பேற்றுள்ளார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த மொழிப்பிரச்சினையை தீர்க்க முடியாவிட்டால், அடுத்த கட்டத்துக்கு போக முடியாது.

ஒரே இரவில் அனைத்து மாற்றங்களையும் கொண்டு வந்துவிட முடியாது என்பது எனக்கு தெரியும். ஆகவே நான் கொஞ்சம் அவகாசம் கொடுத்துள்ளேன். அதனை புரிந்துகொண்டு அரசு ஊழியர்கள் மொழிப்பயிற்சி பெற வேண்டும்.

இந்த விடயத்தில் என்னுடன் விளையாட நினைக்க கூடாது. நான் இங்கே விளையாட வரவில்லை. அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அறிந்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

இங்கே எனது அமைச்சின் தேசிய மொழிக்கல்வி பயிற்சி நிறுவனம் இரத்தினபுரி மாவட்ட அரசு நிறுவன சிங்கள ஊழியர்களுக்கு பேச்சு தமிழ் மொழியை மட்டுமலல, தமிழ் கலாசார அடையாளங்களையும் கற்றுக்கொடுத்துள்ளது.

மேடையில் தமிழ் மொழியில் பேசி ஆடிப்பாடிய அரசு ஊழியர்களான சிங்களப் பெண்கள் அனைவரும் தமிழ பெண்களை போலவே எனக்கு தோன்றினார்கள். பெருந்தொகையான அரசு ஊழியர்களுக்கு தமிழ் மொழிபயிற்சி சான்றிதல்களை இங்கே வழங்கினேன். இவை தொடர்பில் நான் அமைச்சர் என்ற முறையில் மகிழ்ச்சியடைகிறேன் என இதன்போது தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார். (இ-3)

# சக்திமிக்க நாடொன்றை கட்டியெழுப்பும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**சக்திமிக்க நாடொன்றை கட்டியெழுப்பும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமுர்த்தி சிறுவர் சமூக கலாசார இலக்கிய விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

எதிர்கால சந்ததியினருக்கு சிறப்பான நாடொன்றை கட்டியெழுப்ப அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக கூறினார்.

நாடு தொடர்பில் அரசாங்கத்திற்கு உள்ள பொறுப்புக்களை உயர்வான வகையில் எதிர்கால சந்ததியினருக்காக மேற்கொள்வதும் வலுவான நாடொன்றை கட்டியெழுப்பும் பொறுப்பும் அரசாங்கத்திற்கு உண்டு. நாளைய உலகின் நாட்டின் பிள்ளைகளின் இலக்கிய ஆற்றலை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.


இலக்கியத்தைக் கையாளும் போது அதன் சிறப்பம்சங்களுடன் சிறுவர் சமூகத்தினரை உருவாக்கும் பொறுப்பு நாட்டில் வளர்ந்தோருக்கு உண்டு.

நாட்டின் அனைத்து இன மக்களுக்கு மத்தியில் சமாதானம் மற்றும் சகோதரத்துவத்தை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் "மாகெக்குலு" என்ற சமூக பணிக்காக மாவட்ட செயலாளர்களுக்கும் வாழ்வின் எழுச்சி திணைக்கள அதிகாரிகளுக்கும் ஜனாதிபதியினால் விருதுகள் வழங்கப்பட்டன. (இ-3)

# சீனாவுக்கு வழங்கப்படவுள்ள 15 ஆயிரம் ஏக்கர் காணியில் 95 வீதம் அரச காணிகள்

## அமைச்சர் மலிக் தகவல்



(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் சிறப்பு பொருளாதார வலயத்தை உருவாக்குவதற்கு சீனாவுக்கு வழங்கப்படவுள்ள 15 ஆயிரம் ஏக்கர் காணிகளில் 90- 95 வீதமான காணிகள், அரச காணிகளே என்று அனைத்துலக வர்த்தக, அபிவிருத்தி மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு வழங்கப்படவுள்ள 15 ஆயிரம் ஏக்கர் காணிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் காணிகள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இனங்காணப்படும். ஏனைய 10 ஆயிரம் ஏக்கர் காணிகள் மொனராகல, மாத்தறை மாவட்டங்களில் ஒதுக்கப்படும்.

இந்த தேவைக்காக காடுகளோ, வனவிலங்கு பாதுகாப்பிடங்களோ பயன்படுத்தப்படாது. தனியார் காணிகள் உரிமையாளர்களின் ஒப்புதலுடன் மாத்திரம் தகுந்த இழப்பீடு வழங்கப்பட்டே இதற்காக பெறப்படும். சுமார் 200 வீடுகள் மாத்திரமே இந்த திட்டத்துக்காக இடமாற்றம் செய்யப்பட வேண்டியிருக்கும்.

நெடுஞ்சாலை அபிவிருத்திக்காக காணிகள் பெறப்படுவதில் கையாளப்படும் அதே அணுகுமுறை தான் இங்கும் கையாளப்படும். 15 ஆயிரம் ஏக்கர் காணிகளும் ஒரே தடவையில் முதலீட்டாளர்களிடம் வழங்கப்படாது. மூன்று கட்டங்களாகவே நிலங்கள் வழங்கப்படும்.

இந்த பொருளாதார வலயத்தில் 2400 தொழிற்சாலைகள் உருவாக்கப்படும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இதன்மூலம் அடுத்த சில ஆண்டுகளில் 4 இலட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இந்தப் பகுதியில், இயற்கை எரிவாயு மின் நிலையம், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கப்பல்களை பழுது பார்க்கும் தளம் என்பனவும் அமையவுள்ளன. இதன் மூலம இலங்கைக்கு 4 பில்லியன் டொலர் முதலீடுகள் கிடைக்கும்.

நாட்டில் வேறு பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளும் இந்த வலயத்துக்கு மாற்றப்படும்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டு குத்தகைக்கு வழங்கும் உடன்பாட்டை இரண்டாவது தவணைக்காலத்துக்கு நீடிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# காணி அபகரிப்பு குறித்து இலங்கையிடம் அதிருப்தியை வெளியிட்டது சீனா

அம்பாந்தோட்டையில் காணிகளை அபகரிக்க சீனா முனைவதாக, மேற்கொள்ளப்படும் பரப்புரைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திடம் சீன அரசாங்கம் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அம்பாந்தோட்டை சிறப்பு பொருளாதார வலயத்துக்கு காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதாக பொதுமக்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்படுத்தும் வகையில் செயற்படுபவர்கள் தொடர்பாக, சீன அரசாங்கத்திடம் மூன்று சீன நிறுவனங்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளன.

கடந்த 6 ஆண்டுகளாக இலங்கையில் இயங்கி வரும் இந்த நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சீன அரசாங்கம் அனுப்பி வைத்துள்ளது.

அத்துடன் சீனா தொடர்பாக முன்னெடுக்கப்படும் பொய்யான பரப்புரைகள் குறித்து அதிருப்தியடைவதாகவும் சீன அரசினால் இலங்கை அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியினரே, அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கரில், சிறப்பு பொருளாதார வலயத்தை அமைக்கும் சீனாவின் திட்டத்துக்கு எதிராக பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இன்று ஒரு தகவல்

## எந்த வேலையையும் செய்யலாமா?

ஒரு பதிப்புலகச் சகோதரர் வெளியூருக்குப் போக வேண்டிய புத்தகங்களைத் தாமே பார்சல் கட்டிக்கொண்டிருந்தார். அந்தக் கோலத்திலேயே அவரை நான் சந்தித்தேன். தான் செய்தது தவறில்லை என்று விளக்கினார்.

நான் பொறுமையாகக் கேட்டுவிட்டுச் சொன்னேன்.

"எவரும் எந்த வேலையையும் பார்க்கலாம். அதில் தவறே இல்லை. பையன் எங்கே?'' என்றேன். ''ரேஷன் கடைக்குப் போயிருக்கிறான்'' என்றார். ''அவனை அனுப்பியிருக்கக்கூடாது'' என்றேன். ''ஏன்?'' என்றார். ''உங்களுடைய நேரம் பொன்னானது. உங்களுடைய ஏகப்பட்ட கடிதங்கள் காத்திருப்பதைப் பார்க்கிறேன். அதற்கு நீங்கள் பதிலிட்டிருக்கலாம். அடுத்ததாக என்ன தலைப்பில் புத்தகம் வெளியிடலாம் எனச் சிந்திக்கலாம். அலுமாரியில் அடுக்கி வைத்துள்ள ஸ்கிரிப்டுகளைப் படித்துப் பார்த்து அச்சிடக் கொடுக்கலாம். வியாபாரத்தை விருத்தி செய்வது எப்படி? என்று திட்டமிடலாம். இவையெல்லாம் உங்களால் மட்டுமே சிறப்பாகச் செய்ய முடியும். இவற்றை ஓர் அலுவலகப் பையனால் செய்ய முடியாது. ஆனால் நீங்கள் இப்போது தரையில் உட்கார்ந்து செய்து கொண்டிருக்கிறீர்கள். அதை யார் வேண்டுமானாலும் செய்யலாம்'' என்றேன்.

அவர் சுவாரசியமாகக் கேட்க ஆரம்பித்து நிமிர்ந்து உட்கார்ந்தார். ''நீங்கள் செய்வது அகௌரவம் என்று ஒருபோதும் நான் சொல்லவில்லை. காந்திஜியை விடப்பெரிய மகான் உண்டா? அவர் பிர்லா வீட்டில் தான் பயன்படுத்திய கழிவறையைக் கழுவிவிடவில்லையா? அதில் தவறேதும் இல்லை. உங்களுடைய நேரத்தை மதிப்புமிக்க உழைப்புக்காகச் செலவிடாமல் எவரிடம் தந்தாலும் செய்யக்கூடிய ஒரு செயலில் போய் விரயமாக்குகிறீர்களே!" என்றேன். இப்போதெல்லாம் அவர் பார்சல் கட்ட உட்காருவதே இல்லை என்று கேள்வி.

எந்த வேலையைக் செய்வதும் அகௌரவம் அல்ல. மாறாக ஐயோ! அந்த மனிதனா? அவரெல்லாம் கௌரவமே பார்க்க மாட்டார்! யாரும் இல்லை என்றால் அவரே செய்து விடுவார் என்ற அபிப்பிராயத்தைத் தன்னிடம் பணிபுரிபவர்களிடம் உருவாக்கினால் போதும். ஊழியர்களிடையே வேலை தானாக நடக்கும்.

ஒரு தலைமை ஆசிரியர் தன் பாடசாலை மைதானத்தில் கிடந்த கற்களை எடுத்து ஓரமாகப் போடத் தொடங்கினார். அவ்வளவு தான். திமுதிமுவெனப் பையன்கள் சேர்ந்துவிட்டார்கள். மைதானமே சுத்தம்.

ஒரு பட்டதாரி ஏர் பிடிக்கலாம். வேறு வேலை இல்லை என்றால் தவறே இல்லை!

மனமாற்றத்திற்காகவும் மனமகிழ்ச்சிக்காகவும் அவசரமான சூழ்நிலைகளிலும் எந்த வேலையையும் பார்க்கலாம். தவறே இல்லை.

ஆனால், மூளையைப் பயன்படுத்தி முன்னேற வேண்டியவர்கள் அதைச் செய்யாமல் பிறரால் எளிதாகச் செய்யக்கூடிய வேலைகளைச் செய்து கொண்டு உடற்சக்தியை வீணாக்கிக்கொள்ளக் கூடாது. இது முன்னேற்றத்தின் முன்பாக வைக்கப்படும் மாபெரும் தடைக்கல். சந்தன மரத்தை விறகாக்கி அடுப்பெரிக்கப் பயன்படுத்துவதாவது?

**லேனா தமிழ்வாணன்**




# சிறுவர் அரங்கம்

## தெனாலிராமனும் திருடர்களும்

விஜயநகரப் பேரரசில் அந்த வருஷம் மழையே பெய்யவில்லை. நாடு முழுவதும் வறட்சி . நதிகள், குளங்கள் எல்லாம் வற்றிவிட்டன.

தெனாலிராமன் வீட்டுக் கிணற்றிலும் தண்ணீர் மிகவும் ஆழத்துக்குப் போய்விட்டது. அதிலிருந்து நீர் இறைத்துத் தோட்டத்திற்கு ஊற்றத் தெனாலிராமன் மிகவும் கஷ்டப்பட்டான்.



இந்தச் சமயத்தில்தான் ஒரு நாள் சில திருடர்கள் தெனாலிராமன் வீட்டுக்குள் நுழைந்துவிட்டார்கள். திருடுவதற்குச் சரியான நேரம் பார்த்துத் தோட்டத்தில் பதுங்கி இருந்தார்கள்.

தெனாலிராமன் அதைப் பார்த்துவிட்டான். திருடர்கள் ஒளிந்துகொண்டிருப்பதைத் தன் மனைவியிடம் ரகசியமாகச் சொனனான்.

தெனாலிராமன் அரண்மனையில் வேலை பார்ப்பவன். அவன் நினைத்தால் காவலர்களைக் கூப்பிட்டு அவர்களைக் கைது செய்யலாம். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. அவனுக்கு ஒரு திட்டம் இருந்தது.

மனைவியிடம் சத்தமாகப் பேச ஆரம்பித்தான்.

"நம்ம நாட்டுல பஞ்சம் அதிகமாயிடிச்சி. திருடங்க அதிகமாயிட்டாங்க..."

தன் கணவன் சத்தமாகப் பேசுவது ஏன் என்று மனைவிக்குப் புரியவில்லை. ராமன் தொடர்ந்து பேசினான்.

"நாம்ப கொஞ்ச காலத்துக்கு வீட்டில இருக்குற நகைகள், மத்த விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் பத்திரமா எங்கயாவது ஒளிச்சி வைக்கணும்" என்றான்.

மனைவி ஒன்றும் புரியாமல் தலை ஆட்டினாள்.

"எல்லாத்தையும் பத்திரமா பெட்டிக்குள்ள போட்டு கிணத்துக்குள்ள போட்டுடலாம். பஞ்சம் முடிஞ்சதும் திரும்ப எடுத்துக்கலாம்" என்றான். மனைவியிடம் ஜாடையாக ஏதோ கூறினான். அவளுக்கு விஷயம் புரிந்தது.

அவர்கள் இருவரும் தேவையில்லாத பொருட்கள் எல்லாவற்றையும், ஒரு பெட்டிக்குள் போட்டு தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு போய் கிணற்றில் போட்டார்கள்.

"அப்பாடா! நகையெல்லாம் பத்திரமா இருக்கும்" என்று சத்தமாகச் சொன்னான். ராமன்.

பிறகு இருவரும் வீட்டுக்குள் வந்து படுத்துவிட்டார்கள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த திருடர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. இன்று நல்ல வருமானம்தான் என்று நினைத்தார்கள். கிணற்றுக்குள் இறங்கிப் பெட்டியை எடுக்கப் பார்த்தார்கள்.

அது ரொம்ப ஆழமான கிணறு. எனவே அதில் இறங்க பயந்தார்கள். நிலா வெளிச்சத்தில் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தார்கள். நீர் குறைவாக இருந்தது.

'தண்ணிய எடுத்து வெளியே இறைச்சிட்டா பெட்டிய எடுத்துடலாமே" என்று ஒருவன் கிசுகிசுத்தான். மற்றவர்கள் அதை ஒப்புக் கொண்டார்கள்.




வாளியைக் கிணற்றுக்கு உள்ளே இறக்கி நீரை இறைத்துத் தோட்டத்தில் ஊற்ற ஆரம்பித்தார்கள். பல வாளித் தண்ணீரை இறைத்தும் பெட்டி தட்டுப்படவில்லை. விடா முயற்சியுடன் தொடர்ந்து இறைத்துக் கொண்டே இருந்தார்கள்.

அப்போது சேவல் கூவியது. இன்னும் சிறிது நேரத்தில் வெளிச்சம் வந்துவிடும் என்பதைத் திருடர்கள் புரிந்துகொண்டார்கள்.

"கிளம்பலாம். மீதி தண்ணியை நாளைக்கு இறைக்கலாம்" என்றான் ஒருவன். மற்றவர்கள் ஆமாம் என்று தலையை ஆட்டினார்கள்.

அப்போது அவர்கள் பின்னால் ஏதோ சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் காவலர்கள். அவர்களுக்குப் பக்கத்தில் தெனாலிராமன். "நீங்க நாளைக்கு வந்து தண்ணி இறைக்க வேண்டாம். இன்னிக்கி இறைச்ச தண்ணியே இன்னும் ஒரு வாரத்துக்குப் போதும். இப்ப இவங்க கூட போங்க" என்றான்.

அவர்கள் போனதும் தோட்டம் முழுவதும் இறைக்கப்பட்டிருந்த தண்ணீரைப் பார்த்து ராமனும் அவன் மனைவியும் மகிழ்ச்சியாகச் சிரித்துக்கொண்டார்கள்.

## 23 12.2016 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1783 - ஜோர்ஜ் வாஷிங்டன் இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலகினார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்துப் படைகள் கெய்ரோவில் தரையிறங்கினர்.
- 1916 - முதலாம் உலகப் போர்: எகிப்தின் சினாய்க் குடாவில் கூட்டுப் படைகள் துருக்கியப் படைகளுடன் இடம்பெற்ற சமரில் வெற்றி பெற்றனர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய இராணுவம் வேக் தீவைக் கைப்பற்றியது.
- 1947 - முதலாவது டிரான்சிஸ்டர் பெல் ஆய்வு கூடத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
- 1948 - பிரதமர் டோஜோ உட்பட ஏழு ஜப்பானியப் போர்க் குற்றவாளிகளுக்கு டோக்கியோவின் சுகோமோ சிறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1954 - முதலாவது மனித சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் மேற்கொள்ளப்பட்டது.
- 1958 - டோக்கியோ கோபுரம், உலகின் மிகப்பெரிய இரும்பினாலான கோபுரம், திறக்கப்பட்டது.
- 1972 - நிக்கராகுவா நாட்டின் தலைநகர் மனாகுவாவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 10,000க்கு மேற்பட்டோர் இறந்தனர்.
- 1972 - தென்னமெரிக்காவில் ஆண்டீஸ் மலைத்தொடரில் இடம்பெற்ற விமான விபத்தில் உயிர் தப்பிய 16 பேர் 73 நாட்களுக்குப் பின்னர் காப்பாற்றப்பட்டனர்.
- 1979 - சோவியத் படையினர் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலைக் கைப்பற்றினர்.
- 1986 - எங்கும் தரையிறங்காமல் முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த வொயேஜர் விமானம், டிக் ரூட்டன், ஜீனா யேகர் ஆகிய விமானிகளுடன் கலிபோர்னியாவில் தரையிறங்கியது.
- 1990 - 88மூ சிலொவேனிய மக்கள் யூகொஸ்லாவியாவில் இருந்து பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.
- 2004 - தெற்குப் பெருங்கடலில் உள்ள மக்குவாரி தீவில் 8.1 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 2005 - அசர்பைஜான் விமானம் புறப்பட்டு சில நிமிடங்களில் பக்கூ நகரில் வீழ்ந்து நொருங்கியதில் 23 பேர் கொல்லப்பட்டனர்.
- 2005 - சாட் சூடானுடன் போரை அறிவித்தது.

### பிறப்புக்கள்

- 1807 - அந்தோனி மரிய கிளாரட், ஸ்பானிய ரோமன் கத்தோலிக்க மறைப்போதகர். (இ. 1870)
- 1902 - சரண் சிங், இந்தியக் குடியரசின் 7வது பிரதமர் . (இ. 1987)
- 1956 - பொன்னம்மான், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர். (இ. 1987)

### இறப்புகள்

- 1907 - பியேர் ஜான்சென், பிரெஞ்சு வானியலாளர் . (பி. 1824)
- 1972 - அந்திரே தூப்பொலியெவ், சோவியத் விமான வடிவமைப்பாளர் . (பி. 1888)
- 1981 பி. கக்கன் இந்திய விடுதலை போராட்ட வீரர். (பி.1908)
- 2004 - பி. வி. நரசிம்மராவ் ஒன்பதாவது இந்தியப் பிரதமர் . (பி. 1921)
- 2013 - மிக்கைல் கலாசுனிக்கோவ். ஏகே47 துப்பாக்கியை வடிவமைத்தவர். (பி. 1919)
- 2014 - கே. பாலச்சந்தர், திரைப்பட இயக்குனர் . (பி. 1930)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 100 | 90 | 40 | 40 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 100 | 110 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 70 | 120 | 100 | 160 | 100 |
| தக்காளி | 100 | 100 | 60 | 80 | 70 | 100 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 | 40 | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 30 | 50 | 20 | 30 | 30 | 50 | 30 |
| கரட் | 100 | 80 | 80 | 85-140 | 100 | 160 | 80 |
| பூசணி | 50 | 50 | 35 | 50 | 40 | 60 | 40 |
| புடோல் | 80 | 80 | 60 | 80 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 50 | 45 | 40 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 100 | 100 | 140 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 100 | 120 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 300 | 400 | 220 | 350 | 250 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 100 | 80 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 50 | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 100 | 120 | 70 | 100 | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 60 | 100 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 50 | 60 | 70 | 120 | 70 |
| கறிமிளகாய் | 200 | 120 | 130 | 160 | 160 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 400 | — | 250 | 400 | 400 | 300 | — |
| போஞ்சி | 120 | 100 | 260 | 120 | 100 | 120 | 120 |
| கத்தரித்தம்பிள்ளை | 30 | 50 | 50 | 40 | 30 | 50 | 30 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 40 | 50 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 | 400 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 20-40 | 50 | 35 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 300 | 400 | 210 | 300 | — | 400 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 200 | — | — | 240 | — | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 50 | 60 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 35 | 60 | 10 | 30 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 10 | 30 | 10 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 120 | 50 | 80 | 60 | 120 | 70 |

# பிணை முறி விவகாரம்;பிரதமர் மீது குற்றம்சாட்டி கோப் குழுத் தலைவர் சபாநாயகருக்கு கடிதம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை, முறிகள் விற்பனை மோசடி தொடர்பாக கோப் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி சபாநாயகர் கரு ஜெயசூரியவிற்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

மத்திய வங்கி மோசடி தொடர்பில் கோப் குழுவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் சட்டமா அதிபரிடம் வியாக்கியானம் கோரியிருக்கின்றமை தொடர்பாகவே சுனில்ஹந்துன்நெத்தி சபாநாயகரிடம் விளக்கம் கோரியுள்ளார்.

சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையானது நாடாளுமன்றத்திற்கு உரித்தாகும் என்று தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள கோப் குழுவின் தலைவர் சுனில்ஹந்துனநெத்தி, அவ்வாறான அறிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு சபாநாயகருக்கு மாத்திரமே அதிகாரம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்கமைய குறித்த அறிக்கை தொடர்பாக பிரதமரினால் சட்டமா அதிபரிடம் வியாக்கியானம் கோரியுள்ளமையானது சபாநாயகரின் அதிகாரங்களை பிரதமர் பலவந்தமாக தன்வசப்படுத்திக் கொள்வதற்கு சமனாகும் என்றும் கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயங்களைக் கவனத்திற்கொண்டு குறித்த அறிக்கையை அடுத்தவருடம கூடவுள்ள நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி கோரிக்கை முன்வைத்துள்ளார். (இ-3)

## இலங்கைக்கு ஜப்பான் போர்க்கப்பல்

(கொழும்பு)

இலங்கை கடற்படைக்கு போர்க் கப்பல் ஒன்றை வழங்குவதற்கு ஜப்பானிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஜப்பானின் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் ஹிரோயுகி மியாசாவா, இதனைத் தெரிவித்துள்ளார் என்று இலங்கை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான்-இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்பதற்காக, ஜப்பானின் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் ஹிரோயுகி மியாசாவா இலங்கை வந்துள்ளார்.

நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சில் இந்த பாதுகாப்புக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, பிராந்திய நிலைமைகள், பாதுகாப்புக் கொள்கை, பாதுகாப்பு ஒத்துழைப்பு, பரிமாற்றங்கள் உள்ளிட்ட இருதரப்பு பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், இலங்கையின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தவும் ஜப்பான் முழுமையான ஆதரவை வழங்கும் என்று, ஜப்பானிய உதவிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.(இ-3)

## குவைத்தில் தலைமறைவாகிய இலங்கைப் பெண்கள் கைது

(கொழும்பு)

குவைத்நாட்டில்தலைமறைவாகி இருந்த இரண்டு இலங்கை பெண்கள் உட்பட 6 பெண்களை அந்நாட்டு பொலிஸ் அதிகாரிகள் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த 8 பேரில் இரண்டு இலங்கையர்கள், இரண்டு பிலிப்பைன்ஸ் பெண்கள் மற்றும் 4 எதியோப்பிய பிரஜைகள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கைது செய்யப்பட்ட பெண்களை நாடுகடத்துவதற்கு உரிய அதிகாரிகளிடம் அனுப்பி வைத்துள்ளதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## வைத்தியசாலையில் தீ

அம்பலாங்கொடை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் தீடீரென பரவிய தீயினால் அங்குள்ள வைத்திய உபகரணங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீ பரவலானது நேற்று அதிகாலை ஏற்பட்டுள்ளது.

தற்போது தீயணைக்கப்பட்டுள்ள நிலையில், உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. மின்சார கசிவினால் குறித்த தீ பரவியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.(இ-3)

## லசந்தவுடனான தொலைபேசி உரையாடல் உண்மை தான் ஒப்புக்கொள்கிறார் மகிந்த



சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவுடன் தாம் சில தடவைகள் பேசியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். லசந்தவுடன் மகிந்த தொலைபேசியில் உரையாடும் ஒலிப்பதிவு ஒன்று அண்மையில் இணைய ஊடகங்களில்வெளியிடப்பட்டிருந்தது. இது குறித்து மகிந்தவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இது ஒன்றும் புதிய விடயமல்ல எனவும் சில தடவைகள் லசந்தவுடன் தாம் தொலைபேசியில் உரையாடியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். லசந்த ஊடகவியலாளர் என்பதனால் ஏனைய ஊடகவியலாளர்களைப் போன்றே தொலைபேசி உரையாடல்கள் பதியப்பட்டிருக்கும் என அவர் தெரிவித்தார். (இ-3)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 935

டிலக்ஷி கண்ணா




வேணு




ராதிகா





மதுனா





அபிஷன்




துளசி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# ஜனவரி 8-14 வரை நல்லிணக்க வாரம்

## அமைச்சரவை அங்கீகாரம்

எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 8ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையான ஒருவார காலத்தை "தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்க வாரமாக" பிரகடனப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. அமைச்சரவைத் தீர்மானத்தில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கில் இந்த "தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்க வாரம்" பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் அனுஷ்டிக்கப்படவுள்ள குறித்த வாரத்துடன் இணைந்ததாக நாடு தழுவிய ரீதியில் அனைத்துப் பாடசாலைகள், ஊடகங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களை மையமாகக் கொண்டு தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்ற பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் என கூறப்படுகின்றது.

மேலும் தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்க அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (இ-3-10)

# ஆயிரம் மில்லியன் நட்டஈடு வேண்டும்

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி நீதியான சமூகத்திற்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டாளர் பேராசிரியர் சரத் விஜேசூரியவிடம் 1000 மில்லியன் ரூபா நட்டஈடு கோரியுள்ளார். தன்னை அவதூறாக பேசியமைக்கு எதிராக குறித்த 1000 மில்லியன் ரூபா நட்ட ஈட்டைக் கோரி கடிதமொன்றையும் அனுப்பியுள்ளார்.

சரத் விஜேசூரிய, கருணாசேன ஹெட்டியாராச்சியை பதவி விலகுமாறு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# களுத்துறையில் 2674 டெங்கு நோயாளர்கள்

ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலப்பகுதியில் களுத்துறை மாவட்டத்தில் மாத்திரம் 2674 டெங்கு நோயாளர்கள இனங்காணப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்ட இணைப்புக்குழு கூட்டத்தின் போது இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் மகிந்த சமரசிங்கவினால் கேட்கப்பட்ட கேள்விக்கு சுகாதார துறையினர் மேற்கண்டவாறு பதிலளித்தனர்.

களுத்துறை மாவட்டத்தில் சுகாதார அத்தியட்சகர் பிரிவில் 2330 டெங்கு நோயாளர்களும் தேசிய சுகாதார விஞ்ஞான பணிமனை நிர்வாகப் பிரிவில் 344 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளதாக அத்தியட்சகர் தெரிவித்தார். (இ-3)

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 18

"வேட்டையாடும் விலங்குகளுக்கு மான் என்ன அப்பாவி என்றா தெரியும்? சி.பி.ஐயின் சிறப்புப் புலனாய்வுக்குழுவின் செயலையும் நான் அப்படித்தான் பார்க்கின்றேன். அவர்கள் நீதியைவிட அநீதியின் மீதே அதிகம் ஆசைப்பட்டார்கள். நியாயத்தைவிட அநியாயத்தையே அதிகம் கட்டிக் கொண்டு காதலித்தார்கள். அதனால் அவர்கள் வீசிய வார்த்தைகளைப் பற்றியோ சூட்டிய கதைகளைப் பற்றியோ எனக்கு வருத்தமோ கவலையோ இல்லை. ஆனால் உடனிருந்தே உலை வைத்தவர்களை நினைத்துத்தான் வேதனைப்படுகிறேன்."



..என் கணவரை முதல் குற்றவாளியாக்க வேண்டும். அதற்கு ஏற்ப என்னை அப்ரூவராக மாற்ற வேண்டும் என்பதுதான் அவர்கள் நோக்கம். அதற்காகவே எங்களுக்குத் திருமணம் நடந்துவிட்டது. கைதாகும்போது கழுத்தில் தாலி, காலில் மெட்டி, வயிற்றில் குழந்தை, கூடவே கணவர் இருந்தும்கூட, பெர்சனல் செர்ச் (Personal seach memo) மெமோவில் தாலி - மெட்டி அணிந்து இருந்ததைப் பதிவுசெய்து முதல் முறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது குறிப்பிட்டிருந்தும் அதன் பிறகு தயார்செய்த ஆவணங்களில் எல்லாம் திட்டமிட்டு மறைத்து வைத்திருந்தார்கள். இப்படி அனைத்தையும் ஒன்றாக சேர்த்து பார்த்தோமானால் சிவராசனை பிடித்துவிட வேண்டும் என்ற நோக்கம் சி.பி.ஐயினருக்கு தொடக்கத்தில் இருந்தே இருக்கவில்லை என்பது தெரியும். முழுப் பூசணிக்காயையும் இலை சோற்றுக்குள் மறைத்து வைத்து சாதித்தவர்கள் கார்த்திகேயன் தலைமையிலான சி.பி.ஐயின் சிறப்பு புலனாய்வு குழுவினராகத்தான் இருக்க முடியும்.

நான் எழுதும் புத்தகம் பேசுகிறதா? இல்லை இந்தப் புத்தகத்தினுள் நான் பேசுகின்றேனா என்ற வியப்பு எனக்குள்.

என் மீது வீசப்பட்ட கொடிய வார்த்தைகள் எவ்வளவு? கொடை சாய்ந்துபோகும் அளவுக்கு திணிக்கப்பட்ட அவமானங்கள் எவ்வளவு? என்னை நானே அறியாதபடி என் முகம் முழுக்கக் கட்டுக்கதைகளாக சேறு பூசப்பட்டிருந்ததே. ஏன்? என்றோ செத்துப் போனவள் இன்று இந்தப் புத்தகத்தில் பேசுகிறாளே எப்படி என்று எனக்குள் ஆயிரமாயிரம் கேள்விகள்.

வேட்டையாடும் விலங்குகளுக்கு மான் என்ன அப்பாவி என்றா தெரியும்? சி.பி.ஐயின் சிறப்புப் புலனாய்வுக்குழுவின் செயலையும் நான் அப்படித் தான் பார்க்கின்றேன். அவர்கள் நீதியைவிட அநீதியின் மீதே அதிகம் ஆசைப்பட்டார்கள். நியாயத்தைவிட அநியாயத்தையே அதிகம் கட்டிக்கொண்டு காதலித்தார்கள். அதனால் அவர்கள் வீசிய வார்த்தைகளைப் பற்றியோ, சூட்டிய கதைகளைப் பற்றியோ எனக்கு வருத்தமோ, கவலையோ இல்லை. ஆனால், உடனிருந்தே உலை வைத்தவர்களை நினைத்துத்தான் வேதனைப்படுகிறேன். அப்பாவி எனத் தெரிந்தே என் மீது அழுக்குச் சேற்றைவாரி பூசியவர்களுக்காக வெட்கப்படுகிறேன். நினைத்துப் பார்க்கும்போதே நெடுந்துயரம் என்னைப் பிடித்தாட்டுகிறது. எல்லாவற்றையும் இந்தப் புத்தகத்தின் உள்ளே இறக்கிவைக்க முடியவில்லை. இதில் உள்ள ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு யுகத்தின் கதை சொல்லும். என் வேதனை உங்களையும் தாக்கிவிடக்கூடாதல்லவா?

2000ஆம் ஆண்டு எனக்கு மட்டும் தண்டனை குறைப்பு நடந்தது. 2003ஆம் ஆண்டு வரை என் வாய் கட்டப்பட்டு இருந்தது. அதன் பிறகு சில வருடாங்கள் எனக்கு நானே வாய் கட்டி மௌனமாக இருந்து கொண்டேன். மிக நெருக்கடியான காலகட்டங்களில்கூட நான் ஏதும் பேசவில்லை. கணவர் உட்பட மூவருக்கு தூக்குக்கயிறு ஊசலாடியபடியே இருந்தது. அந்த நாட்களில் மூவர் கழுத்துகளையும் சுற்றி இருந்த தூக்குக்கயிறே பலரது கவலைக்கும் பதற்றத்துக்கும் காரணமாக இருந்தது. எப்படியாவது காப்பாற்றி விடவேண்டும் என தவித்துக் கொண்டிருந்தனர். அந்த வேதனையும் துடிப்பும் எனக்கு மிக அதிகமாகவே இருந்தது. அதுவே என்னை மிகுந்த சகிப்புத்தன்மை கொண்டவளாக மாற்றியிருந்தது.





எனது அந்த மௌனத்தையே சிலர் தாங்களுக்கு சாதகமாக மாற்றி திட்டமிட்டு தவறுகளை சிறிதும் உறுத்தல் இன்றி மற்றவர்கள் உணரவே முடியாதபடி செய்து முடித்தார்கள். மரணக்கயிறு என்ற திரையை பிடித்துக்கொண்டு எனக்கு எதிராக விஷ அம்புகளை எய்தார்கள். அந்த விஷம பிரசாரமே என்னை 26 ஆண்டுகளைக் கடந்தும் சிறையிலேயே நிறுத்தி வைத்திருக்கிறது.

(வலிகள் தொடரும்...)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர் பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் தலைவர் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு மருதங்கேணி பிரதேச செயலர்,கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ



யாழ்.மாவட்ட செயலக ஒளிவிழா நிகழ்வு கடந்த திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக்கழகத் தலைவர் செ.ரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல்வேறு கிறிஸ்தவ கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.அமெரிக்க மிஷன் திருச்சபையின் பங்குத்தந்தை ஆசியுரையினை வழங்கியதுடன் கிறிஸ்மஸ் செய்தியினை யாழ்.ஆயர் இல்ல அருட்தந்தை நேசநாயகம் வழங்கியிருந்தார்.

(படங்கள்:-பொ.சோபிகா)

# வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட மூன்று மாடுகள் நேற்றுப் பறிமுதல்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கரணவாய் மண்டான் உப்பு வீதி வழியாக நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2மணியளவில் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 3 மாடுகள் மீட்கப்பட்டதாக நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.பி. ஏ.பிரியந்த தெரிவித்தார்.

பொலிஸார் ரோந்து சென்று கொண்டிருந்த போது அனுமதிப்பத்திரம் இன்றி கொண்டு செல்லப்பட்ட இம்மூன்று மாட்டில் ஒன்றிற்கு காது அடையாளம் உள்ளது.மாட்டினை கொள்வனவு செய்ததற்கான ஆவணம் காண்பிக்கும் பட்சத்தில் மாடுகளை கொண்டு வந்தவர்களிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் இல்லையேல் நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாகவும் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-60)

# பயணம் நூல் வெளியீடு





கடற்படையால் காவு கொள்ளப்பட்ட மீனவர் அன்ரனி யேசுதாசனின் 2 ஆம் ஆண்டு நினைவையொட்டி அவரின் புதல்வியும் கவிஞருமான செல்வி.மேரி அஜந்தா அன்ரனி யேசுதாசனினால் எழுதப்பட்ட "பயணம்" எனும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு கடந்த திங்கட்கிழமை எழுவைதீவுக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் படகு ஒன்றில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி.கா.நிருபா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கவிதை நூலினை ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயகம் வெளியிட்டு வைக்க அதன் முதற் பிரதியினை வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் பெற்றுக் கொண்டார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு எழுவைதீவு கடற்பரப்பில் நள்ளிரவு வேளை மீன்பிடியில் ஈடுபட்டிருந்த எழுவைதீவைச் சேர்ந்த அன்ரனி யேசுதாசனின் படகை நெடுந்தீவிலிருந்து காரை நகரை நோக்கி வேகமாக வந்த கடற்படையினரது போறா படகு மோதித் தள்ளியதால் அவரின் படகு உடைந்து முற்றாகச் சேதமாகியதோடு அன்ரனி யேசுதாசனும் கடும் காயத்துக்குள்ளானார்.

கடும் காயத்துக்குள்ளான அவர் உடைந்த படகு துண்டின் உதவியோடு கடலில் தத்தளித்த நிலையில் சில மீனவர்களால் கரை சேர்க்கப்பட்டு, ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்திருந்தார்.

இச்சம்பவத்தில் காயப்பட்டவரை காப்பாற்ற முயலாது ஓடி மறைந்த எட்டு கடற்படை அதிகாரிகள் கைது செய்யப்பட்டு, ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தற்பொழுதும் வழக்கு நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-9)



பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து விளையாட்டுக்கழகம், பொது அமைப்பு உள்ளிட்ட பதினான்கு அமைப்புக்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்விலேயே இவை வழங்கப்பட்டன.இந் நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விளையாட்டுக்கழகங்கள் , மாதர் சங்கம், கட்சி உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ-60)

# படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் உடல் அடக்கம்



குடத்தனை பொற்பதிப் பகுதியில் கொள்ளையரினால் வெட்டி உயிரிழந்த குடும்பப் பெண்ணின் இறுதிச் சடங்கு நேற்று நடைபெற்றது.

கடந்த 19.12.2016 அன்று இரவு வெட்டிக் கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது.

ஆயிரக்கணக்கான மக்களின் அஞ்சலியினை அடுத்து நேற்று முற்பகல் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய உடல் அடக்கம் செய்யப்பட்டது. (இ-60)

# பயிற்சித்தர விவசாயப் போதனாசிரியர்கள் நியமனம்

## 12 பேருக்கு வடக்கு விவசாய அமைச்சு வழங்கியது

வடக்கு விவசாயத் திணைக்களத்தில் பணியாற்றுவதற்கென பயிற்சித்தர விவசாயப் போதனாசிரியர்களாகப் 12 பேர் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கடந்த செவ்வாய்க்கிழமை அலுவலகத்தில் இடம்பெற்ற இதற்கான நிகழ்ச்சியின்போது வழங்கி வைத்துள்ளார்.

விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு விரிவாக்க சேவையை முன்னெடுப்பதில் விவசாயப் போதனாசிரியர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. எனினும், வடக்கு விவசாயத் திணைக்களத்துக்கு அனுமதிக்கப்பட்ட 161 விவசாயப் போதனாசிரியர்களது ஆளணியில் தற்போது 103 விவசாயப் போதனாசிரியர்களே கடமையாற்றி வருகின்றனர். 58 வெற்றிடங்கள் நிலவுகின்றன. இப்பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் கோரப்பட்டுள்ள தகுதியான விவசாய டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் போதிய அளவு வடக்கில் இல்லாத காரணத்தாலேயே இந்த வெற்றிடங்களை நிரப்ப முடியாத நிலை நீடிக்கிறது.

இவ்வெற்றிடங்களை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்யும் நோக்கிலேயே க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞான பாடத்தில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளில் இருந்து போட்டிப் பரீட்சையின் மூலம் 12 பேர் பயிற்சித்தர விவசாயப் போதனாசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பயிற்சிக் காலத்தில் இவர்கள் வவுனியா விவசாயக் கல்லூரியில் விவசாய டிப்ளோமா பயில்வதற்கு வேதனத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்படும் எனவும் அவ்வாறு பட்டம் பெற்றவர்கள் பின்னர் நிரந்தரமாக விவசாயப் போதனாசிரியர் பணிகளில் உள்ளீர்க்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நியமனக்கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்ச்சியில் விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-3)

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புகள்






சசிகலா. இரத்த உறவு ஏதும் இல்லை. மைசூரில் உடன் விளையாடியவரும் இல்லை. சர்ச் பார்க்கில் உடன்படித்தவரும் இல்லை. சாதாரணமாக திரைப்பட கேசட் வாடகைக்கு விடடுக்கொண்டிருந்தவர்... அவ்வளவுதான்..! 'அவர் எபபடி இந்த அளவுக்கு ஜெயலலிதாவுக்கு நெருக்கமானார்... அவர் எப்படி தமிழ் நாட்டின் ஓர் அதிகார மையம் ஆனார்... அவரின் ஆசி கிடைத்து விட்டால்போதும், எந்த உச்சத்தையும் தொடலாம் என்ற அளவுக்கு அவர் எப்படி உயர்ந்தார்...? அவர் குடும்பத்தால் தனக்குக் கெட்ட பெயர் என்று தெரிந்த பின்னும், அவரை முற்றும் முழுவதுமாக ஜெயலலிதா கைவிட மறுப்பதன் காரணம் என்ன...? சோ முதல் சுப்பிரமணிய சுவாமி வரை, எவ்வளவோ முயற்சித்துவிட்டார்கள். ஆனாலும், அவர்கள் நட்பைப் பிரிக்க முடியவில்லை என்ன காரணம்...?

இதற்கான விடையைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், ஜெயலலிதாவைப் புரிந்துகொள்ள வேண்டும். அவரைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், அவர் பாடசாலைக் காலத்தில் நடந்த சம்பவத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.



## செய்ந்நன்றி கொல்லாத, அம்மு...!

அம்மு, பள்ளி நாட்களில் வெகுநேரம் தன்னை அழைக்கவரும் வண்டிக்காகக் காத்திருந்திருக்கிறார். ஆம், அது எப்போதும் தாமதமாகத்தான் வந்து இருக்கிறது. அம்முவுக்கு மெட்ரிக் தேர்வுகள் தொடங்கி விட்டன. சர்ச் பார்க் பள்ளியில், தேர்வு எழுதுவதற்கான ஹால் டிக்கெட்டைப் பெற்றுக் கொண்டு, லேடி வெல்லிங்டன் பாடசாலைக்குத் தேர்வு எழுத போகவேண்டும். ஹால் டிக்கெட் வாங்கியாகி விட்டது. ஆனால், அவரை அழைத்துச்செல்ல வாகனம் வரவில்லை. அனைத்து மாணவிகளும் சென்று விட்டார்கள். அம்முவும், அவர் தோழி ஸ்ரீமதியும் மட்டும் பாடசாலையில் காத்திருக்கிறார்கள். வாகனம் வரவில்லை. பிடித்தமானவர்களுடன் இருக்கும் போது, கடிகார முட்களுக்கு றெக்கை முளைத்துவிடும் அல்லவா...? அதுபோல றெக்கை முளைத்துக் காலம் பறக்கிறது... அந்தச் சமயத்தில் ஸ்ரீமதியை அழைத்துச் செல்ல... அவரின் தந்தை வருகிறார். ஸ்ரீமதியின் தந்தையும் பிரபலமான புகைப்படக்காரர். அவருக்கு சந்தியாவை நன்றாகத் தெரியும். அம்முவுக்கும் அவரை நன்றாகத் தெரியும். அவர், "அம்மு உன் வாகனம் வருவது போல் தெரியவில்லை... எங்களுடன் வா, உன்னைப் பாடசாலையில் விட்டு விடுகிறேன்..." என்கிறார். அம்முவுக்குத் தயக்கம். அவர் எவரிடமிருந்தும் எந்த உதவியையும் எதிர்பார்த்ததும் இல்லை... பெற்றதும் இல்லை. தயங்கி நிற்கிறார். ஸ்ரீமதியும், "இப்படியே நின்றுகொண்டிருந்தால், தேர்வைக் கோட்டைவிட்டுவிடுவாய். வா... அப்பாவுடன் செல்லலாம்" என்று வற்புறுத்துகிறார்.

அம்மு உணர்கிறார். இந்தத் தேர்வுக்காகத்தானே இவ்வளவு கஷ்டப்பட்டோம். அதைவிட்டால் எல்லாம் வீணாகிவிடுமே...! வேறு வழியில்லை... வாகனம் வருவதற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை. "அம்மாவின் வேலையைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், அவருக்கு என் படிப்பு குறித்தும், என் தேர்வு குறித்தும் எந்தக் கவலையும் இல்லையா...?" என்று கண்ணீர் சிந்தியபடி, ஸ்ரீமதியின் அப்பாவுடன் தேர்வெழுதச் செல்கிறார்.

கவலையுடன்தான் அந்தத் தேர்வை எழுதினார். நடுவே கண்ணீரும் சிந்தத்தான் செய்தார். ஆனால், இது எதுவும் அவர் வெற்றிக்குத் தடையாக இல்லை. ஆம், இந்தத் தேர்வில்தான் அதிக அளவில் மதிப்பெண் பெற்று, மாநில அளவில் சாதனை படைத்தார்.

அவர் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றதோ அல்லது அதற்காக விருது வாங்கியதோ மட்டும் செய்தி இல்லை. அதற்குப் பின்னால் இன்னொரு செய்தி இருக்கிறது. அதை ஸ்ரீமதியே சொல்கிறார், "அன்று நாங்கள் செய்தது சிறு உதவிதான். ஆனால், என்னைப் பார்க்கும்போதெல்லாம், 'உன் அப்பா மட்டும் என்னை அழைத்துச் செல்லவில்லை என்றால், என்னால் தேர்வெழுதி இருக்கவே முடியாது' என்று சொல்லிக்கொண்டே இருப்பார். சிறு உதவியையும் மறவாதவர் அம்மு."

ஆம். சிறு வயதில் அம்முவிடம் இருந்த இந்தப் பழக்கம்தான், சினிமாவில், அரசியலில் ஜெயலலிதாவாக பல உச்சங்களைத் தொட்டபின்னும் தொடர்ந்து இருக்கிறது. அதில் ஒன்றுதான் சசிகலாவுடனான இறுக்கமான நட்பு.

அனைவரும் கைவிட்ட ஒரு கடினமான காலத்தில் சசிகலா உடன் இருந்தார். அந்த நன்றியை என்றும் ஜெயலலிதா மறக்கவில்லை. அதுதான் சசிகலாவை இந்த அளவுக்கு அவரிடம் நெருக்கம் ஆக்கி இருக்கிறது.

ஜெயலலிதாவே சசிகலா குறித்து ஒரு பேட்டியில் இவ்வாறாகச் சொல்கிறார், "என் மீதான அவருடைய விசுவாசத்தின் காரணமாகவே, மற்றவர்களால் மிகத் தவறாகச் சித்தரிக்கப்பட்ட, புரிந்துகொள்ளப்பட்ட ஒரு பெண் அவர். எனக்காக அவர் மிகச் சிரமப் பட்டிருக்கிறார்."

## "ஆம்.. நான் தமிழச்சி தான்...!"

ஜெயலலிதா, நன்றி மறக்காதவர் மட்டும் அல்ல. அசாதிய தைரியம் கொண்டவரும்தான். சினிமாவில் பரப்பரப்பாக நடிக்கத் தொடங்கிவிட்டார்.

'ஆயிரத்தில் ஒருவன்' படத்தின் படப்பிடிப்பு கர்நாடக கர்வார் பகுதி யில் ஒரு சிறு தீவில் நடக்கிறது. அந்தப் பகுதியில் வசதியான அறைகள் எதுவும் இல்லாததால், படப்பிடிப்புக் குழு முழுவதும் மூன்று மணி நேரம் தொலைவில் உள்ள கோவாவில் தங்கி இருக்கிறது. எதேச்சையாகப் படப்பிடிப்புக் குழு அம்முவை மறந்து கோவாவில் தனியாகவிட்டுச் சென்று விடுகிறது. 17 வயது பெண். அப்போது சிகரம் தொட்ட நடிகையும் இல்லை. அது



வும் கோவாவில் அவரை யாருக்கும் தெரியவும் தெரியாது. ஆனால், அவர் கொஞ்சமும் அஞ்சவில்லை. தைரியமாகச் சூழ்நிலையைக் கையாள்கிறார்.

தனியாக கர்நாடகா சென்று, அங்கு ஒரு கட்டுமரக்காரர் துணையுடன் படப்பிடிப்பு நடந்த அந்தச் சிறு தீவு பகுதியை அடைகிறார். ஆம், அப்போதிலிருந்து, இப்போது வரை இந்தத் தைரியம்தான் ஜெயலலிதா.

இன்னோர் உதாரணமும் இருக்கிறது. திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கிய காலகட்டத்தில், வார இதழ் ஒன்றுக்கு, "என் பூர்வீகம் தமிழகம். நான் தமிழச்சி..." என்ற தொனியில் ஒரு பேட்டி தருகிறார். அந்தச் சமயத்தில், கர்நாடகாவில் பலரும், அவரைக் கன்னடப் பெண் என்றுதான் நினைத்திருந்தார்கள். ஆனால், இவர் அளித்த இந்த பேட்டி அவர்களுக்கு ஆச்சர்யத்தைக் கொடுத்தது. கன்னடவெறியர்களுக்கு இது அசௌகர்யத்தைக் கொடுத்தது. அதே நேரத்தில், ஒரு படப்பிடிப்பில் கலந்துகொள்வதற்காக கர்நாடகாவில் சாமுண்டி ஸ்டூடியோ செல்கிறார். இந்தத் தகவல் அறிந்து 100இற்கும் மேற்பட்ட கன்னடவெறியர்கள், அந்த ஸ்டூடியோவை முற்றுகையிடுகிறார்கள். "ஜெயலலிதா மன்னிப்புக் கேட்டால்தான், இந்த இடத்திலிருந்துச் செல்வோம்" என்கிறார்கள். படப்பிடிப்புக் குழு எவ்வளவோ பேசிப் பார்க்கிறது. அவர்கள் கலைவதாக இல்லை. ஜெயலலிதாவிடம் இந்த விடயத்தைச் சொல்கிறார்கள். ஆனால், ஜெயலலிதா கொஞ்சமும் அஞ்சாமல், அந்தக் கூட்டத்தைப் பார்த்து, "நான் ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும். நான் என்ன தவறாகச் சொல்லிவிட்டேன். நான் தமிழச்சிதான்..!" என்கிறார்.

ஆம். இந்த அசாத்திய தைரியம்தான் ஜெயலலிதா...! அனைவராலும் கைவிடப்பட்டு, எம்.ஜி.ஆர் இறுதி ஊர்வல வாகனத்திலிருந்து கீழே தள்ளிவிடப்பட்டபோதும், அரசியல் வாழ்க்கையில் தனித்துவிடப்பட்டபோதும், இந்தத் தைரியம்தான் தனியனாக அனைத்திலிருந்தும் மீண்டு, மீட்டு, கட்சியை, ஆட்சியைப் பிடிக்க அவருக்கு உதவி இருக்கிறது.

(தொடரும்)

மிகப்பெரிய சந்தர்ப்பம் வாழ்க்கையில் ஒரேயொரு முறைதான் கிடைக்கும். அதை சரியாக பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும். ~ மெகல்லன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வருகின்ற சந்தர்ப்பத்தை தவறவிட்டால் அந்தோ கதிதான்!

தமிழினத்தின் உரிமைகள் விடயத்தில் அனைத்து தமிழ்த் தரப்புக்களும் ஒன்றுபட்டு ஓரணியில் நிற்க வேண்டிய அவசர தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உரிமை என்பது அவர்களின் வாழ்வியலோடு சம்பந்தப்பட்டது. உரிமை கிடைக்காத விடத்து தமிழன் வாழ முடியாது என்பதே பொருளாகும்.

எனவே தமிழ் மக்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும். தமிழ் அரசியல் தரப்புக்கள் தமக்குள் வேறுபட்ட கொள்கைகள் கோட்பாடுகளை கொண்டிருக்கலாம்.

அதற்காக தமிழர்களின் உரிமை என்ற விடயத்தில் நாம் அனைவரும் ஓரணியில் திரண்டு குரல் கொடுக்க வேண்டும்.

வரப்போகின்ற அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்கான உரிமைகள் உறுதி செய்யப்படுகின்றதா? என்பதை மிகவும் உன்னிப்பாக அவதானித்து அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பது காலத்தின் தேவை.

நடைமுறைக்கு வர இருக்கின்ற சீர்திருத்த அரசியலமைப்பு என்பது தமிழ்த் தரப்பின் ஆதரவோடு வெளிவருவது என்ற அங்கீகாரத்துக்குட்பட்டது. இது முன்னைய அரசியலமைப்புக்கு இருக்காத அங்கீகாரத்தைக் கொடுப்பதாக அமையும்.

எனவே சீர்திருத்தப்பட்ட அரசியலமைப்பு அமுலுக்கு வந்த பின்னர், அது தொடர்பில் குறை கூறுவதோ! அன்றி பிழை காண்பதோ! நியாயப்பாடானதாக இருக்காது.

தவிர நாமும் சேர்ந்து தயாரித்த அரசியலமைப்பை பின்னணியில் குறைகூறுவது ஏற்புடையதல்ல என்பது சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடாக இருக்கும்.

ஆகையால் வருகின்ற அரசியலமைப்புத் தொடர்பில் மிகவும் நிதானமாகச் செயற்பட வேண்டியது தமிழ் அரசியல் தரப்புக்களின் தலையாய கடமையாகும்.

இதேவேளை பெரும்பான்மை இன மக்கள் எதிர்ப்பார்கள், அதனால் அரசியலமைப்புச் சீர்திருத்தம் அரங்கேறாமல் போகும் என்றெல்லாம் பயம் கொள்வது வெறும் நடிப்பேயன்றி அதில் வேறு எந்த அர்த்தமும் இருக்க முடியாது.

ஏனெனில் இந்த நாட்டில் இதுகாறும் நடைபெற்று வருவது தமிழ் மக்களுக்கான உரிமை மறுப்பு. அந்த உரிமை மறுப்பை எதிர்த்து தமிழ் மக்கள் போராட்டம் நடத்தினர்.

அப்போராட்டம் சர்வதேச ஆதரவுடன் நசுக்கப்பட்டது. இவ்வாறு தமிழ் மக்களின் போராட்டத்தை முடிவுறுத்தியதென்பது தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்று எவர் நினைத்தாலும் அது இந்த நாட்டுக்கே கேடாகும்.

ஏனெனில் தமிழ் மக்களின் போராட்டத்தை தோற்கடித்தது என்பதும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதும் வேறுபட்ட திசைகளில் பயணிக்கக்கூடிய கோடுகள்

ஆக, தமிழ் மக்களின் போராட்டத்தை முடிவுறுத்தியதென்பதில் ஒரு தரப்பு வெற்றி என்ற பேச்சுக்கே இடமிருக்க முடியாது.

ஆகையால் வெளிவரப்போகின்ற அரசியலமைப்பில் சிங்கள மக்கள் என்ன நினைப்பார்கள், அவர்கள் எதிர்ப்பார்களா? என்ற கேள்விகளுக்கு அறவே இடமிருக்க முடியாது.

மாறாக இந்த நாட்டில் சிங்கள மக்கள் போன்று தமிழ் மக்களும் சம உரிமையோடு, சம அதிகாரத்தோடு வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இதுவே முதன்மையானது. இந்த உண்மையை ஆட்சியாளர்களிடம் எடுத்துரைத்து வலியுறுத்த வேண்டியவர்கள் தமிழ் அரசியல் தரப்பினர்.

ஆனால் நடைமுறையில் அவ்வாறு ஏதேனும் நடப்பதாகத் தெரியவில்லை. ஏதோ அரசியலமைப்பு சீர்திருத்தம் வெளிவந்தால் போதும் என்ற எண்ணத்துடன் தமிழ் அரசியல் தலைமை இருப்பது போன்றே நிலைமை தெரிகிறது.

இத்தகைய நிலைமை தமிழ் மக்களுக்கு பேராபத்து. அந்தப் பேராபத்து என்பது குறுகிய காலத்துடன் அறுபடப் போவதில்லை. காலாகாலமாக அதுவே அனுபவிப்பாக அமையும். எனவேதான் வருகின்ற சந்தர்ப்பத்தை தமிழ் மக்களுக்காகப் பயன்படுத்த தமிழ் அரசியல் தலைமைகளும் நம் புத்திஜீவிகளும் அதிகாரிகளும் ஒன்றுசேர்ந்து ஆராய்ந்து நமக்குச் சாதகமாக ஆக்க வேண்டும். இல்லையேல் எல்லாம் அந்தோகதிதான்.

# புதிய அரசியல் அமைப்பில் பிரேரிக்கப்பட்ட முறையிலே சகல தேர்தல்களும் வேண்டும்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

புதிய அரசியல் அமைப்பின் மூலம் பிரேரிக்கப்பட்ட தேர்தல் முறைமைக்கு அமைவாகவே அடுத்த சகல தேர்தல்களும் நடத்தப்பட வேண்டும். அதற்கான ஆதரவை பாராளுமன்ற பிரதிநிதித்துவ கட்சிகள் அனைத்தும் வழங்கியுள்ளது என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது. எல்லை நிர்ணய ஆணைக்குழு காலம் தாமதிக்காது செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தினுள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டை வினவியபோதே கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் போன்று கலப்பு முறைமை தேர்தலை நடத்தாது மாற்று நடவடிக்கை ஒன்றை கையாள வேண்டும் என்ற அடிப்படையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். அதேபோல் எல்லை நிர்ணயம் முறையாக இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கை சகல கட்சிகளினாலும் முன் வைககப்பட்டது. அதற்கு அமைய சுயாதீன எல்லை நிர்ணய ஆணைக்குழு தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றதாக கூறப்படுகின்றது.

எனினும் சுயாதீன எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் செயற்பாடுகள் காலதாமதம் இன்றி சரியாக உரிய நேரத்தில் முன்வைக்கப்பட வேண்டும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட வேண்டும். ஆகவே இந்த நடவடிக்கைகளில் துரித கதி இருப்பின் மாத்திரமே தேர்தலை சரியாக நடத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## அமைச்சின் செயலாளர் போபகேயிற்கு எதிராக 58 பேர் ஒப்பத்துடன் மகஜர்

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தின் செயற்பாடுகளை பிரச்சினைக்குள்ளாக்கும் ஊடகத்துறை மற்றும் பாராளுமன்ற புனரமைப்பு அமைச்சின் செயலாளர் நிமால் போபகேயை அப்பதவியிலிருந்து நீக்கிவிடுமாறு கோரி, அரசாங்கத்திலுள்ள பின் வரிசை உறுப்பினர்கள் 58 பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர் அரசாங்கத்தின் செயற்பாடுகளை பல தடவைகள் பிரச்சினைக்குள்ளாக்கியுள்ளதாகவும் அவர்கள் அந்த சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-3)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### இதுவும் ஒரு அறச்செயலே

❖ நாணமும், பாதையில் கிடக்கும் தொல்லை தரும் பொருட்களை அப்புறப்படுத்துவதும் இறை நம்பிக்கையின் பகுதிகளாகும்.

❖ இறைதிருப்தியைப் பெறும் நோக்குடன் மனிதன் தன் குடும்பத்தாருக்கு செலவிடுவதையும், ஓர் அறச்செயலாகவே இறைவன் காண்கின்றான்.

❖ அளவில் சிறிதாக இருப்பினும் தொடர்ந்து நிலையாகச் செய்யும் செயல்களையே இறைவன் நேசிக்கின்றான்.

❖ நற்செயல் என்பது நற்குணத்தைப் பெறுவதாகும். எந்தச்செயலை நீ மனதில் நினைத்து அதனை பிறர் அறிவதை விரும்பவில்லையோ அது பாவச்செயலாகும்.

❖ வறுமை மற்றும் துன்பங்களின் போதும் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் நடக்கும் போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்கள் புண்ணியவான்கள்.

❖ இறைவன் எந்த மனிதரையும் அவரது சக்திக்கு அதிகமாக சிரமப்படுத்துவதில்லை. சிரமத்திற்குப் பின்னர் இலகுவை இறைவன் உண்டாக்குவான். உண்மையில் சிரமத்துடன் இலகுவும் இருக்கின்றது.

- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அறியப்படாத ஞானம்

போன வார ஞான இதழிலிருந்து இந்தப் பகுதி உங்களுக்கு நினைவுக்கு வருகிறதா?

குறிப்பு: உங்களுடைய பெயருடன், உங்களுடைய நாட்டு மையத்திற்கு அடுத்தவாரம் எல்லோரும் ஒரு ஞானக்குறிப்பையும் உங்களுடைய செய்திக் கதிரையும் எழுதி அனுப்பவும்.

முந்தைய நாள் இரவு குருஜீ எல்லோரும் தவறவிட்டுவிட்ட ஞானத்தைப் பற்றிக் கொண்டிருந்தார். வழக்கம் போல் இந்த வாரமும் தான் ஞானக்குறிப்பைக் கொடுப்பதை விட மற்றவர்களுடைய ஞானக்குறிப்பைப் படிக்க எதிர்நோக்குவதாகக் கூறினார். மேலும் மக்கள் ஞானத்தாளைப் படிக்கிறார்கள். பிறகு மறந்து விடுகிறார் கள். அதனால் இந்த முறை மக்கள் சொந்தமாக எழுத வேண்டும் என்று விரும்புவதாகவும் சொன்னார்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உங்கள் வீட்டில் லட்சுமி கடாட்சம் பெருக வேண்டுமா?

பணமும் செல்வமும் பெருகி ஓட யாருக்கு தான் ஆசை இருக்காது? சொல்லப் போனால், நம் அனைவருக்கும் அந்த ஆசை இருக்கிறது. நாம் வாழ்வதற்கு பணம் தேவைப் படுவதால், அதனை சம்பாதிப்பதற்காக அன்றாடம் அயராது வேலை பார்க்கிறோம்.

நமது அன்றாட பழக்க வழக்கங்களைப் பொறுத்தே நமது இல்லங்களில் ஸ்ரீதேவி லட்சுமி தேவி குடிகொள்வதும், மூதேவி குடிகொள்வதும் அமைகிறது.

லட்சுமி தேவி என்பவர் பணம் மற்றும் செல்வத்திற்கான கடவுள் என்று நம்பப்படுகிறது. லட்சுமி தேவி குடி கொண்டிருக்கும் வீட்டில் பொன்னும் பொருளும் அருளப் பட்டு, நிறைந்திருக்கும் என நம்பப்படுகிறது.

**லட்சுமி தேவியை ஈர்க்க வீட்டில் செய்யக் கூடியவை**

தினசரி எழுந்ததும் முதலில் நமது உள்ளங்கைகள் அல்லது குழந்தையின் முகம் அல்லது சாமி படங்களை பார்க்கலாம்.

வீட்டில் நாள்தோறும் குறைந்தபட்சம் ஒருமுறையாவது சாமி கும்பிட வேண்டும்.

வாரத்திற்கு இருமுறையாவது வீட்டைக் கழுவி, அப்படியே பூஜை அறையையும் கழுவி, சுத்தம் செய்ய வேண்டும்.

பூஜை அறையில் சாமி படங்களுக்கு தினந்தோறும் பூக்களை படைக்க வேண்டும்.

தினந்தோறும் வீட்டில் விளக்கேற்றி வழிபடுவது, குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் நன்மையைத் தரும்.

பூஜை அறையில் ஏற்றப்படும் தீபங்களை நாமாக அணைக்கக்கூடாது. அது தானாக முழுவதும் எரிந்து அணைதல் நல்லது.

வீட்டின் கதவு மற்றும் நிலைகளில் குங்குமம், மஞ்சள் வைக்க வேண்டும். இதனால், தீய சக்திகள் வீட்டிற்குள் வராது என்பது ஐதீகம்.

பூஜை முடிந்ததும் பெண்கள் நெற்றியிலும், மாங்கல்யத்திலும் குங்குமம் கட்டாயம் வைத்துக்கொள்ள வேண்டும்.

வலம்புரிச் சங்கு வைத்திருக்கும் வீட்டில் வற்றாத செல்வம் வந்து சேரும். அந்தச் சங்கை நாள்தோறும் பயன்படுத்த வேண்டும்.

வீட்டில் துளசி மற்றும் வேப்ப மரம் வளர்ப்பது நல்லது. தினந்தோறும் அதன் அருகிலாவது நாம் சென்று வருவது சிறப்பு.

பூஜை அறையிலோ, வீட்டின் முற்றத்திலோ தெய்வப் படங்களை கிழக்கு நோக்கி வைப்பது நல்லது.

சாமிக்கு இலையில் வைத்துத்தான் உணவு மற்றும் பழங்களை நிவேதனம் செய்ய வேண்டும்.

# ஆதிசக்தி வெற்றி



அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11பேர் கொண்ட மனோகரா சவால் கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் 19.12.2016 நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி வி.கழகத்தை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனீஸ் வி.கழகம் மோதியது.

இப்போட்டியில் ஆதிக்கத்தை செலுத்திய ஆதிசக்தி 10ஆவது நிமிடத்தில் ஒரு கோல் போட்டது.

இதனை அவ் அணியினை சேர்ந்த நாகேந்திரம் பதிவு செய்தார். தொடர்ந்து ஆட்டத்தை சமநிலை செய்ய வேண்டும் எனும் நோக்கோடு அன்ரனீஸ் ஆடியபோதும் எந்தவித கோலினையும் போட முடியவில்லை. இறுதியில் ஆட்ட நேர முடிவில் 01.00 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தி அணி வெற்றி பெற்றது. (க)

# டெசில் ஹெட்ரிக் கோல்

# வடக்கின் வல்லரசன் தொடர் ஜோசப்வாஸ் நகர் ஐக்கியம் வெற்றி

வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் வல்லரசன் உதைபந்தாட்ட தொடரில் (19.12.2016) அன்று இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஜோசப்வாஸ் நகர் ஐக்கியம் விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்டத்தின் 7,9 ஆவது நிமிடங்களில் ஐக்கியம் சார்பாக ஜோன்சன் இரு கோல்களும் 12 ஆவது நிமிடத்தில் டெசில் ஒரு கோலையும் போட முற்பாதியில் 3:0 என ஐக்கியம் முன்னிலை பெற்றது.

தொடர்ந்த இரண்டாம் பாதியிலும் ஆதிக்கத்தை செலுத்திய ஐக்கியம் சார்பாக 27 ஆவது நிமிடத்தில் ஜோன்சன் ஒரு கோலையும் 30, 35ஆவது நிமிடங்களில் டெசில் மேலும் இரு கோல்களைப் போட்டனர்.

பதிலுக்கு நவஜீவன்ஸ் அணியினரின் கோல் போடும் முயற்சிகள் ஏதும் பயனளிக்கவில்லை.



ஆட்டநிறைவில் 6:0 என்ற ரீதியில் ஜோசப்வாஸ் நகர் ஐக்கியம் வெற்றி பெற்றது. சிறப்பான ஆட்டத்தின் மூலம் ஹெட்ரிக் கோல்களைப் போட்ட டெசில் ஆட்டநாயகனாக தெரிவானார். (க)

# யங்ஹென்றிஸ்-சென்.மேரிஸ் சமநிலையில் முடிவுற்றது



வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் வல்லரசன் உதைபந்தாட்ட தொடரில் (19.12.2016) அன்று இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சையில் இறங்கின.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் சமபலமாக மோதியபோதும் ஆட்டத்தின் 18 ஆவது நிமிடத்தில் ஹென்றிஸ் சார்பாக பயஸ்கோல் ஒன்றை போட முதல் பாதி நிறைவடைந்தது. பதிலுக்கு இரண்டாவது பாதியில் 34 ஆவது நிமிடத்தில் மேரிஸ் சார்பாக ஜக்சன் அற்புதமான ஒரு கோல் போட்டு ஆட்டத்தை சமப்படுத்தினர்.

38ஆவது நிமிடத்தில் மேரிஸ் வீரர் சிவப்பு அட்டை மூலம் வெளியேற்றப்பட்டார். எனினும் இரு அணிகளாலும் மேலதிக கோல் எதனையும் பெற முடியவில்லை. இறுதியில் ஆட்டம் 1:1 என சமநிலை ஆனது. ஆட்டத்தைசமநிலைப்படுத்தியஜக்சன்ஆட்டநாயகனாகதெரிவு செய்யப்பட்டார். (க)

# தேசிய ரீதியிலான கராத்தே போட்டி மகாதேவா மாணவர்கள் சாதனை




இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் மகாதேவா சுவாமிகள் இல்ல கராத்தே அணியினர் (கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவர்கள்,புதுமுறிப்பு அ.த.க. பாடசாலை மாணவர்கள்) 6தங்கம்,1 வெள்ளி,3வெண்கலம் உட்பட 10 பதக்கங்கள் பெற்று சாதனை படைத்து கிளி/மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

இவர்களுடன் இல்ல பயிற்றுவிப்பாளர் சென்சே S.விஜயராஜ் மற்றும் இல்ல கராத்தே பொறுப்பாசிரியர் N.ரவிபவன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (க)

# இன்றைய போட்டிகள்,

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11பேர் கொண்ட மனோகரா சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ்விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை ஆதிசக்தி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

* * * *

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் பட்டத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் இன்று இரவு 7.45 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து நடைபெறும் போட்டியில் கில்லறி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அன்னை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

# மனோகரா சவால் கிண்ணம் சென்.நீக்கிலஸ் வெற்றி



அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட மனோகரா சவால் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் (19/12/2016) அன்று இடம்பெற்ற சுப்பர்-8 உதைபந்தாட்ட போட்டியில் சென்.நீக்கிலஸ் வி.கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் வி. கழகம் மோதியது.

முதல்பாதியாட்டத்தில் 17 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் வி.கழக வீரர் கமலி அவர்களுக்கு கோல் போடும் இலகுவான வாய்ப்பினை தவறவிட்டார். முதல் பாதியில் இரு வி.கழகமும் எவ்வித கோல்களும் பெறப்படாத நிலையில் ஆட்டம் நிறைவுற்றது. இரண்டாம் பாதியாட்டம் சமநிலையை நோக்கி சென்றது.

ஆட்டத்தின் 48 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் ரகுவரனின் முறை தவறால் சென்.நீக்கிலஸ் வி.கழகத்துக்கு தண்ட உதைப்பிலான கோல் வாய்ப்பு அவ் வி.க. வீரர் கோல்போட்டு வி.கழகத்தின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியாட்ட நேர முடிவில் 1.0 என்ற கோல் கணக்கில் திரில் வெற்றி பெற்றது நாவாந்துறை சென். நீக்கிலஸ் வி.கழகம். (க)

# பளு தூக்கல் போட்டியில் பங்குபற்றும் மாணவிகளுக்கு நிதியுதவி வழங்கி வைப்பு

வயாவிளான் மத்திய கல்லூரியைச் சேர்ந்த கே.ரஜினா, ரி.லயன்சிகா ஆகிய இரு மாணவிகள் 25-12-2016 தொடக்கம் 30-12-2016 வரை மலேசியாவில் நடைபெறவுள்ள தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான பளு தூக்கல் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

போட்டிகளில் பங்குபற்றவுள்ள அவர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு சிவன் அறக்கட்டளை சார்பில் ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி அதன் இயக்குநரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளருமான கணேஸ்வரன் வேலாயுதத்தினால் வழங்கி வைக்கப்பட்டது.



அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் கே.பகீரதன், பயிற்றுவிப்பாளர் எஸ்.கரிகரன், வல்வை நகரசபையின் முன்னாள் உப தலைவர் சதீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (க)

## நல்லிணக்கத்திற்காக...

ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் பதவியிலிருந்து விடைபெறும் பான் கீ மூன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பிற்பகல் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

தனது பதவியிலிருந்து விடைபெற முன்னர் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்ட பான் கீ மூன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களது தலைமையில் இலங்கை, சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றங்களைப் பாராட்டியதுடன் நல்லிணக்க செயற்பாடுகளுக்கான இலங்கையின் அர்ப்பணிப்பு மிகவும் பாராட்டுக்குரியது எனவும் நல்லிணக்கம் இனங்களுக்கிடையில் முழுமை பெற இலங்கை அரசு தொடர்ந்து ஈடுபட வேண்டும் என வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக கடமையாற்றிய காலத்தில் இலங்கையை புதிய பாதையில் பயணிக்கச் செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் மேற்கொண்ட அர்ப்பணிப்பை பாராட்டிய அவர், ஜனாதிபதியின் தலைமையில் இலங்கை எதிர்காலத்தில் மேலும் பல வெற்றிகளைப் பெறும் எனவும் குறிப்பிட்டார்.

பதவியிலிருந்து விலகிச் சென்றாலும் இலங்கையின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக வழங்கக்கூடிய அனைத்து உதவிகளையும் வழங்குவதாகவும் பான் கீ மூன் இதன் போது உறுதியளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக பான் கீ மூன் அவர்கள் தொடர்ச்சியாக இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பை பாராட்டிய ஜனாதிபதி அவருக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (செ-11)

## தேசிய நல்லி...

ப்பாளர் காமினி வியங்கொட, அதிகாரப் பரவலாக்கலை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியல் யாப்பிற்கு ஆளும் தேசிய அரசாங்கத்திற்குள் அங்கம் வகிக்கும் தரப்புக்களைச் சேர்ந்த சிலரே எதிர்ப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

எனினும் எந்த சவால்கள் வந்தாலும் புதிய அரசியல் யாப்பை நிறைவேற்ற முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட காமினி வியங்கொட புதிய அரசியலமைப்பில் இரண்டு பிரதான விடயங்கள் குறித்து தொடர்ச்சியாக கவனம் செலுத்திவந்திருக்கின்றோம். முதலாவது விடயத்திற்கு நாட்டின் அனைத்து தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். அதுவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் இருக்கும் சர்வாதிகாரங்களை நீக்குதல், அதற்காக மக்களுக்கு பொறுப்பு கூறுகின்ற மக்களின் உரிமைகளை நாடாளுமன்றத்தை பலப்படுத்துதல். இந்த விடயத்துடன் அனைவரும் இணங்கியுள்ளனர்.

இரண்டாவது விடயம் தேசிய நல்லிணக்கத்திற்கு தேவையான அதிகாரத்தை பகிர்தல் தொடர்பில் ஒரு சில பிரிவினர் மத்தியில் வெவ்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இணக்கம் தெரிவித்துள்ளார். நிறைவேற்று ஜனாதிபதி அதிகார முறையால் அவருக்கு எந்தவொரு பயனும் இல்லை. அவரால் மீண்டும் நிறைவேற்று அதிகாரத்தை பெற முடியாது. ஆகவே அதற்கு அவர் ஆதரவு தெரிவிக்கின்றார்.

ஆனால் இரண்டாவது விவகாரமான அதிகாரத்தை பகிரும் விடயம் என வரும் போது அனைவரும் எதிர்க்கின்றனர். பிரிவினைவாதம், தனித் தமிழீழம், மேற்குலக அதிகார வர்க்கத்தின் சதி என அனைத்து குற்றச் சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன. அதன் காரணத்தால் அரசியலமைப்பு உருவாக்குதல் என்ற விடயத்தில் பாரிய சவாலை எதிர்நோக்க நேரிடும் என நாம் கருதுகின்றோம். எனினும் இதனை வெற்றிகொள்வதற்கு உறுதியாக இருக்கின்றோம்.

அதேபோன்று புதிய அரசியலமைப்பு தொடர்பில் நடத்தப்படும் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பிற்கும் நாம் முகம் கொடுக்க வேண்டும். அதனையும் வெற்றிகொள்ள வேண்டும். அதன் ஊடாக இந்த நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்படும் அதேவேளை மீண்டும் யுத்தமொன்றினால் ஏற்படும் அழிவை தவிர்த்து தேசிய நல்லிணக்கமான சூழலை புதிய அரசியலமைப்பில் நாம் உருவாக்க வேண்டும் எனவும் காமினி வியங்கொட தெரிவித்தார். (செ-11)

## சுகாதார, விவசாய...

இந்த பாதீட்டில் சுகாதார அமைச்சு டென்மார்க் நாட்டின் நிதியுதவியை பெற்று பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. 2017 ஆம் ஆண்டுக்கான மூலதன செலவீனமாக 5 ஆயிரத்து 618 மில்லியனும், மண்டுவரும் செலவீனமாக 16 ஆயிரத்து 476 மில்லியனும் வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த தொகையிலேயே மேற்படி ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது. வடக்கு மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான பாதீட்டை முதலமைச்சர் சபையில் சமர்ப்பித்ததனை தொடர்ந்து,

கடந்த மூன்று நாட்களாக ஆளுநருக்கான நிதி, பேரவை செயலகம், பிரதம செயலாளர் அலுவலகம் ஆகியவற்றின் செலவீன தலைப்புக்கள் விவாதிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படன. இதே போன்று முதலமைச்சருடைய அமைச்சுக்கான ஒதுக்கீடுகளுக்கும் நேற்று முன்தினம் சபையினர் அங்கீகாரம் அளித்திருந்தனர். இந்த நிலையில் நேற்றைய 72 ஆவது அமர்வில், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் வரவு செலவு திட்டத்தை அமைச்சர் பொ.ஐங்கரநேசனும்,

சுகாதார அமைச்சுக்கான வரவு செலவு திட்டத்தை அமைச்சர் சத்தியலிங்கமும் அவையில் சமர்ப்பித்தனர். இவற்றின் மீதான விவாதங்கள் குழு நிலையில் இடம்பெற்று பின்னர் சபையின் அங்கீகாரத்திற்கு விடப்பட்டு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. குறித்த இரு அமைச்சுக்களிலும் பாரிய பல புதிய திட்டங்கள் 2017இல் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், சர்வதேச கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளதாகவும் வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும் போது அமைச்சர்கள் கூறியுள்ளனர்.

இந்த விவாதத்தில் சுகாதார அமைச்சர் பல புதிய திட்டங்கள் கொண்டு வந்ததற்காக சபையின் பாராட்டுக்களை தெரிவித்திருந்தனர். மேலும் இன்றைய தினம் வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப அமைச்சு, கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு ஆகிய இரண்டு அமைச்சுக்களின் வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீதான விவாதம் இடம்பெற்றுள்ளது. மேலும் நேற்றைய அமர்வு காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி பிற்பகல் 6 மணிவரை நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## மனித பேரவலம்...

தின் ஏற்பாட்டில் மேற்படி அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

அஞ்சலி நிகழ்வில் உறுப்பினர் சிவாஜிலிங்கம் கூறுகையில்,

சிரியாவின் அலப்பே மியான்மாரின் ரொஹிங்கியா மற்றும் யெமன் தேசங்களிலும் மற்றும் உலகின் மூலைமுடுக்குகளிலும தினமும் மனிதப் பேரவலங்கள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன. 2009களிலே எமது தேசம் எதிர்நோக்கிய மனிதப் பேரவலத்திற்கு ஈடான மற்றுமொரு நிகழ்வாகவே இவை அமைந்திருக்கின்றன. நாம் மிக நவீனமான காலத்தில் வாழ்கின்றோம். உலகை உள்ளங்கைக்குள் பொத்தி பிடிக்கின்ற காலத்தில் வாழ்கின்றோம், சோசியல் மீடியா யுகத்தில் வாழ்கின்றோம். உலகின் எந்த மூலை முடுக்குகளில் நடக்கும் நிகழ்வுகள் உடனுக்குடன் எமக்கு வந்தடைகின்றது. உலக வல்லரசுகள் உலக அமைதிக்காக அயராது உழைக்கின்றார்கள். சர்வதேச சட்டங்களும் உடன்படிக்கைகளும் உலகில் மனித அவலத்தை இல்லாமல் ஆக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரச்சினைகளை இராஜதந்திர ரீதியில் தீர்த்து வைப்பதற்கும் அவற்றை இராஜதந்திர ரீதியில் அணுகுவதற்கும் பல்வேறு முயற்சிகள் நடக்கின்றன. இருந்தும் நாம் இப்போது வாழ்கின்ற உலகில் இவ்வாறான மோசமான நிகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன என்பது மன வேதனையை அளிக்கின்றது. இன, மத, மொழி, நிற, சாதி வேறுபாடுகளுக்கு அப்பால் மனிதமும்

மனிதாபிமானமும் காக்கப்பட வேண்டும் என்பதுவே எம் எல்லோரதும் எதிர்பார்ப்பாகும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக நாம் வாழ்கின்ற இதே காலத்தில் எண்ணிலடங்காத மனித அவலங்கள் தொடர்ந்தும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. உண்மைகளை எடுத்துரைத்து. மனிதாபிமானத்தை காத்து உலக அதிகார போட்டியில் மனிதத்தைப் பலிக்கடாவாக்கும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தி மனித பேரவலங்களை இல்லாமலாக்க உலகம் கரிசனைகொள்ள வேண்டும் என்பதுடன் அதற்கான காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும் என அவர் குறிப்பிட்டிருந்தார். (செ-4)

# ஜனாதிபதி தலைமையில் அரச நத்தார் விழா

(நீர்கொழும்பு)

2016 அரச நத்தார் விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று பிற்பகல் நீர்கொழும்பு, பிரதான வீதி தேவாலய வளாகத்தில் இடம்பெற்றது.

கிறிஸ்து பிறப்பின் மூலம் புதிய மனிதராக இடமளிப்போம் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற அரச நத்தார் விழா பேராயர் அதி வணக்கத்துக்குரிய காடினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் ஆலோசனையில் பக்தி கீதம் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளுடன் இடம்பெற்றது.

தற்போதய சமூகத்திலுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து சமாதானம் மற்றும் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கு நத்தார் பண்டிகை மிகச் சிறந்த வாய்ப்பாகுமென நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்தார்.

சமாதானம், அன்பு மற்றும் நல்லிணக்கமே உலகுக்குத் தேவையானதென சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, நத்தார் உதயத்தினூடாக அவை மேம்பாடடையும் என குறிப்பிட்டதுடன் சகவாழ்வுக்காக கிறிஸ்தவ தர்மம் காட்டும் அர்ப்பணிப்பையும் பாராட்டினார்.

2016 அரச நத்தார் விழாவோடு இணைந்ததாக நாடுதழுவிய ரீதியில் நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்கள் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டன.

நீர்கொழும்பு மீனவ மக்களது பாராட்டைத் தெரிவித்து ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

பேராயர் அதிவணக்கத்துக்குரிய காடினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, இலங்கை அப்போஸ்தல தூதுவர் அதிவணக்கத்துக்குரிய நுயேன் வேன் வொட் ஆண்டகை உள்ளிட்ட மதகுருமார்களும் அமைச்சர் ஜோன் அமரதுங்க, ராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்ணான்டோபுள்ளே, பிரதி அமைச்சர்களான ரஞ்சன் ராமநாயக்கா, நிமல் லன்ஸா மற்றும் பிரதேச மக்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)

## மணல் கட்டணம்...

ணியகம் அறிவித்துள்ளது.

மணல் கியூப் ஒன்றின் அரச விலையை 8 ஆயிரம் ரூபாய் வரையிலும் அதிகரித்து, அரச ஆதாய கட்டணமாக 320 ரூபாயாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்தப் பணியகத்தின் தலைவர் கித்சிறி திஸாநாயக்க தெரிவித்தார்.

மணல் கியூப் ஒன்றின் தற்போதைய அரச விலை 4 ஆயிரம் ரூபாயாகவும், அரச ஆதாய உரிமைக் கட்டணமாக 160 ரூபாயாகவும் காணப்படுவதாக குறிப்பிட்ட அவர், இக்கட்டணமானது 2007ஆம் தொடக்கம் அமுலில் இருந்து வருவதாகவும் தெரிவித்தார். (இ-3)

## பங்கம் ஏற்படின்...

வின் ஊடகப்பேச்சாளர் நிஷாந்த வர்ணசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பெரும்பான்மையான சிங்கள மக்களின் உள்ளத்தை வெற்றிகொள்ளாமல் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வோ வேறு எந்த தீர்வோ பெற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜாதிக ஹெல உறுமயவின் கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (செ-11)

## அரசியலமைப்பு...

பீரிஸ் குற்றம் சாட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உத்தியோகபூர்வ முகப்புத்தக பக்கத்தினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறப்பு அமைச்சு, அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு வெளிநாட்டு நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளமை போன்ற விடயங்களுக்கு நாம் எதிர்ப்பினை வெளிக்காட்டி வருகின்றோம்

அபிவிருத்தி என்ற பேரில் நாட்டை விற்பனை செய்ய முடியாது. இவ்வாறான விடயங்களை நாம் கண்டிக்கின்ற போது எம்மை முடக்க அரசாங்க தரப்பிலுள்ளவர்கள் முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான விடயங்களை நாம் வெளிப்படுத்தி வருகின்ற போது புதிய அரசியலமைப்பு உருவாக்க செயற்பாடுகளை முன்னிலைப்படுத்தி இந்த அரசாங்கம் தம்மால் விடப்படுகின்ற சகல தவறுகளையும் மறைத்துவருகின்றது என பீரிஸ் தனது உரையில் குற்றஞ்சாட்டினார். (செ-11)

## விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் மரணம்

(கோப்பாய்)

மோட்டார் சைக்கிள் – துவிச்சக்கரவண்டி விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த உரும்பிராய் தெற்கினைச் சேர்ந்த சரவணமுத்து சிறிதரன் (வயது 53) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கடந்த 17ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் கோண்டாவில் டிப்போக்கு அண்மையாக இவ் விபத்து இடம்பெற்றிருந்தது. அதிவேகத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டியில் சென்ற குடும்பஸ்தரை பின் பக்கமாக மோதியதிலேயே மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றியிருந்தது.

சிகிச்சை பலனின்றி உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (செ-87,30)

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

(ஹப்புத்தளை)

ஹப்புத்தளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒஹிய உடவேரியா தோட்டதை சேர்ந்த தோட்ட தொழிலாளி ஒருவர் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே நேற்று முன்தினம் மாலை பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

உடவேரியா தோட்டத்தை சேர்ந்த ஆறுமுகம் சுப்ரமணியம் எனும் 32 வயது மதிக்கத்தக்க 04 பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

விறகு சேகரிப்பதற்கென சென்றவர் அங்கு மரத்தின் கிளையொன்றினை வெட்டி இழுக்க முயற்சித்த போது அம் மரக்கிளையானது மின்சாரக் கம்பியில் பட்டதால் உடலில் அதி சக்தி வாய்ந்த மின்சாரம் தாக்கியதால் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த தொழிலாளியின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக பொரலாந்தை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை ஹப்புத்தளை பொலிஸார் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர். (இ-3)

# மாவீரர் தினத்தை...

நேற்றையதினம் பூநகரி வாடியடிச் சந்தியில் அமைந்துள்ள என்றிப் திட்டத்தின் ரூபாய் 14 மில்லியன் நிதி மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ரூபாய் 60 மில்லியன் நிதிப் பங்களிப்பிலும் அமைக்கப் பட்ட புதிய பிரதேச செயலக கட்டடத்திறப்பு விழாவிற்கு வருகைதந்த அவர் வைபவரீதியாக குறித்த கட்டடத் தொகுதியை திறந்து வைத்து அங்கு உரைநிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

சிலர் மாவீரர்தினம் நினைவுகூரப்படுவது தொடர்பில் கவலைப்படுகின்றார்கள். அந்த கவலை தேவையற்றது. வீரர்தினத்தை நாட்டில் பல்வேறாக கொண்டாடுகின்றார்கள். 1971-ம் ஆண்டு, 1987 மற்றும் 1988-ம் ஆண்டுகளில் தெற்கில் இடம்பெற்ற கலவரங்களின் போது ஏற்பட்ட இழப்புக்கள் மற்றும் இறந்தவர்களையும் இன்றுவரை நாட்டில் நினைவுகூருகின்றனர்.

எமது மதத்தின் படி இறந்ததன் பின்னர் அனைத்து உறவுகளுக்கும் மரியாதை செலுத்த வேண்டும். இறந்ததற்குப் பிறகு நல்லவனா கெட்டவனா என்பதெல்லாம் தேவையில்லை. எல்லா மனிதர்களுக்கும் மரியாதை செலுத்த வேண்டும் என்றே எமது மதம் எமக்கு சொல்கிறது.

இந்தப் பிரச்சினைகளை பொலிஸார் மீதோ முப்படைகளின் மீதோ இராணுவ அமைப்புகளின் மீதோ அல்லது அரசியல்வாதிகளின் மீதோ திணிப்பது நல்லதல்ல. உண்மையில நாங்கள் மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும் எனக்கூறி தனது உரையை அமைச்சர் நிறைவு செய்தார்.(செ-281-312)

# வடக்கு விவசாய...

வித்துள்ளார்.

மாகாண விவசாயத் திணைக்களத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்துப் பதவிகளுக்குமான 607 ஆளணியில் தற்போது 404 ஆளணியினரே கடமையாற்றி வருகின்றனர். அதாவது 203 பதவிகள் வெற்றிடங்களாக உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு நாங்கள் மேற்கொண்டுவரும் பகீரத எத்தனங்களையும் மீறி அவை இன்னமும் நிரப்பப்படாமலேயே உள்ளன.

**இலங்கை விவசாய சேவைத் தரத்தினர் (17 வெற்றிடம்)**

இலங்கை விவசாய சேவைக்குரிய உயர் மட்டப் பணிநிலைகளாக மாகாண விவசாயப் பணிப்பாளர், மேலதிக மாகாண விவசாயப் பணிப்பாளர்,பிரதி விவசாயப் பணிப்பாளர்கள், உதவி விவசாயப் பணிப்பாளர்கள் ஆகிய பணிநிலைகள் விளங்குகின்றன.

மாகாண விவசாயத் திணைக்களத்தில் உதவிப்பணிப்பாளர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 14.ஆனால்,இந்தப் பணிநிலையில் இன்று எவருமே நியமனம் பெறவில்லை. பிரதிப் பணிப்பாளர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 06 ஆக இருந்த போதும் 04 உத்தியோகத்தர்கள் மாத்திரமே பணிபுரிகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப்பணிப்பாளருக்கான ஆளணி நிரப்பப்பட முடியாத நிலையில், தற்போது ஒப்பந்த அடிப்படையில் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக மாகாண விவசாயப் பணிப்பாளருக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி ஒன்றாக இருந்தபோதும் அந்த ஒன்று கூட இன்னமும் நிரப்பப்படாமல் வெற்றிடமாகவே நீடிக்கிறது.

இலங்கை விவசாய சேவைத் தரத்தில் மொத்தமாக 24 ஆளணியினர் பணிபுரிய வேண்டிய வடக்கு விவசாயத் திணைக்களத்தில் தற்போது 05 உத்தியோகத்தர்கள் மாத்திரமே எல்லோரது கடமைகளையும் சேர்த்துச் சுமக்கின்றனர்.மாகாண விவசாய அமைச்சின் பணிகளை மாத்திரம் அல்லாது. தேசிய உணவு உற்பத்தித் திட்டம் போன்ற மத்திய அரசின் திட்டங்களையும் இந்தக் குறைந்த ஆளணியின் மூலமே நிறைவேற்ற வேண்டியும் உள்ளது.

விவசாயப்போதனாசிரியர்கள் (58 வெற்றிடம்)

விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்பாடி விரிவாக்க சேவையை முன்னெடுப்பதில் விவசாயப் போதனாசிரியர்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது. அனுமதிக்கப்பட்ட 161 விவசாயப் போதனாசிரியர்களது ஆளணியில் தற்போது 103 விவசாயப் போதனாசிரியர்களே கடமையாற்றி வருகின்றனர். 58 வெற்றிடங்கள் நிலவுகின்றன. இப்பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் கோரப்பட்டுள்ள தகுதியான விவசாய டிப்ளோமாவைப் பூர்த்தி செய்தவிண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாத காரணத்தால் இந்த வெற்றிடங்களை நிரப்பமுடியாத நிலையே நீடிக்கிறது.

இவ்வெற்றிடங்களை ஓரளவு நிவர்த்தி செய்வதற்காக க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞான பாடத்தில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளை விவசாயப் போதனாசிரியர் பயிற்சித்தரம் என்னும் பதவிக்குள் ஆட்சேர்ப்புச் செய்து இலங்கை விவசாயக் கல்லூரிகளுக்கு விடுவித்து விவசாய டிப்ளோமாவை (N.V.Q Level – 6) பூர்த்தி செய்ய வைப்பதன் மூலம் விவசாயப் போதனாசிரியர்களாக நிரந்தர நியமனம் வழங்கப்படுகிறது.

**தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) (110 வெற்றிடம்)**

தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) பதவிக்கு அனுமதிக்கப்பட்ட 140 ஆளணியில் 30 உத்தியோகத்தர்களே கடமையாற்றி வருகின்றனர். இப்பதவிக்கான ஆளணியும் முழுமையாக நிரப்பப்படாமைக்கு விவசாய டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் பற்றாக்குறைவாக இருப்பதே காரணம் ஆகும்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (16 வெற்றிடம்)

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணி 65. இவ்வாளணியில் தற்போது 16 வெற்றிடங்கள் நிலவுகின்றன. திணைக்களத்தின் நிதி, நிர்வாக மற்றும் தொழில்நுட்பக் கடமைகளை வினைத்திறனாக முன்னெடுப்பதில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களது பங்களிப்பு மிகவும்இன்றியமையாதது. வேறு திணைக்களங்களில் விவசாயப் பட்டதாரிகளாக உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை விவசாயத் திணைக்களத்தில் கடமையாற்றுவதற்கு ஏதுவாக விடுவிப்பின் விவசாய அபிவிருத்திச் செயற்பாடுகளை வினைத்திறனாக முன்னெடுத்துச் செல்ல இயலும்.

இவ்வாறாக விவசாயத் திணைக்களம் ஆளணிப் பற்றாக்குறையால் சேவைகளை வழங்குவதில் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டபோதும் தன் சக்திக்கு மீறி உழைத்ததன் காரணமாக கடந்த மூன்று ஆண்டுகளில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில அடைவுகளை எட்டியிருக்கிறது என்பதை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன் என வட மாகாண விவசாய அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். (செ-4)

# சமாதானம், மகி...

ர்பில் ஆழமாக சிந்திப்பதற்கும் காரணமாக அமைகிறது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இவ்வருட நத்தார் பண்டிகையினை முன்னிட்டு நேற்று அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில்,

இரண்டாயிரத்து பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் அறியாமை காரணமாக சமூக சீர்கேடுகள் நிறைந்திருந்த காலத்திலேயே குழந்தை இயேசுவின் பிறப்பு நிகழ்ந்தது.

அந்நாளில் ஏழையின் மாட்டுத் தொழுவத்தை மையமாகக் கொண்டு பிரவாகித்த புதிய மத நோக்கின்பால் ஒளிர்ந்த நட்சத்திரங்கள் அன்று போல் இன்றும் மானிட உன்னதத்தின் வழித்தடமாக மிளிர்கின்றன.

உலகில் வாழ்கின்ற கிறிஸ்தவ மக்கள் அனைவரும் உலகளாவிய விழாவாகக் கொண்டாடும் நத்தார் பண்டிகையில் பெருங் கருணையின் நாதமே ஓங்கி ஒலிக்கிறது.

அன்று ஆணவம் பிடித்திருந்த ஏரோது மன்னன் போன்ற மன்னர்களை வரலாற்றுக்கே மட்டுப்படுத்தி சக வாழ்வின் செய்தியை உலகிற்குக் கொண்டு வந்த இயேசு கிறிஸ்து பிரானை சதா கால புனிதத் தன்மைக்கு உயர்த்தியது. நல்ல விடயங்களை வணக்கத்திற்கு உரியவையாகக் கருதும் உலக மக்களேயாவர்.

அனைவர் மீதும் அன்பைச் செலுத்தும் நத்தார் பண்டிகையின் உண்மையான செய்தியான சமாதானம், மகிழ்ச்சி, கருணை நிறைந்த சிறப்பான நத்தார் இம்முறை அமைய வேண்டும் என அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அனைவருக்கும் சமாதானமும் மகிழ்ச்சியும் நிறைந்த நத்தார் வாழ்த்துக்கள் என தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.(செ-11)

# சர்வதேச நீரியல்...

வடமாகாணத்தின் நீர்வளம், குறிப்பாக யாழ் குடாநாட்டின் நீர்வளம் அதன் அளவிலும் தரத்திலும் வேகமாகக் கீழிறங்கி வருகிறது.

இதனைக் கருத்திற் கொண்டு எமது நீர் வளத்தை மீட்புச் செய்வதற்கு வடக்கு மாகாணத்துக்கான ஒரு நீரியல் கொள்கை ஒன்றின் அவசியம் குறித்துப்பலரும் வலியுறுத்தி வருகின்றார்கள். இதன் அடிப்படையில் வடக்கிற்கான நீரியல் கொள்கை ஒன்றினை உருவாக்கும் முனைப்பில் 2017ஆம் ஆண்டு தை மாதம் 28,29,30ஆம் திகதிகளில் சர்வதேச நீரியல் ஆய்வு மாநாடு ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதியுடன், பிரதிப் பிரதம செயலாளரை(பொறியியல் சேவைகள்) இணைப்பாளராகக் கொண்டு பூர்வாங்க வேலைகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளன. இதில் பிறநாட்டில் இருந்தும் நீரியல் நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இதன் ஒரு முன்னேற்பாடாகவே, விவசாய அமைச்சின் சார்பில் பிரதிப் பிரதம செயலாளரின் (பொறியியல் சேவைகள்) தலைமையில் நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர்கள் இருவர், விவசாயத்திணைக்களத்தின் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் ஒருவர் மற்றும் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் இருவர் அடங்கிய அறுவர் குழுவும், யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து இரு பேராசிரியர்களும் சர்வதேச நீர் ஆராய்ச்சி மையத்தின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற நிலத்தடி நீர் முகாமைத்துவம் தொடர்பான ஐந்து வார காலப் பயிற்சி நெறியில் பங்கேற்றிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது என வடக்கு விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் சபையில் குறிப்பிட்டிருந்தார். (செ-4)


**நாய்க்குட்டி விற்பனை**

2 மாதம் நிரம்பிய பொமேரியன் ஆண் நாய்க்குட்டிகள் (பிறவுண், கறுப்பு) விற்பனைக்குண்டு.

(7120) தொடர்பு: 077 704 1767

**காணியும் வீடும் விற்பனைக்குண்டு**

A9 வீதியில் நுணாவில் சந்திக்கு அண்மையில் 190-ம் கட்டையில் 6 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

(7121) தொடர்பு: 077 491 2596

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

தொழிற்துறைக் கணக்காளர் கற்கை நெறிகள்
aat [Sri Lanka]
[AA1, AA2, AA3
Qualification:- G.C.E O/L 6 Passes
(Medium Tamil & English)

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E O/L Passes with 5 credit passes including mathamatics

பட்டயக்கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accountant Courses
Executive Level & Business Level
(Tamil & English Medium)
Qualification:- G.C.E A/L 3 Passes

Gr 9, Gr 10, & G.C.E O/L English literature Classes

CERTIFICATE COURSE IN ENGLISH

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna
021 222 3382 / 021 222 9149
(C-6812)

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**



பண்டிகைக் காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட

021 221 5656
070 330 5500

அண்ணா & கோ (C-6822)
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

**V2 TRAVELS**

குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.

- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா(UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

(C-6756)

தொடர்புகளுக்கு: 0768226236
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

திருமணம், பூப்புனித நீராட்டு, பிறந்தநாள் விழா
**Video Editing**
யாழ்-நல்லூரில் Full Pack-Group Class

10 Days 20 Hours

Adobe Premiere CC, Edius 7, Adobe After Effect, Video Plug-ings, Looks, Adorage filter, New Blue Skin Touch-up, Video Color Tune-up, Gold Make-up, Song Editing Technic, Blu-ray Burning

மேலும் விபரங்களிற்கு உங்கள் பெயரை SMS செய்க 0771330930

**Vacancy for Naturalist**

Requirements

1)Sound Knowledge of fauna and flora of Sri lanka
2)Keen eye and interest in birds and wild life.
3)English knowledge
4)Age below 40

(7114)

Send your CVs to : hr@thethinnai.com
Call us on : 076 752 8628
The Thinnai
No.86, Palaly Road, Jaffna.



**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், சுற்றுமதில் கட்டுதல், குளியலறை கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சு வேலைகள் என்பவற்றுடன் Plumbing, Painting, Electrical works அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.

AXSHAYA CONSTRUCTION, JAFFNA

தொடர்புகளுக்கு:- 0776679564 (J.K.VASAN) E.mail:-axshaya construction@gmail.com (C-6793)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.